www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

1-15 அக்டோபர் 85

4-22


விலை ரூ. 1-50

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு




படிப்பகம்

www.padippakam.com




# தஞ்சை போலீசாரின் புதிய சட்டம்!

சாராய சாம்ராஜ்ஜியத்தைத் தகர்த்துவிட்டோம் என்று முதல்வர் கருணாநிதி மார்தட்டிக் கொண்டாலும், கள்ளச் சாராயத்தை ஒழித்தே தீருவேன் என்று ஐ.ஜி. தேவாரம் தொடையைத் தட்டிக்கொண்டு மீசையை முறுக்கினாலும் தடுக்கி விழுந்தால் சாராயக் கடையில்தான் விழவேண்டும் - இதுதான் தமிழகத்தின் நிலை. கள்ளச்சாராயத் தொழிலை உரம்போட்டு வளர்ப்பது காவல் துறை கயவாளிகள்தான் என்பது யாவரும் அறிந்த உண்மை. இதையே தஞ்சை கீழவாசல் போலீஸ் நிலையத்தில் இன்னும் ஒருபடி மேலே போய் 'அவர்களது சட்டப்படி' செய்ய ஆரம்பித்துள்ளனர்.

தஞ்சை கீழவாசல் - ராவுத்தா பாளையம் குடிசைகள் நிறைந்த பாமர மக்கள் வாழும் பகுதி. கள்ளச் சாராய விற்பனையில் தஞ்சையின் முக்கிய இடங்களில் இதுவும் ஒன்று. இப்பகுதியில் ம.க.இ.க. தோழர் அருள், கள்ளச்சாராய விற்பனையை தொடர்ச்சியாக எதிர்த்து வந்தார். அதோடு கடந்த மாதம் தஞ்சை காவல் துறை துணை கண்காணிப்பாளருக்கு இதுபற்றி ஒரு புகார் மனுவையும் அனுப்பினார். இவருடைய தொடர்ச்சியான எதிர்ப்பு சாராய வியாபாரிகளுக்கு பெரும் தலைவலியாக இருந்தது.

கடந்த 8.9.89 அன்று அப்பகுதியில் சாராயம் விற்கக்கூடாது என்ற அறிவிப்பை ஒரு தட்டியில் எழுதித் தொங்கவிட்டார் தோழர் அருள். இதனால் பெரிதும் ஆத்திரமடைந்த சாராய வியாபாரிகள் ஒன்றுசேர்ந்து சாராயக்கடையில் எடுபிடியாக வேலைசெய்யும் சொக்கன் என்ற சொக்கலிங்கத்தை போதையேற்றி, ம.க.இ.க. தோழர் வீட்டில் வந்து வம்பிழுத்து கத்தியால் குத்தும்படி ஏவியுள்ளனர். அதன்படி எடுபிடி சொக்கனும் தோழர் வீட்டுக்கு வந்து கத்தியைக் காட்டி வம்பிழுத்தான். "யாருடா சாராயம் விக்கக்கூடாதுன்னு சொல்றவன்? போலீசுக்கு மாசம் 2000 ரூவா மாமூல் கட்டி சாராயம் விக்கிறோம்; விக்கக்கூடாதுன்னு சொல்ல நீ யாருடா?" என்று வம்பிழுத்து, எழுதக் கூசும் வார்த்தைகளால் திட்டியிருக்கிறான். இதனிடையே சௌரி என்ற இன்னொரு ம.க.இ.க. ஆதரவாளரும் பிறரும் கூடி தகராறு செய்த சொக்கனிடமிருந்து கத்தியைப் பிடுங்கிக் கொண்டு அவனை எச்சரித்து விரட்டினர்.

இந்நிலையில் சாராய வியாபாரிகள், போலீசுடனான தங்கள் நெருக்கமான உறவை நிரூபிக்க முடிவு செய்து, சொக்கனை தனது உடலில் பிளேடால் கீறிக் கொள்ளச் செய்து மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று, அப்படியே கீழவாசல் போலீஸ் நிலையத்தில் தோழர்கள் அருள், சௌரி ஆகியோர் 'தன்னை கேவலமாக பேசி பிளேடால் கிழித்துக் காயப்படுத்தியதாக' ஒரு புகாரையும் கொடுத்துவிட்டனர்.

கள்ளச் சாராய வியாபாரிகளின் எச்சில் காசில் வயிறு வளர்க்கும் போலீசார் உடனே தோழர்களைக் கைது செய்தனர். போலீஸ் நிலையத்தில் தோழர் அருள் நடந்த சம்பவத்தை விளக்கி ஒரு புகாராக எழுதிக் கொடுத்தும்கூட நடவடிக்கை எடுக்காமல், சாராய வியாபாரிகளின் ஆலோசனைப்படி, 324 வது பிரிவின்படி வழக்கைப் பதிவுசெய்து தோழர்களைச் சிறைக்கு அனுப்பியது போலீசு. அதன்பிறகு தோழர்களை ஜாமீனில் விடுவித்தது தஞ்சை ம.க.இ.க.

பின்னர், பொய் வழக்கு போட்ட போலீசாரை எதிர்த்து தஞ்சை கீழவாசலில் 18.9.89 அன்று ம.க.இ.க. பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் காளியப்பன், துரை மாணிக்கம் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

முன்னிரவில் நமது விளம்பர தட்டியை போலீசார் திருடிச் சென்றனர். கூட்டத்திற்கு அனுமதி தரவும் மறுத்தனர். பின்னர் மாவட்ட போலீஸ் அதிகாரியிடம் அனுமதி வாங்கி கூட்டம் நடத்தப்பட்டது.

கள்ளச்சாராய வியாபாரம் குற்றமல்ல; அதைத் தடுப்பதுதான் குற்றம்! - இதுதான் தஞ்சை கீழவாசல் போலீஸ் நிலையத்தின் புதிய சட்டம்!

இனி கள்ளச் சாராயத்தை ஒழிக்க வேண்டுமென்றால் முதலில் சாராய வியாபாரிகளின் பங்காளிகளும் பாதுகாவலர்களுமான போலீசுக்கு எதிராகப் போராட வேண்டும் - இதுதான் போலீஸ்துறை மக்களுக்கு எதிர்மறையில் கற்றுத்தரும் பாடம். கற்றுக் கொள்ளவேண்டிய நல்ல பாடம்தான்!

— மக்கள் கலை இலக்கியக்கழகம்,
தஞ்சை கிளை



## சாராய சீரழிவுக்கு எதிராக...

தமிழக மக்களை குடிபோதையில் சீரழிக்க, பீர் உற்பத்தி ஆலையை நடத்தவுள்ள கருணாநிதி அரசை எதிர்த்தும், பிராந்திக் கடைகளை உடனே மூடக் கோரியும், ஓட்டுக் கட்சிகள் - போலீஸ் துணையுடன் நடைபெறும் கள்ளச் சாராய வியாபாரத்தை ஒழிக்கக் கோரியும் மக்கள் கலை இலக்கியக் கழகம், திருச்சி கிளை எழுச்சிமிகு ஊர்வலம் - ஆர்ப்பாட்டத்தை 16.9.89 அன்று நடத்தியது. தோழர் கபிலன் தலைமையில், சிந்தாமணி அண்ணா சிலை அருகிலிருந்து புறப்பட்ட ஊர்வலம் ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்துகொண்டு தெப்பக்குளம் தபால் நிலையத்தைச் சென்றடைந்தது. அங்கு விண்ணதிர முழக்கங்களுடன் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தின் முடிவில் தோழர் தமிழ்மணி சிறப்புரையாற்றினார். இந்த ஊர்வலமும் ஆர்ப்பாட்டமும் மக்கள் மத்தியில் சிறந்ததொரு தாக்கத்தை ஏற்படுத்துவதாக அமைந்தது.

— மக்கள் கலை இலக்கியக்கழகம்,
திருச்சி கிளை

## கோரிக்கைகளை விளக்கி பிரச்சார இயக்கம்

விவசாயிகள் விடுதலை முன்னணியின் சார்பில் ராஜீவ் காந்தியின் மோசடியான பஞ்சாயத்து ராஜ்ஜவஹர் வேலைத் திட்டத்தை அம்பலப் படுத்தியும்;

அத்தியாவசியப் பொருள்களுக்கு நியாயமான ஒரே விலையை தீர்மானிக்கவும், நியாயவிலைக் கடைகளில் அனைத்துப் பொருள்களும் தட்டுப்பாடு இன்றி தாராளமாக கிடைக்க ஏற்பாடு செய்ய வலியுறுத்தியும்,

அனைத்துக் கூலி, ஏழை நடுத்தர விவசாயிகளுக்கு மானியத்துடன் கடன் வழங்க கோரியும் இக்கோரிக்கைகளை நிறைவேற்ற தமிழக அரசை வலியுறுத்தியும் பட்டுக்கோட்டை தாலுக்கா முழுவதும் தொடர் பிரச்சார இயக்கம் கடந்த 21.9.89 முதல் 3.10.89 வரை நடைபெற உள்ளது. கடந்த 21.9.89 வியாழன் மாலை அதிராம்பட்டினம் பேருந்து நிலையத்திடலில் தோழர் இராஜமாணிக்கம் தலைமையிலும், 22.9.89 வெள்ளி தம்பிக் கோட்டை முக்கூட்டுச்சாலையில் தோழர் சிவாஜி நடராசன் தலைமையில் பொதுக்கூட்டங்கள் சிறப்பாக நடைபெற்றது. வட்டார அமைப்பாளர் தோழர் சந்திரசேகரன், தஞ்சை காளியப்பன் (ம.க.இ.க) திருச்சி தமிழ்மணி(ம.க.இ.க. துரைமாணிக்கம்(திருவோணம் ஒன்றிய அமைப்பாளர்) ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். இதன் தொடர்ச்சியாக கிராமம் தோறும் சைக்கிள் பிரச்சாரம் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது.

விவசாயிகள் விடுதலை முன்னணி
பட்டுக்கோட்டை வட்டக்கிளை.



படிப்பகம்

புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு

நான்காமாண்டு

22

1-15 அக்டோபர் '89

உள்நாடு:
தனி இதழ்: ரூ.1-50
ஆண்டு சந்தா: ரூ.36

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US $ 11

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்



எஸ்.மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப்பேட்டை
சென்னை - 600 015


www.padippakam.com

அத்தியாவசியப் பொருட்கள் விலையேற்றமும் தட்டுப்பாடும்:

# இன்னுமொரு பொருளாதாரத் தாக்குதல்

சர்க்கரை இனிப்பானதுதான்; ஆனால் அது இன்று கசப்பான பொருளாகிவிட்டது. கடந்த பத்தாண்டுகளில் இதுவரை காணாத அளவுக்கு ஏறத்தாழ 50%க்கும் அதிகமாக விலை உயர்ந்து ஒரு கிலோ 10 ரூபாய்க்கும் மேல் விற்கப்படுகிறது. நியாய விலைக்கடைகளில் சர்க்கரை மட்டுமின்றி அரிசி, கோதுமை, பாமாயில், மண்ணெண்ணெ முதலான எந்த அத்தியாவசியப் பொருளும் கிடைப்பதில்லை. குழந்தைக்குப் பாலில்லையே என்று ஏழைத் தாய்மார்கள் வெந்நீரில் சர்க்கரை கலந்து புகட்டக்கூட முடியாமல் பாசிச ராஜீவ் கும்பல் அதையும் தட்டிப் பறித்து மீண்டும் ஒரு பொருளாதாரத் தாக்குதலை நடத்தியுள்ளது.

வறட்சியின் காரணமாக கரும்பு உற்பத்தி குறைந்து போனதாலும், வங்கதேசம், நேபாளம், பாகிஸ்தான் ஆகிய அண்டை நாடுகளுக்கு ஏறத்தாழ 7 லட்சம் டன் சர்க்கரை கடத்தப்பட்டதாலும் தட்டுப்பாடு ஏற்பட்டு விலையேற்றம் நிகழ்ந்துள்ளதாக அரசே ஒப்புக் கொள்கிறது. குறிப்பாக, நேபாளத்தின் மீது இந்திய அரசு பொருளாதாரத் தடைகளை விதித்த பிறகு கடத்தலும் பதுக்கலும் பெருகி, கடத்தல் மையங்களான கல்கத்தா, கோரக்பூர் மற்றும் குஜராத் மாநிலத்தின் கடற்கரை நகரங்களில் இரு மாதங்களுக்கு முன்னரே சர்க்கரை ஒரு கிலோ ரூ.30க்கும் மேலாக விற்கப்பட்டது. கரும்பு உற்பத்தியைப் பெருக்கவோ, கடத்தலையும் பதுக்கலையும் தடுக்கவோ வக்கற்ற அரசு, விலையேற்றத்தை வேடிக்கைப் பார்த்துக் கொண்டு இருந்துவிட்டு, தும்பைவிட்டு வாலைப் பிடித்த கதையாக இப்போது வெளிநாட்டிலிருந்து மிக அதிக விலை கொடுத்து இறக்குமதி செய்து தட்டுப்பாட்டை நீக்கப் போவதாக அறிவித்துள்ளது.

பண்டிகை நெருங்கும் நேரத்தில் சர்க்கரை விலை உயர்வு மற்றும் தட்டுப்பாட்டினால் மக்களிடம் வெறுப்பும் அதிருப்தியும் பெருகுவதைக் கண்ட பீதியில் அவசரமாக சர்க்கரை ஆலை அதிபர்களையும், மொத்த வியாபாரிகள் சங்கப் பிரதிநிதிகளையும் அழைத்து விலைக் குறைப்புக்கான பேச்சுவார்த்தைகள் நடத்தினார், மத்திய மந்திரி துணை மந்திரி சுக்ராம். கடைசியில், அவர்களுக்கு ஏராளமான சலுகைகள் கொடுத்து விலையை தற்காலிகமாகக் குறைப்பது என்று பேரம் முடிந்து நாடு தழுவிய ரீதியில் ஒரே சீராக ஒரு கிலோ சர்க்கரை ரூ.9க்கு கிடைக்குமாறு கட்டுப்பாடு விதிப்பது என்றும் இதன்படி விலைக் குறைப்பு செய்யாவிடில் மொத்த வியாபாரிகளின் பெர்மிட்டுகளை ரத்து செய்து விடுமாறும் மாநில அரசுகளுக்கு மத்திய அரசு உத்திரவிட்டது.

ஆனால் இன்றுவரை சர்க்கரை விலை குறையவில்லை. அரசின் நிர்பந்தம் காரணமாக தற்காலிகமாக விலைகுறைப்பு செய்ய மொத்த வியாபாரிகள் ஒப்புக் கொண்டாலும் பண்டிகை காலத்தைக் கணக்கிட்டு இப்போதே பதுக்கத் தொடங்கிவிட்டனர். அரசு நடத்தியுள்ள பேரத்தின்படி இந்த விலைக் குறைப்பு நாடகம் கூட செப்.23 முதல் நவம்.15 முடிய உள்ள பண்டிகைக் காலம் வரைதான். அதன்பிறகு விரும்பிய விலைக்கு விற்று மொத்த வியாபாரிகளும், ஆலை அதிபர்களும் கொள்ளையடிக்கலாம் என்பதுதான் எழுதப்படாத ஒப்பந்தம்.

வெளிநாட்டிலிருந்து கூடுதல் விலை கொடுத்து 2 லட்சம் டன் சர்க்கரையை இறக்குமதி செய்து சேமித்து வைப்பது என்ற கோமாளித்தனமான தீர்வை ராஜீவ் கும்பல் மேற்கொண்டுள்ளதால் ''அன்னிய செலாவணி விரயமாகி பொருளாதார நெருக்கடி முற்றும்; ராஜீவ் அரசின் நிலை குலைந்த நிர்வாகத் திறனையே இது காட்டுகிறது'' என்று முதலாளித்துவ பொருளாதார வாதிகளே சாடுகின்றனர். இதில் கொடுமை என்னவென்றால், சர்க்கரை இறக்குமதி பேரத்திலும் மந்திரிப் பிரதானிகள் ராஜீவின் வழியில் கமிஷன் பெற்று கொள்ளையடித்துள்ளனர்.

சர்க்கரை மட்டுமின்றி அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் விலையேறி, நியாய விலைக் கடைகளில் எதுவுமே இல்லை என்கிற அளவுக்கு பாசிச ராஜீவ் அரசின் நிர்வாகம் சீரழிந்து கிடக்கிறது. எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு முறையாக அத்தியாவசியப் பொருட்களை விநியோகிக்காமல் இழுத்தடித்து, மாநில அரசுகளின் நிர்வாகம் சீர்குலைந்து விட்டதாக பழியைப் போட்டு அரசியல் ஆதாயம் தேடுவதை ராஜீவ் கும்பல் வழமையாகக் கொண்டுள்ளது. ஒதுக்கீடு செய்யப்படும் அரிசியைக் கூட பயன்படுத்த முடியாதபடி புழுபுழுத்ததாக உள்ளது என்று மே.வங்க 'மார்க்சிஸ்டு' ஆட்சியாளர்கள் குற்றம் சாட்டுகின்றனர். தமிழகத்துக்கு உரிய ஒதுக்கீட்டை அளிக்காததை எதிர்க்கும் கருணாநிதி, பிற மாநிலங்களிலிருந்து அரிசி இறக்குமதி செய்யப் போவதாக கூறுகிறார்.

இருப்பினும், ராஜீவ் அரசுக்கெதிராக கடுதாசிப் போரிலிருந்து கடையடைப்பு, உண்ணாவிரதப் போராட்டம் வரை அனைத்தையும் மேற்கொள்ளப் போவதாக எதிர்க்கட்சிகள் அறிவித்துள்ளன. ''எதிர் போராட்டம் நடத்தி அவற்றை முறியடிப்போம்!'' என்கின்றன பாசிச காங்கிரசும் அதன் தோழமைக் கட்சிகளும். சடங்குத்தனமான சாத்வீக போராட்டங்கள் விலையேற்றத்தைத் தடுக்காது. ஆனால் இந்த வரம்புக்குமேல் போக ஓட்டுப் பொறுக்கிகள் தயாராகவும் இல்லை. வேறொரு பிரச்சினை முன்னனிக்கு வரும்போது, மக்களின் வாழ்க்கை நிலைமை பற்றிய பிரச்சினையைக் கிடப்பில் போட்டுவிட்டு ஓடிப்போவார்கள்.

எனவே பாசிச ராஜீவ் கும்பலுக்கு எதிராக புரட்சிகர அமைப்புகளில் மக்கள் திரண்டு இத்தகு பொருளாதாரத் தாக்குதல்களை எதிர்த்து முறியடிக்க வேண்டும். விலையேற்றத்துக்கு எதிரான போராட்டங்களை பாசிச எதிர்ப்பு போராட்டங்களோடு இணைக்க வேண்டும்.

படிப்பகம்

உழைப்புக்கான இடத்தில குடியிருப்புகளை கட்டித் தருவது அரசின் கடமை; அடிப்படை உரிமை. ஆனால் இவ்வுலகின் மாபெரும் 'ஜனநாயக' இந்திய நாட்டின் குடிமக்களுக்கு உழைப்புக்கான உத்திரவாதமும் இல்லை; உயிர் வாழ்வதற்கான உரிமையும் இல்லை. குடியிருப்பதற்குமான இடமுமில்லை. 42 வருட கால 'சுதந்திர' இந்தியாவில் 250 லட்சம் மக்களுக்கு குடியிருப்பு இல்லை. இன்னும் 10 ஆண்டுகளுக்குள் இது 400 லட்சமாக உயரும். அதாவது 20 ஆம் நூற்றாண்டு இறுதிக்குள் இந்தியாவின் நகர்புறங்களில் 66 சதவிகிதத்திற்கும் அதிகமான மக்கள் வீடற்றோர் ஆக்கப்படுவார்கள்.

தற்போது குடியிருப்பு வசதி பெற்றோர் பட்டியலில் இருக்கும் நகர்புற மக்களில் 44 சதவிகித குடும்பங்கள் ஒரே ஒரு அறையை மட்டுமே குடியிருப்புகளாகக் கொண்டுள்ளன. சென்னை, பம்டாய், டெல்லி, கல்கத்தா போன்ற நான்கு பெருநகரங்களில் 70 சதவிகிதம் மக்களுக்கு குடும்பத்துக்கு ஒரு அறை என்ற விகிதத்தில் தான் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இந்நகரங்களில் வாழும் 37 சதவிகிதம் மக்கள் வாழத் தகுதியற்ற சேரிகளில் பன்றிகளோடு பன்றிகளாய் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த சேரிகளில் வாழும் 130 லட்சம் குழந்தைகளின் எதிர்க்காலம் இருண்டு கிடக்கிறது. கல்வி இல்லை. சுகாதாரம் இல்லை. உணவு இல்லை. இங்கு சிறுமிகளை விபச்சாரத்திற்கு பயன்படுத்துவதும், சிறுவர்களை சிறு குற்றங்களில் ஈடுபடுத்துவதும் அதிகரித்து வருகிறது. காசநோயும், தொழுநோயும் இவர்களிடம் பெருகி வருகிறது. சேரிகளிலும், நடைபாதைகளிலும் வசிக்கும் இலட்சோப இலட்ச உழைப்பாளி பெண்கள் தங்களுடைய அந்தரங்கமான இல்லற வாழ்க்கை, வேடிக்கை காட்சியாக இருப்பதைக் கண்டு உடைந்து போகிறார்கள்.

மறுபுறம் கோட்டை கொத்தளங்கள் போல் உலகத்தையே தங்கள் பிரமாண்டமான மாளிகைகளுக்குள் நிர்மாணித்துக் கொண்டு வாழும் ஊதாரிக் கூட்டம். பெல்ஜியம் கண்ணாடி அறைகளில் இத்தாலி ஓடுகள் பதிக்கப்பட்ட குடில்களில் படுத்து புரளும் கருப்புப் பண புள்ளிகள். இவர்கள் குடியிருப்புக்களை அல்ல நகரங்களையே மொத்தமாக விலை பேசுகிறார்கள்; வளைத்துக் கொள்கிறார்கள். 40 சதவிகித மக்கள் பம்பாய் நகரத்தில் வீடற்று கிடக்கும் போது, அந்நகரத்தின் 55 சதவிகித நிலம் 5 சதம் மட்டுமே ஆன கறுப்புப் பண பேர்வழிகளின் உடமையாக மாறிவிட்டது. இந்தியாவின் பெருநகரங்கள் அனைத்தும் இன்று இதுதான் நிலைமை.

# நகரங்களை வளைத்து போடும் நில முதலைகள்!

கறுப்புப் பணத்தைத் தங்கக் காசுகளாக மாற்றி புதைத்து வைப்பதா, நகைகளாக்கி பெண்டாட்டிகள், வைப்பாட்டிகள், வளர்ப்பு நாய்கள் கழுத்தில் மாட்டி வைப்பதா, நோட்டுக் கத்தைகளாக மெத்தையில் தைத்து வைப்பதா என்ற குழப்பங்களிலிருந்து பண முதலைகளுக்கு விடுதலை கிடைத்துவிட்டது. மேற்கூறிய முறைகளில் கறுப்புப் பணத்தைப் பாதுகாக்க மட்டும் தான் முடியும். கறுப்புப் பணத்தை பாதுகாப்புடன் குட்டிபோடவும் வைக்கும் முறைஎய இப்போது கண்டுபிடித்து விட்டார்கள்.

பிரபல கடத்தல் பேர்வழியான பம்பாயைச் சேர்ந்த யூசுப் படேல் சிறையிலிருக்கும்போது ஹாஜி மஸ்தானுக்கு ஒரு ஆலோசனை கூறினானாம். "நாம் இந்த கடத்தல் தொழிலை விட்டுவிடுவோம். அநாவசிய தொல்லைகள் எதுவும் இல்லாமல் இதைவிட பல மடங்கு அதிகமாக லாபம் சம்பாதிக்க்க கூடியது ரியல்எஸ்டேட் தொழில்தான். பணத்துக்குப் பணமும் கிடைக்கும்; சமூக அந்தஸ்தும் கிடைக்கும்"

இருவருமே இந்தத் தொழிலுக்கு வந்துவிட்டார்கள். மஸ்தான் மட்டுமல்ல; டாடா, பிர்லா, அம்பானி, வாடியா போன்ற தரகு முதலாளிகள், அதிகாரவர்க்கத்தினர், ஓட்டுக்கட்சி அரசியல்வாதிகள் ஆகிய அனைவருமே நகர்ப்புறத்தின் ஒவ்வொரு சதுர அடி நிலத்தையும் தம் கழுகுக் கண்களால் அளந்து கொண்டிருக்கிறார்கள்.

இரண்டாண்டுகளுக்கு முந்தைய நிதியமைச்சக் கணக்கெடுப்பின்படி ஒவ்வொரு ஆண்டும் இந்தத்தொழிலில்புழங்கும் கறுப்புப் பணம் மட்டும் 2000 கோடி ரூபாய். அரசின் புள்ளிவிபரம் இது என்றால் இதன் உண்மையான அளவை நாம் ஊகித்துக் கொள்ள வேண்டியதுதான். கிராமப்புறத்தில் கூர்மையாகிவரும் வர்க்க முரண்பாடுகளையும், மோதல்களையும் தடுக்கவும், திசைதிருப்பவும் நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் கொண்டு வந்ததைப் போல நகர்ப்புறப் பண முதலைகளைக் கட்டுப்படுத்துகிறோம் என்று நாடகமாட "நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம்" 1976ல் கொண்டுவரப்பட்டது. நிலத்தை இழந்து, வீட்டை இழந்து வாழ்க்கையைத் தேடி ஒவ்வொரு ஆண்டும் நகர்ப்புறத்தை நோக்கி வரும் மக்களின் எண்ணிக்கை 5 கோடி. இவர்கள் அனைவருக்கும் நகரத்தில் வேலை கிடைப்பது இருக்கட்டும். முதலில் குந்தக் குடிசை வேண்டும். சாக்கடை ஓரங்களும், நடைபாதைகளும் தான் இவர்களுக்கு நகரத்தில் விட்டுவைக்கப்பட்டுள்ள இருப்பிடங்கள். அவையும்கூட நிச்சயமற்றவை.

நகர்ப்புற நில உச்சவரம்பு சட்டதிட்டங்கள் அனைத்துமே ஓட்டுப் பொறுக்கி கட்சிகளும், அதிகார வர்க்கமும் கோடிக்கணக்கில் கொள்ளை அடிக்கவும், பெரு நகரங்களில் பெரு முதலாளிகளின் பிடி இறுகுவதற்குமே பயன்பட்டிருக்கின்றன. சென்னை, பம்பாய், டில்லி, கல்கத்தா போன்ற பெரு நகரங்களின் ஒவ்வொரு சதுர அடி நிலமும் தமக்கேயுரிய ஊழல் புராணத்தைச் சுமந்து கொண்டிருக்கின்றன.

பம்பாய்: இந்தியத் தரகு முதலாளிகளின் தலைமையிடம். மா∴பியா கும்பல்களின் சொர்க்கம். ரியல் எஸ்டேட் ஊழலில்கூட பம்பாய்க்குத்தான் முதலிடம். மகாராஷ்டிர காங்கிரஸ் முதல்வர் சரத்பவாரின் ரியல் எஸ்டேட் ஊழல் இதுவரை நாம் அறிந்த ஊழல் விவகாரங்கள் அனைத்தையும் விழுங்கி ஏப்பம் விட்டுவிட்டது. காதும்காதும் வைத்தாற் போல பல கோடி ரூபாய்களை சரத்பவார் விழுங்கிய கதையைப் புரிந்துகொள்ள வேண்டுமானால் சில விவரங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும். (பார்க்க பெட்டிச் செய்தி).

பெருகிவரும் மக்கட் தொகையாலும், மனைகளின் விலை உயர்வாலும் மக்களின் அடிப்படைத் தேவைகளான மருத்துவமனைகள், பள்ளிகள், குடியிருப்புகள் ஆகியவற்றைக் கட்டுவதற்கு நகரின் மையப்பகுதியில் இடமே இல்லை என்ற நிலை பம்பாயில் உருவானது.

இந்த நிலைமையை மாற்றவும் மருத்துவமனைகள், குடியிருப்புக்கள், பூங்காக்கள், பள்ளிகள் ஆகியவற்றைக் கட்டுவதற்கும் 1981இல் ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. அத்திட்டத்தின் அடிப்படையில் நகரின் மையப் பகுதிகளில் உள்ள சில தனியார், முதலாளிகளுக்குச் சொந்தமான காலிமனைகள் மற்றும் கட்டிடங்களைக் குறிப்பிட்டு அவற்றை உரிய விலை கொடுத்து அரசு எடுத்துக் கொள்ளும் என்றும், அதுவரை அந்த இடங்களை வேறு யாருக்கும் விற்பதோ, வேறு கட்டிடங்கள் கட்டுவதோ கூடாது என்றும் உத்திரவிட்டது அரசு. நகர்ப்புற மேம்பாட்டுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்கள் என்று இவை அழைக்கப்பட்டன. இவ்வாறு ஒதுக்கப்பட்ட மனைகள் எத்தனை என்று அதிகாரபூர்வமாக அரசு இன்றுவரை அறிவிக்கவில்லை. இவ்வாறு ஒதுக்கப்பட்ட 577 இடங்களை மீண்டும் அவர்களிடமே



www.padippakam.com
படிப்பகம்

திருப்பி ஒப்படைத்துவிட்டது பவார் அரசு. ஒதுக்கப்பட்ட நிலங்களை மீண்டும் திருப்பித் தருதல் என்ற பெயரில் சட்டவிரோதமாக பல மாடிக் கட்டிடங்கள் கட்ட அனுமதிக்கப்படுகின்றன என்றும், அவ்வாறு கட்டப்படும் பல மாடிக்கட்டிடம் ஒன்றை தடுத்து நிறுத்த வேண்டுமென்றும் பம்பாய் உயர்நீதிமன்றத்தில் தடை உத்தரவு வாங்கியது பம்பாய் சுற்றுச்சூழல் பாதுகாப்புக் கழகம். இது குறித்த விவரங்களைத் தாக்கல் செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. பவார் அரசு தவணை கோரிப் பெற்றது. சட்டசபையில் இதுகுறித்த விவரங்களை வெளியிடுமாறு எதிர்க்கட்சிகள் கோரியபோது 'விவகாரம் கோர்ட்டில் இருப்பதால் இப்போது அதை வெளியிட முடியாது' என்று சொல்லி தப்பித்துக் கொண்டது.

நகர்ப்புறத் திட்டக் குழுமத்தின் பரிந்துரையின்படி தற்போதைய நிலையில் பம்பாயின் எந்த இடத்திலும் 80 அடி உயரத்திற்கு மேல் கட்டிடங்கள் கட்ட அனுமதிக்கப்படக் கூடாது. ஆனால் ''250 அடி உயரம் வரை கட்டிக் கொள்ளுங்கள். வானம் தான் எல்லை'' என்று கை காட்டிவிட்டார் பவார்.

அந்தேரி பகுதியில் 3 சினிமா கொட்டகைகளை உள்ளடக்கியிருந்த கட்டிடம் இடித்துத் தரை மட்டமாக்கப்பட்டு அதில் பல மாடிக் கட்டிடம் எழுப்புகிறார் ரியல் எஸ்டேட் முதலை ரஹேஜா. எல்லா மாடிகளும் சேர்த்து மொத்த நிலப்பரப்பு 80,000 சதுர அடி. ஒரு சதுர அடியின் விலை ரூ.7000. ''சினிமா கொட்டகையில் எனக்குக் கிடைத்த வருமானம் மாதத்துக்கு ஒரு லட்சம் ரூபாய்தான். ஆனால் இந்தக் கட்டிடத்தை 56 கோடிக்கு விற்றுவிட்டேன்'' என்று மார் தட்டுகிறார். (இதில் கறுப்பு எவ்வளவோ!)

சிறிய கடைகள், குடியிருப்புகள் இடித்துத் தரை மட்டமாக்கப்படுகின்றன. 20, 30 ஆண்டுகளாகக் குடியிருப்பவர்களைக் காலி செய்யும் தொழிலை ஏற்று நடத்துகிறான் யூசுப் படேல். ''வாடகைக்கு குடியிருக்கும் குடித்தனக்காரர்களை இடத்தைக் காலி செய்ய வைக்க வேண்டியது என் பொறுப்பு: சதுர அடிக்கு இவ்வளவு தருகிறேன். இடத்தை எனக்கு விற்றுவிடு'' என்று வீட்டுச் சொந்தக்காரர்களிடம் பேரம் பேசுகின்றன மா∴பியா கும்பல்கள். இடத்தை வாங்கிய பிறகு புதிய மோசடி ஒன்று நடக்கிறது. 60 அடிக்கு 40 அடி உள்ள மனையை 160க்கு 140 என்று மாற்றி விடுகிறது யூசுப் படேல் கும்பல். அதாவது மனையின் அளவு 60க்கு 40 ஆக இருக்கும்போதே பட்டாவில் மட்டும் நிலம் விரிவடைகிறது. பம்பாய் 'விரிவடைகிறது'! எம்.ஜி.ஆர். சாதிச் சங்கங்களிடம் ஜனத்தொகை கேட்ட கதைதான்.

மேற்கூறிய ஊழல்களை கால் தூசாக ஆக்குகின்ற மிகப்பயங்கரமான மோசடி ஒன்றைத் திட்டமிட்டுள்ளது பவார் கும்பல்.

★ பம்பாய் நகரிலும் அதைச் சார்ந்த பகுதிகளிலும் சாலை வசதிகளை ஏற்படுத்தித்தரும் பொறுப்பைத் தரகு முதலாளிகள் கையில் ஒப்படைக்கும் திட்டம். பம்பாய் - உரான் சாலைத் தொடர்பை ஏற்படுத்தித் தரும் பொறுப்பைத் தான் ஏற்பதாகவும் அதற்கு 2200 கோடி ரூபாய் செலவாகும் என்றும் நிதியை தான் எழுப்பிக் கொள்வதாகவும் ரிலையன்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது. இந்த வேலைக்குக் 'கூலி'யாக ஏற்படுத்தவிருக்கும் சாலையின் இருபுறமும் 60 சதுர கிலோமீட்டர் நிலத்தைத் தனக்கு தாரை வார்த்து விடும்படி கோரியுள்ளது.

★ பம்பாய் தீவுக்கும் பம்பாய் நிலப்பகுதிக்கும் இடையே சாலைத் தொடர்பைச் சீரமைத்துத் தருவதற்கான திட்ட முன்வரைவை (5000 பக்கங்கள்) இரவோடு இரவாகத் தயாரித்து சமர்பித்தது அம்பானி கும்பல். போகிற போக்கில் பம்பாய் நகரத்தையே அம்பானி கும்பல் விழுங்கிவிடுமோ என்று அஞ்சிய பழைய தரகு முதலாளிக் கும்பலான டாடா, மபத்லால், மகிந்திரா, வாடியா ஆகியோர் கூட்டு சேர்ந்து இந்தக் காண்டிராக்டைப் பெறுவதற்குப் போட்டி போடுகின்றன.

★ கோவாவிற்கும் பம்பாய்க்குமிடையில் 33 இடங்கள் கடற்கரையோரமாகத் தெரிவு செய்து அங்கெல்லாம் சுற்றுலா மையங்களை உருவாக்குவதற்கான காண்டிராக்ட் வெளிநாட்டில் குடியேறிய இந்தியர்களுக்குத் தரப்படவுள்ளது.

★ பூனாவில் உள்ள பன்சேத் நாத தேக்கத்தைச் சுற்றியுள்ள பகுதிகளைக் குறைந்த விலையில் பினாமி பெயரில் சரத்பவாரே வாங்கிவிட்டார். அதுமட்டுமல்ல; மகாராஷ்டிர மாநிலத்தின் நீர்த்தேக்கங்களைச் சுற்றியுள்ள இடங்கள் எல்லாம் தரகு முதலாளிகளுக்குத் தாரை வார்க்கப்படுகின்றன - சுற்றுலா வளர்ச்சி என்ற பெயரில்.

★ கடற்காற்றை தடுக்கும் என்பதால் கட்டிடங்கள் எதுவும் கட்டுவதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்த பம்பாய் கடற்கரை ஓரமாக வைர விற்பனை மாளிகைகள் கட்டிக் கொள்ளவும், உல்லாச விடுதிகள் அமைக்கவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மீனவர்களை விரட்டுவதற்கு சந்தர்ப்பம் பார்த்துக் காத்திருக்கிறது பவார் அரசு.

ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களை திருப்பி அளித்த விவகாரத்தில் மட்டுமே பவார் கும்பல் 200 கோடி ரூபாயைச் சுருட்டியுள்ளது என்று குற்றம் சாட்டுகின்றன பத்திரிக்கைகள். தரகு முதலாளிகள் மற்றும் மா∴பியா கும்பல்களின் இருண்ட உலகத்தில் நடைபெறும் பேரங்களும் கைமாறுகின்ற கறுப்புப் பணத்தின் அளவும் அவ்வளவு சுலபமாக வெளியாகக் கூடியவையல்ல. பவார் சுருட்டியது எவ்வளவு கோடி என்பதும் அதில் டெல்லிக்கு எத்தனை சதவீதம் கப்பம் கட்டப்பட்டது என்பதும் துல்லியமாகக் கண்டு பிடிக்க இயலாத விஷயங்கள். ஆனால் பம்பாயின் ஒவ்வொரு அடி நிலமும் தரகு முதலாளிகளின் கையிலும், மா∴பியா கும்பல்களின் கைகளிலும் மாறிக் கொண்டு வருகிறது என்பது மட்டும் தெளிவாகிறது. ''இந்த மனிதர் ஆற்றல்மிக்கவர். இந்தியாவின் பிரதமாவதற்குத் தகுதியானவர்'' என்று சரத்பவாரை புகழ்ந்தார் இந்தியத் தரகு முதலாளிகள் கும்பலின் தலைவன் டாடா. பம்பாய் ஏலம் விடப்பட்டுவிட்டது என்பதில் சந்தேகத்திற்கு இடமிருக்கிறதா என்ன?


டெல்லி: ஆசிய விளையாட்டுப் போட்டியை டெல்லியில் நடத்தத் திட்டமிட்ட போது நகரின் மையமான பகுதியில் குடியிருப்புப் பகுதியில் சட்டவிரோதமாக ஐந்து





www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



பம்பாய்: விளையாட்டுத்திடல் குடியிருப்புக்கான இடமான மாற்றப்பட்டது. காங்கிரசு கட்சி சந்திரசேகரர் பிரபுக்கு சொந்தம்.

நட்சத்திர ஓட்டல்கள் இரண்டை கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டது. அதற்கான இடமும் இந்திராவால் ஒதுக்கித் தரப்பட்டது. ஓட்டல் கட்டுவதற்கான நிலம் 90 ஆண்டு குத்தகைக்கு (ஆண்டுக் கட்டணம் ரூ.1.5 கோடி) கொடுத்தது இந்திரா அரசு. ஓட்டல் உரிமையாளர்களில் ஒருவர் லலித் சூரி; இன்னொருவர் காம்பா கோலா குளிர்பான ஆலை முதலாளி சரண்ஜித் சிங், காங்கிரஸ் எம்.பி. இருவருமே இந்திரா, ராஜீவ் கும்பலைச் சேர்ந்தவர்கள். கொடுக்கப்பட்ட இடம் கொஞ்சம் நஞ்சமல்ல; லலித் சூரிக்கு 6 ஏக்கர். சரண்ஜித் சிங்கிற்கு 4.5 ஏக்கர். குடியிருப்போரின் எதிர்ப்புகள், பத்திரிகைகள் மற்றும் எதிர்க்கட்சிகளின் கண்டனங்கள் குப்பைக் கூடையில் வீசப்பட்டன. ஒரு ஆண்டுக்குள் கட்டிமுடித்து ஆசிய விளையாட்டைக் காணவரும் வெளிநாட்டுப் பிரமுகர்கள் தங்குவதற்கு தயார் நிலையில் வைக்க வேண்டும் என்பதுதான் ஒரே நிபந்தனை. அந்த நிபந்தனையும் நிறைவேற்றப்படவில்லை. இரண்டு ஓட்டல்களுமே 7 ஆண்டுகள் கழித்து இப்போதுதான் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. இருந்தும் ஓட்டல் உரிமையாளர்களை ஏன் என்று ஒரு வார்த்தை கூடக் கேட்கவில்லை காங்கிரஸ் அரசு.

இது போதாதென்று ஓட்டலுடன் கடைகள், அலுவலகங்கள் கட்டிக் கொள்வதற்கும் 1983 இல் அனுமதி அளித்தது இந்திரா அரசு. நட்சத்திர ஓட்டல் தவிர லலித் சூரிக்கு இதன்மூலம் கூடுதலாகக் கிடைத்த இடத்தின் பரப்பு 2 லட்சம் சதுர அடி. சதுர அடி ஒன்றுக்கு 3000 ரூபாய் வீதம் இது பன்னாட்டு நிறுவனங்களுக்குக் குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது. இதில் மட்டும் லலித் சூரி சுருட்டிய தொகை ரூபாய் 60 கோடி. சரண்ஜித் சிங் சுருட்டிய தொகை 30 கோடி அதாவது தனது விசுவாசிகளுக்கு 10.5 ஏக்கர் நிலத்தில் நட்சத்திர ஓட்டல்கள் இரண்டை இந்திரா கும்பல் இலவசமாகக் கொடுத்திருக்கிறது என்பதுதான் இதன் பொருள்.

அந்நிய ஏகாதிபத்திய நிறுவனங்களுக்கும் அரசுக்கும் உள்ள நெருக்கம் அதிகரிக்க அதிகரிக்க அரசு அலுவலக வட்டாரங்களுக்கு அருகில் இருக்கும் கன்னாட் பிளேஸ் பகுதியில் நிலத்தின் விலையும் அதிகரிக்கிறது. பன்னாட்டு நிறுவனங்களும், தரகு முதலாளித்துவ நிறுவனங்களும் அரசு அதிகாரிகள், அமைச்சர்கள், எம்.பி.க்களை விலை பேச வசதியாக பாராளுமன்றத்திற்கு அருகிலேயே தங்கள் ''பொதுமக்கள் தொடர்பு'' அலுவலகங்களை வைத்துக் கொள்கிறார்கள். இத்தகைய நிறுவனங்களின் தேவையை நிறைவு செய்யும் விகிதத்தில் மேலும் பல வானுயரக் கட்டிடங்களை கட்டிக் கொள்ளலாம் என்று அனுமதியளித்திருக்கிறது டில்லி மாநகராட்சி.

ஒருபுறம் இந்தியாவின் தலைநகரத்தை பன்னாட்டு நிறுவனங்கள் விலை பேசிக் கொண்டிருக்கும்போதே இன்னொருபுறம் தங்கள் விசுவாசிகள், அடியாட்களுக்கு பிழைக்க வழி தேடித்தருவதற்காக டெல்லியில் மீதமிருக்கும் இடங்களை பட்டா போட்டு பிரித்துக் கொள்கிறது காங்கிரஸ் கும்பல். 1984ல் தரப்பட்ட ஒரு புள்ளிவிவரப்படி அரசுக்குச் சொந்தமான 250 ஏக்கர் புறம்போக்கு நிலம் காங்கிரஸ் பெருச்சாளிகளால் கபளீகரம் செய்யப்பட்டிருக்கிறது. அதன் இன்றைய மதிப்பு ரூ.300 கோடிக்கும் மேல்.

காங்கிரஸ் கட்சி எம்.பி.க்கள், ரவுடிகள், மாஃபியாக் கும்பல்கள் கூட்டாக புறம்போக்கு நிலத்தைக் கைப்பற்றி பகிரங்கமாக அதை ஏலம்போட்டு விற்கின்றன. 1984ல் கரோல் பாக் போன்ற மையமான பகுதிகளில் 10 அடிக்கு 15 அடி உள்ள இடம் 5 லட்சம் ரூபாய் என்று விற்கப்பட்டிருக்கிறது. இந்த வகையில் சூறையாடப்பட்ட பொது மக்களின் பணம் மட்டும் 100 கோடி ரூபாய். இந்தத் தகவல்களெல்லாம் டெல்லி முனிசிபல் கமிட்டி 1984இல் உள்துறை அமைச்சகத்துக்கு அனுப்பிய ரகசிய அறிக்கையில் காணப்படுபவை.

உத்தரப்பிரதேசத்தை சேர்ந்த காங்கிரஸ் எம்.பி.யின் துணையுடன் ஆக்கிரமிக்கப்பட்ட 3000 சதுர அடி நிலத்தில் (மதிப்பு 1 கோடி ரூபாய்) ஒரு ஓட்டல் கட்டப்பட்டிருக்கிறது.

சஞ்சய் காந்தி கும்பலைச் சேர்ந்த அர்ஜூன் தாஸ் என்ற கவுன்சிலருக்கு நகரின் மையப் பகுதியில் உள்ள 765 சதுர அடி நிலம் மாதம் 35 ரூபாய்க்கு மாநகராட்சியால் வாடகைக்கு விடப்பட்டுள்ளது.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அமோத் குமார் என்பவன் தொல்பொருள் பாதுகாப்புத் துறையால் வரலாற்றுச் சின்னம் என்று பாதுகாக்கப்பட்ட சுவரை இடித்துத் தள்ளிவிட்டு கட்டிடம் கட்டி வாடகைக்கு விட்டிருக்கிறான்.

டெல்லி வளர்ச்சிக் குழுமத்துக்கு சொந்தமான நிலத்தில் ஹர்கியான் சிஸ் என்ற காங்கிரஸ் கவுன்சிலரும் அவனது மகன்களும் ஏராளமாக வீடுகளைக் கட்டி வாடகைக்கும் விட்டிருக்கிறார்கள்.

அந்த ரகசிய அறிக்கை நீண்டு கொண்டே போகிறது. இருக்கின்ற 106 கவுன்சிலர்களில் 80 பேர் நில ஆக்கிரமிப்பு செய்தவர்கள் என்று குறிப்பிடுகிறது. ஆனால் இவர்களிடமிருந்து இன்று வரை ஒரு அங்குலம் நிலம்கூட மீட்டெடுக்கப்படவில்லை.

● ○ ●

ரியல் எஸ்டேட்டுகள் விவகாரத்தில் ஊழல் நடைபெறாத மாநிலமோ நகரமோ கிடையாது.

◆ குஜராத் மாநிலம் ராஜ்காட்டில் 90 லட்சம் ரூபாய் மதிப்புள்ள 10,000 சதுர மீட்டர் நிலத்தை ஆக்கிரமித்து அங்கே ஒரு தொழிற்சாலையையே கட்டினான் பொபட்லால் படேல் என்ற முதலாளி. இதைக் கண்டுபிடித்த அம்மாவட்ட கலெக்டர் சிக்ரி, படேலை குண்டர்கள் சட்டத்தில் கைது செய்து உள்ளே வைத்தார். உடனே வெடித்தது பூகம்பம். காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் மட்டுமல்ல எதிர்க்கட்சி எம்.எல்.ஏ.க்களும் கைதை எதிர்த்தனர். படேல் சாதித் தலைவர்கள் அனைவரும் எதிர்த்தனர். விளைவு - அடுத்த நிமிடம் பொபட்லால் படேலுக்கு விடுதலை. ராஜ்காட் நகரிலும், அதைச் சுற்றியுள்ள (அரசின் புள்ளிவிபரப்படியே) ஆக்கிரமிக்கப்பட்ட 1000 ஏக்கர் நிலம் நிலத்திமிங்கிலங்கள் வசமே பத்திரமாக இருக்கிறது.

◆ ராஜஸ்தானில் ஒரு புதிய உத்தி கையாளப்படுகிறது. கடந்த 7 ஆண்டுகளுக்குள் நூற்றுக்கணக்கான வீடுகட்டும் கூட்டுறவு சங்கங்கள் காங்கிரஸ்காரர்களால் துவக்கப்பட்டிருக்கின்றன. மையமான பகுதிகளில் உள்ள சுமார் 11,130 ஏக்கர் நிலம் (மதிப்பு 1100 கோடி ரூபாய்) ஜெய்ப்பூரின் சுற்றுவட்டாரத்தில் மட்டும் இந்தச் சங்கங்களின் கைக்கு போய்விட்டது. முதல்வர் முதல் நீதிபதிகள் வரை அனைவருமே இச்சங்கங்கள் ஏதாவதொன்றின் உறுப்பினர்கள்
விளைவு ஜெயப்பூரில்புதிதாக பள்ளிக்கூடமோ, மருத்துவமனையோ துவங்க வேண்டுமானால் நகருக்கு வெளியேதான் போக வேண்டும்.

◆ மத்தியப் பிரதேசத்தின் முதலமைச்சராக இருந்த அர்ஜூன்சிங் போபாலில் கட்டியுள்ள பளிங்கு மாளிகை 10 ஏக்கர் மனை



படிப்பகம்

யான்மது நிறைவுது. அர்ஜுன் சிங் அளித்த துள்ள வருமானக் கணக்கின்படி அவரது ஆண்டு வருமானம் ரூ.41,140. 10 ஏக்கர் நிலத்தின் மதிப்பு மட்டுமே பல லட்சங்கள் இருக்கும். காங்கிரசின் கோஷ்டி மோதலின் விளைவாக வெளிவந்த விபரம் இது.

◆ தேவிலாலுக்கு முந்தைய காங்கிரஸ் முதலமைச்சரான பிரபல கட்சிமாறி பஜன் லாலின் ஊழல்கள் மிகப் பிரபலமானவை. ஹரியானா நகர்ப்புற வளர்ச்சிக் குழுமத்தின் மூலம் நான்கு வீட்டுமனைகளை பெற்று மொத்தம் சுமார் 3.5 சதுர கிலோ மீட்டர் பரப்பில் அரண்மனையே கட்டியிருக்கிறார். ஆனால் வீட்டு மனைக்கு இதுவரை நயா பைசா தரவில்லை. பஜன்லால் தனது மருமகனுக்கு தொழிற்சாலைகள் கட்டித் தருவதற்காக வளைத்துப்போட்ட நிலம் எவ்வளவு என்று தேவிலால் அரசு இப்போது விசாரித்து வருகிறது.

திடீர் பரிசுத்தம் தேவிலாலின் மூத்த மகன் ஓம்பிரகாஷ் சவுதாலா, அமைச்சர் சம்பத் சிங் சம்பந்தப்பட்ட நில பேரத்தில் பல கோடி ரூபாய்கள் இப்போது கைமாறி இருக்கிறது. இந்த விவகாரம் அம்பலமானவுடனேயே இது தொடர்பான கோப்புகள் காணாமல் போயின. ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை இது தொடர்பாக தற்காலிக நீக்கம் செய்யவேண்டி வந்தது.

◆ யோக்கிய சிகாமணிகளாகத் தங்களை வருணித்துக் கொள்ளும் 'மார்க்சிஸ்டு'களின் தலைவர் பாசு, கல்கத்தாவில் 'ராவுடான் சதுக்கம்' என்ற மையமான பகுதியில் உள்ள 12,000 சதுர மீட்டர் பரப்பளவுள்ள பூங்காவை வெறும் 2000 ரூபாய் மூலதனமுள்ள ஒரு நிறுவனத்திற்கு தாரை வார்த்துள்ளார். இந்த நிறுவனத்தின் முதலாளி ஒரு 'மார்க்சிஸ்டு' கட்சி பாராளுமன்ற உறுப்பினருக்கு நெருக்கமானவராம். இது ஒருபுறமிருக்க ஏற்கனவே சுற்றுச்சுழல் கேட்டினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் கல்கத்தாவில் பூங்காவை அழித்து வியாபார நிறுவனங்களுக்கு கட்டிடம் கட்டி வாடகைக்கு விடுவது என்பது 'மார்க்சிஸ்டு'களின் ஊழலை வெளிச்சம்போட்டு காட்டிவிட்டது.

கல்கத்தாவின் ரியல் எஸ்டேட் தொழிலில் ஷா வாலஸ், ஐ.டி.சி. போன்ற பெரும் தரகு முதலாளித்துவ நிறுவனங்கள் ஆதிக்கம் செலுத்துகின்றன - 'மார்க்சிஸ்டு'களின் ஆசியுடன்தான். உலகிலேயே நடைபாதை வாசிகள் அதிகம் என்று 'பெயர்' எடுத்த கல்கத்தா நகரில், 'கம்யூனிஸ்டு' ஆட்சியில் நகரத்தின் மையமான பகுதிகளில் பலமாடிக் கட்டடங்கள் கட்டப்பட்டு சதுர அடி 325 ரூபாய் என்று விற்கப்படுகிறது. பல மாடிக் கட்டிடங்கள் குறித்த விதிமுறைகள் மற்ற பெரு நகரங்களைவிட கல்கத்தாவில் சற்று மென்மையாகவே இருக்கின்றனவாம். அரசும் 'நீக்குப்போக்காக' நடந்து கொள்கிறதாம். இவை நில முதலைகள் 'மார்க்சிஸ்டு'களுக்குத் தரும் நற்சான்றிதழ்கள்.

◆ பெங்களூரில் ஹெக்டேயின் உறவினர்கள் சம்பந்தப்பட்ட ரேவாஜீது ரியல் எஸ்டேட் நிறுவனம் 2.2 கோடி ரூபாய் மதிப்புள்ள நிலத்தை 90 லட்சம் ரூபாய்க்கு வாங்கியதாக கணக்கு காட்டியது. இந்த விவகாரத்தில் அரசாங்கத்துக்கு ஏற்பட்ட ஸ்டாம்ப் வரி வருமான இழப்பு மட்டும் 10 லட்சம் ரூபாய் என்று சட்டமன்றத்தில் குற்றஞ்சாட்டினார் அன்றைய வருவாய்த்துறை அமைச்சர் பொம்மை. ஆனால் ஹூப்ளி நகரில் தனது உறவினர்கள் பெயரில் சட்டவிரோதமாக நிலத்தை வளைத்திருப்பதாக இப்போது பொம்மை மீது குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

◆ ஹைதராபாத்தின் சொகுசான பஞ்சாரா குன்றுகள் பகுதியில் என்.டி.ஆரும், அவரது பினாமிகளும், இன்னும் பெரும் பண முதலைகளும் வளைத்துப் போட்டுள்ள நிலம், ஹைதராபாத் நகர வளர்ச்சிக் குழுமத்தின் வீடுகள் ஆகியவை குறித்து செய்திகள் வெளி வந்துள்ளன. என்.டி.ஆருக்கு எதிராக ஆந்திர உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கில் முக்கியமான குற்றச்சாட்டுகளில் ஒன்று ரியல் எஸ்டேட்டு விவகாரம் சம்பந்தமானது.

**சென்னை:** எம்.ஜி.ஆர். செத்தபின் நாறத் தொடங்கிய ஊழல்களில் மிக மோசமானது நில பேரங்கள் சம்பந்தப்பட்ட ஊழல்தான். சாராய உடையார், திருநாவுக்கரசு, எம்.ஜி. ஆரின் வெளிநாட்டு நண்பர்கள் என்று மிகப் பெரிய கும்பல் இதில் ஈடுபட்டிருந்தது. மற்ற அமைச்சர் பெருமக்கள் வளைத்துப்போட்ட நிலம் எவ்வளவு என்று தனியாக ஆராய்ச்சி நடத்திதான் கண்டுபிடிக்க வேண்டும்.

ராஜஸ்தானிலிருந்து பளிங்குக் கற்களும், அந்தமானிலிருந்து மரமும் கொண்டு வரப்பட்டு எழுப்பப்பட்ட சாராய உடையாரின் ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி நின்று கொண்டிருக்கும் நிலம் புறம்போக்கு. ஆம்! 259.35 ஏக்கர் பரப்பில் கட்டப்பட்டுள்ள இக் கல்லூரிக்கு 'வள்ளல்' கொடுத்த அரசு நிலம் மட்டும் 125.66 ஏக்கர். பழைய காலத்தில் பார்ப்பனர்களுக்கு மன்னர்கள் சர்வமானியம் என்ற பெயரில் ஊர் கணக்கில் ஒதுக்கிக் கொடுத்ததைப் போலத்தான். மீதி சுமார் 130 ஏக்கர் நிலத்தில் வாழ்ந்து வந்தவர்களை அடியாள் வைத்து துரத்திக் கைப்பற்றிக் கொண்டது சாராய சாம்ராச்சியம்.

டி.சி.எம். டெல்லி ஆலை இடிக்கப்பட்டு, ஐந்து நட்சத்திர குடியிருப்பு உருவாக்கப் பட்டது; அதற்கான விற்பனை விளம்பரம்.




உடையாருக்கு வசதி செய்து தருவதற்காக ஏப்ரல் 87 இல் நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம் திருத்தப்பட்டது. ஆளுநர் ஆட்சி வந்தவுடனே, அரசாங்கம் 'சும்மா' கொடுத்த நிலத்தை விலைக்கு வாங்கிக் கொள்ள விரும்புவதாகக் கடிதம் எழுதினார் உடையார். அன்றைய நிலவரப்படி ஒரு ஏக்கர் நிலத்தின் விலை 9 லட்சம் ரூபாய். ஆனால் அரசாங்க புறம்போக்கு நிலத்தை மதிப்பீடு செய்த மாவட்ட ஆட்சியாளர் ஒரு ஏக்கர் நிலத்தின் விலை ரூ.32,200 என்று நிர்ணயம் செய்தார். இந்த விவகாரம் முடிவுக்கு வருவதற்குள் தி.மு.க. ஆட்சி வந்துவிட்டது; தற்போது கல்லூரி நாட்டுடைமை ஆக்கப் பட்டுவிட்டதாக அறிவித்துவிட்டது தி.மு.க. அரசு.

நாட்டுடமை ஆக்கப்பட்டு விட்டதென்றால் இதில் நடைபெற்றுள்ள ஊழலுக்கு விசாரணை கிடையாது என்று பொருளா? நாட்டுடைமையாக்க கொடுக்கப்பட்ட ஈட்டுத் தொகை எவ்வளவு? உடையார் வசதிக்காகத் திருத்தப்பட்ட நில உச்சவரம்புச் சட்டம் மீண்டும் மாற்றப்படாதது ஏன்? ஊழல் அதிகாரிகள் மீது என்ன நடவடிக்கை? என்று பல கேள்விகள் பதிலிறுக்கப்படாமல் இருக்கின்றன. கருணாநிதியின் இலவச வாண வேடிக்கைகளும், ஏமாற்று சவடால்களும் ஒலிபெருக்கி வைத்து அலற விடப்படுவதால் இந்த விவகாரம் அமுங்கிக்கிடக்கிறது. "பழிவாங்கும் மனோபாவம் இல்லாத அரசு" இதற்காக பணம் வாங்கியது எவ்வளவு என்றும் தெரியவில்லை.

எம்.ஜி.ஆரின் மனம் மிகவும் விசாலமானது. கொஞ்சம் நஞ்சமல்ல ஏக்கர் கணக்கில். எம்.ஜி.ஆரின் நண்பரும், 'அமெரிக்காவில் குடியேறிய தமிழருமான' டாக்டர் பெரியசாமி தாய்நாட்டுக்காக 'ஏதாவது' செய்ய வேண்டும் என்று விரும்பினாராம். எம்.ஜி. ஆரோ பெரியசாமிக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று விரும்பினார். விளைவு - சென்னையின் மையப்பகுதியில் இருந்த 15 ஏக்கர் பரப்பளவு உள்ள பழைய உயிரியல் பூங்கா கைமாறியது. குறைந்தபட்சம் 18 கோடி ரூபாய் மதிக்கத்தக்க நிலம் கிரவுண்டு ஒன்றுக்கு 6 லட்சம் ரூபாய் என்று விலை பேசப்பட்டது.

இப்படிக் கைப்பற்றிய இடத்தில் சுற்றுலா வளர்ச்சி மையம் கட்டுவதற்கு பெரியசாமியுடன் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் கூட்டுத் தொழில் தொடங்கியது. ஆனால் அந்த கூட்டுத் தொழிலின் நிர்வாகப் பொறுப்போ பெரியசாமியின் கையில் விடப்பட்டது.

மரங்களும், 140 கிரவுண்டு பரப்புள்ள ஏரியும் அடங்கிய பகுதி முழுவதும் கான்கிரீட்டால் நிரப்பப்படுவதால் ஏற்படக்கூடிய சுற்றுச்சூழல் கேடு; சுற்றுலா மையமாகக் கட்டப்பட்டால் தோன்றும் போக்குவரத்து நெருக்கடி போன்று பல பிரச்சினைகள் புறக்கணிக்கப்பட்டு திமிர்த்தனமாக நடந்துள்ளது இந்த நிலக்கொள்ளை. இவையில்லா



படிப்பகம்

www.padippakam.com

தற்கு மகாபலிபுரம் அருகே மேலும் 66 ஏக்கர் நிலம் பெரியசாமிக்கு தரப்பட்டிருக்கிறது. இந்த ஒப்பந்தங்களை ரத்துசெய்த தி.மு.க. அரசு இதன்மீதும் விசாரணைக்கு உத்தரவிடவில்லை.

டிசம்பர் 87இல் நெடுஞ்செழியன் 'முதலமைச்சராக' இருந்தபோது வீட்டுவசதித் துறையில் கோப்புகள் அதிவேகமாக நகரத் தொடங்கின. வேகம் என்றால் கனவேகம். ஒரே நாளில் 73 உத்தரவுகளில் கையெழுத்திட்டார் அமைச்சர் திருநாவுக்கரசு. ஒரு வாரத்திற்கு முன் வந்த மனுவிலிருந்து அன்று காலை பெறப்பட்ட மனுவரை அனைத்தின் மீதும் உத்தரவுகள் பிறப்பித்தார். சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் நிராகரித்திருந்த அத்தனை மனுக்கள் மீதும் திருநாவுக்கரசு சாதகமான முடிவுடன் உத்தரவு பிறப்பித்தார்.

குடியிருப்புப் பகுதிகளில் வர்த்தக நிறுவனங்கள் கட்டுவதற்கு, போதிய தீயணைப்பு வசதி இல்லாமல் பலமாடி கட்டிடம் கட்டுவதற்கு, கட்டிடத்தைச் சுற்றி இடமே இல்லாமல் மனை முழுவதையும் அடைத்து பலமாடிக் கட்டிடம் கட்டுவதற்கு - இப்படி தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒரே நாளில் பல லட்சங்கள் சேர்த்தார் திருநாவுக்கரசு.

எம்.ஜி.ஆர். மற்றும் அ.தி.மு.க. கும்பல் சென்னையில் பல பகுதிகளை ஆக்கிரமித்து அவற்றை வீட்டுமனையாக்கி விற்பதை ஒரு தொழிலாகவே நடத்திவந்தது. நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்தில் டிரஸ்டுகளுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டதைப் பயன்படுத்தி தரகு முதலாளிகளும், கறுப்புப் பண முதலைகளும் எவ்வளவு நிலத்தை வளைத்துப் போட்டிருக்கிறார்கள் என்ற விவரங்கள் சிதம்பர ரகசியமாக இருக்கின்றன.

மேட்டுத் தெருவைத் தங்களுக்கு வைத்துக்கொண்டு ஆற்றோரத்து பள்ளத் தெருவை தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கிவிட்ட மேல்சாதி பண்ணையார்களைப் போல நகரத்தின் மையத்தைத் தங்களுக்குள் பங்கு போட்டுக் கொண்டு ஏழை எளிய மக்களை ஊருக்கு வெளியே ஓடச் சொல்கிறார்கள்.

கோடிக்கணக்கில் லஞ்சம் கொடுத்தும், அரசு ஆவணங்களை திருத்தி போர்ஜரி வேலை செய்தும் அதிகாரிகளுக்கும், மந்திரிகளுக்கும் ஐந்து நட்சத்திர ஓட்டல்களில் கூட்டிக் கொடுத்தும் அரசாங்கப் புறம்போக்கு நிலங்களை ஏக்கர் கணக்கில் ஆக்கிரமித்தவர்கள் தான் நடைபாதைவாசிகளைத் துரத்தவேண்டுமென்று முழங்குகிறார்கள்.

பூங்காக்களுக்கும், விளையாட்டு மைதானங்களுக்கும் ஒதுக்கப்பட்ட இடத்தை ஆக்கிரமித்து அங்கே நட்சத்திர ஓட்டல் கட்டுபவர்கள்தான் நகரத்தின் பசுமையையும், அழகையும் சேரிகள் கெடுப்பதாகப் பிரச்சாரம் செய்கிறார்கள்.

நகர்ப்புற வீட்டுமனைகளின் விலை உயர்வு, நகர்ப்புறத்தில் இடநெருக்கடி ஆகியவை பண முதலைகளால் உருவாக்கப்பட்டவை. செயற்கையானவை. கறுப்புப் பணத்திற்குப் பிறந்து கறுப்புப் பணத்தையே மீண்டும் பெற்றெடுக்கும் இந்தத் தொழில் சாதாரண உழைக்கும் மக்களின் குடியுரிமையையே மறைமுகமாகப் பறிக்கிறது.

சாலையில் நின்று பார்த்தால் வீடு எங்கே இருக்கிறது என்றே தெரியாத அளவுக்கு மைல் கணக்கில் புல்வெளிகளைத் தாண்டி ஒரு சிறிய புள்ளியைப் போலத் தெரிகின்றன நகர்ப்புறப் பண முதலைகளின் வீடுகள். சாலை ஓரத்திலேயே சாக்குக் கூரையின் கீழ் வாழும் ஏழை உழைப்பாளிகள். கிராமப்புற நிலங்கள் நிலப் பிரபுக்களிடமிருந்து பிடுங்கப்படும்போது இந்த நகர்ப்புற நில முதலைகளிடமிருந்தும் நிலப் பறிமுதலும் நடத்தப்பட வேண்டும். நகர்ப்புற குடியிருப்புப் பிரச்சினையின் தீர்வு அதுதான்.

— அஜித்




கர்நாடக 'பரிசுத்தம்' ஹெக்டேவின் நிலஊழல்; பினாமி கூட்டுறவு சங்கங்கள் மூலம் நில ஆக்கிரமிப்பு.

நகர்ப்புற வீட்டுமனை ஊழல் என்றால் அரசாங்க நிலத்தை குறைந்த விலையில் தனியார் முதலாளிகளுக்குத் தாரை வார்ப்பது மட்டும்தான் என்று நினைக்கவேண்டாம். இது மிகவும் வெளிப்படையான ஊழல். இதைவிட நாசுக்கான முறைகளெல்லாம் இருக்கின்றன. நகர்ப்புற வளர்ச்சியை ஒழுங்குபடுத்த ஒவ்வொரு மாநில அரசும், நகராட்சியும் ஒரு திட்டம் வைத்திருக்கின்றது. அந்த திட்டத்திலிருந்து 'சிறிய' விதிவிலக்குகள் கொடுத்தாலே 'பெரிய' தொகைகளை அன்பளிப்பாகப் பெறமுடியும். அவற்றில் சில:

**காலிமனையும் கட்டிடத்தின் உயரமும்:** மனையின் பரப்பு எவ்வளவு இருக்கிறதோ அதைப் பொறுத்துத்தான் எத்தனை மாடிகள் கட்டலாம் என்பது தீர்மானிக்கப்படுகிறது. நகரின் மையமான பகுதியில் இருக்கின்ற துண்டு நிலத்திலும் சாத்தியமான அளவு அதிகமான மாடிகளைக் கட்டத்தான் முதலாளிகள் முயல்கின்றனர். உதாரணமாக 100 அடிக்கு 100 அடி (10,000 சதுர அடி) உள்ள இடத்தில் 10 மாடி கட்டிடம் கட்டினால் வாடகைக்கு விடக்கூடிய கட்டிடத்தின் பரப்பு (10 X 10,000) ஒரு லட்சம் சதுர அடியாகிவிடுகிறது. ஆனால் இதற்கும் கட்டுப்பாடுகள் உண்டு.

கட்டிடத்தைச் சுற்றி போதிய அளவு காலி இடம் இருக்கவேண்டும். வாகனங்களை நிறுத்துவதற்கும், காற்று, சூரிய ஒளி போன்ற தேவைகளின் அடிப்படையிலும் இது அவசியம். கட்டிடத்தின் உயரம் இவ்வளவு அடி என்றால் அதைச் சுற்றி இருக்க வேண்டிய காலிமனையின் அளவு இவ்வளவு அடி என்று ஒரு விகிதம் உண்டு.

**பலமாடிக் கட்டிடம் கட்டக்கூடாத பகுதிகள்:** ஏற்கனவே மக்கள் நெருக்கம் மிகுந்த பகுதிகளில் பல மாடிக் கட்டிடம் கட்டுவதன் மூலம் அந்த இடத்தில் வாகனப் போக்குவரத்து அதிகமாகும். மக்கள் நெருக்கமும் அதிகமாகும். எனவே இதற்கும் கட்டுப்பாடுகள் உண்டு.

**கடைகள், ஓட்டல்கள், தொழிற்சாலைகள் கட்டுவதற்குத் தடை செய்யப்பட்ட இடங்கள்:** நகரின் எந்தப் பகுதியில் வேண்டுமானாலும் கடையோ, நட்சத்திர ஓட்டல்களோ கட்ட முடியாது. குடியிருப்புப் பகுதிகள், நகரின் மையமான பகுதிகள், பள்ளிகள் மற்றும் மருத்துவமனை வட்டாரங்கள் போன்ற இடங்களில் இவற்றைக் கட்டத் தடை உண்டு.

நகர்ப்புற நிலத்தின் விலை சந்தையில் உயர, உயர தாங்களே உருவாக்கிய சட்டதிட்டங்கள் தங்களுக்கே தடையாக வந்துநிற்பதைப் பார்க்கும் முதலாளிகள் அவற்றை 'நிலைமைக்கு ஏற்ப திருத்தி அமைக்க' முயல்கிறார்கள். அல்லது அமைச்சர்கள், அரசு அதிகாரிகளின் துணையுடன் இந்தச் சட்டங்களில் ஓட்டையைப் போட்டுத் தப்பி விடுகிறார்கள். இந்த விவகாரங்களில் லஞ்சத்தின் அளவு கோடிகளும், லட்சங்களும்தான்.



படிப்பகம்

www.padippakam.com





# சொரப்பூர், போடி சாதிக்கலவரங்கள்:
# அபாய அறிகுறி!

தமிழ்நாடு, 'மதுரை மாவட்டத்தின் தென்மேற்கே சாதி வெறி பற்றி படர்ந்து 50க்கும் மேற்பட்ட உழைப்பாளி மக்களின் உயிரை குடித்துவிட்டு ''அமைதி''க்கு திரும்பியிருக்கிறது. மனித ரத்தவாடை வீச்சத்தின் நடுவே வழக்கம் போலவே இந்தமுறையும் ஓட்டுப் பொறுக்கிகளின் கூட்டு ஒப்பாரி காதை பிளந்தது.

நெஞ்சில் ரத்தம் கசிய வைக்கும் சாதி வெறிக்கு மக்கள் பலியாவதை யாரும் அரசியல் ஆக்காதீர்கள் என்ற தங்கள் அறிக்கையின் மை உலரும் முன்பே வரிந்துக் கட்டிக் கொண்டு களத்தில் இறங்கினர். விழுந்த பிணங்களின் மீது நகர்வலம் சென்று அரசியல் ஆதாயம் தேடி நாயாய் அலைந்தனர் ஓட்டுக் கட்சிகள்.

''சாமான்ய மக்களின் பிணத்தின் மீதேறி செங்கோலை பறித்திட முயற்சி'' என்று கருணாநிதி கூப்பாடு போட்டார். ''நான் தொகுதிக்கு செல்வதை தடுக்கவே கருணாநிதி கலவரத்தை தூண்டியிருக்கிறார்'' என்றார் 8 மாதத்திற்கு பின் தொகுதிக்கு சென்ற ஜெயலலிதா, கூடவே காங்கிரசுக் கட்சியும் கண்ணீர் சிந்தியது. ''கலவரத்தை முன் கூட்டியே தடுக்க தி.மு.க. ஆட்சி தவறிவிட்டது. தி.மு.க. ஆட்சியில் மக்களுக்கு பாதுகாப்பு இல்லை'' என்று ஆட்சிக் கவிழ்ப்புக்கான 'சட்ட ஷரத்து'க்களுக்கான வார்த்தைகளாக பொறுக்கியெடுத்து அறிக்கை வெளியிட்டது.

ஆக, விழுந்த பிணங்களின் எண்ணிக்கை, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதத்தில் முக்கியமாய் இருந்தது. கருணாநிதிக்கு தன் ஆட்சியின் மீது அனுதாபத்தை பெறவும், காங்கிரசுக் கட்சிக்கு கருணாநிதி ஆட்சியின் மீது வெறுப்பை தூண்டவும் வெற்றிகரமாக பயன்பட்டது.

விதைப்பு இல்லாமல் அறுவடை இல்லை. அப்படியானால் இந்த கலவரத்திற்கு காரணம் யார்? யார் விதைத்தது? விதைத்ததை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தது யார்? ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகளுக்கும் இந்த கலவரத்திற்கும் சம்மந்தமில்லை என்பது உண்மையா?

தாழ்த்தப்பட்ட சாதியைச் சார்ந்த முத்து பிள்ளை. மீனாட்சிபுரத்தை ஒட்டியிருக்கும் துரைராஜபுரத்தைச் சேர்ந்தவர். 55 வயதான இத்தாய் அங்கங்கள் அறுக்கப்பட்டு கோரமான முறையில் படுகொலை செய்யப்பட்டு கிடந்ததும், அச்சாதியைச் சார்ந்த ஜான் பாண்டியன் என்ற நபர் மேல் சாதி இந்துக்களை நாக்கூசும் வார்த்தைகளால் பொது கூட்ட மேடையில் ஏசியதும்தான் காரணம் என்கிறது தி.மு.க.வும் அதன் தோழமை கட்சிகளும்.

ஜான்பாண்டியன், 9ந் தேதி செப்டம்பர் மாதம், கொலையுண்ட பெண் வசித்த மீனாட்சிபுரத்தில் சாதி வெறியைத் தூண்டும்படி பொதுக் கூட்டத்தில் பேசினார். ''நாம் (தாழ்த்தப்பட்டவர்கள், பள்ளர்கள்) மேல் சாதி இந்துக்களிடம் எந்த புகார் கூறினாலும் உங்களுக்கும் எங்களுக்கும் என்ன சம்மந்தம் என்று விரட்டியடிக்கிறார்கள். எனவே, அவர்கள் வீடுகளில் (மேல்சாதி இந்துக்கள், முக்குலத்தோர் மற்றும் பிள்ளைமார்கள் செட்டியார்கள்) பெண் கேளுங்கள். கொடுக்கவில்லையென்றால் தூக்கிவந்து தாலி கட்டுங்கள். சம்மந்தம் ஏற்படும்'' என்றார்.

தேனி-போடி சாலை-போக்குவரத்து மொத்தமாக சீர்குலைந்தது. நடந்தே பயணம் போகும் கிராம மக்கள்.



...னால், ஜான்பாண்டியன் ஜெயலலிதாவை சென்னையில் சந்தித்து அதற்கான திட்டம் தீட்டியிருக்கிறார். அரசு உளவுத் துறையிடம் இதற்கான ஆதாரம் இருக்கிறது என்கிறது தி.மு.க. (முரசொலி 20.9.89). மேலும் 16ந் தேதி கலவரம் துவங்குவதற்கு முன்பாக மதுரை அ.தி.மு.க முன்னாள் பெரும்புள்ளி, பிரபல உள்ளூர் பத்திரிக்கை நிருபரிடம் ''அம்மா (ஜெயலலிதா) போடிக்கு வரப் போகிறார்கள். போடியில் ஒரு எதிர்பாராத திருப்பம் நிகழும்'' என்றார். அது கலவரம் என்பது இப்போது நிருபணமாகிறது. என்றது தி.மு.க.

அ.தி.மு.க.வோ, ஜான்பாண்டியனை தி.மு.க.தான் உசுப்பிவிட்டது; பயன்படுத்திக் கொண்டது. குறிப்பாக அமைச்சர் தங்கவேலும், ஜான்பாண்டியனும், கலவரத்திற்கு முன்பாக ஒரு கல்யாணத்தில் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள். அப்போது தான் கலவரத்திற்கான கரு உருவானது. அதைதான் தனது மேடைப் பேச்சின் மூலம் ஜான்பாண்டியன் மீனாட்சிபுரத்தில் அரங்கேற்றினார் என்கிறது அ.தி.மு.க.

போடி தொகுதியில் தேவாரம் அருகே உள்ளது எர்ணாம்பட்டி. இங்கு செப்டம்பர் 1஢ந் தேதி தன்னுடைய கொளுந்தியாளுக்கு நடந்த திருமணத்தில் தங்கவேலு கலந்துக் கொண்டார். அந்த திருமணத்தில் ஜான் பாண்டியனும் மணமகளையும் மந்திரியையும் வாழ்த்திப் பேசினார். அப்போதே அவருடைய சாதிவெறி பேச்சு எல்லை மீறியது. ஆனால் மந்திரி தங்கவேலு அதை ரசித்தார். அன்று மாலை தான், ஜான்பாண்டியன் மீனாட்சிபுரம் பொதுக்கூட்டத்தில் பேசினார்.

போலீசு இவருடைய பேச்சை பதிவு செய்தது. இதை வைத்து மேல்சாதி இந்துக்களிடம் வெறுப்பைத் தூண்ட, போலீசிடமிருந்த டேப்பில் பல பிரதிகள் எடுத்தார் போடி தி.மு.க. நகராட்சித் தலைவர் முத்து மனோகரன். இவர் போடி தொகுதியில் ஜெயலலிதாவை எதிர்த்து தோற்றவர். 'டேப்' பல ஊர்களில் போடப்பட்டு கலவரம் தீயாக பரவியது. தி.மு.க. மந்திரி பொன் முத்து ராமலிங்கமும் தன் சாதியினரை - தேவர் - மேல்சாதி இந்துக்களை உசுப்பிவிட்டார். சாதிய கலவரத்திற்கு முக்கியக் காரணமே இந்நிகழ்ச்சிகள்தான் என்கிறது, அ.தி.மு.க.

காங்கிரசுக் கட்சி, ஜான்பாண்டியன் பேச்சுதான் கலவரத்திற்கு காரணம் என்பதை ஏற்க முடியாது; தாழ்த்தப்பட்ட பெண் படுகொலை வழக்கை போலீசு உடனடியாக விசாரித்து குற்றவாளிகளை பிடித்திருந்தால், கலவரமே இருந்திருக்காது என்றது.

ஆக கலவரம் தானாக உருவாகவில்லை. தாழ்த்தப்பட்ட பெண் படுகொலை செய்யப்பட்டதை அறிந்தும் போலீசு குற்றவாளிகளை கண்டுபிடிக்க மறுத்ததும், ஜான் பாண்டியனின் சாதிவெறி பேச்சும் கலவரத்திற்கு மைய்க் காரணமாக இருந்திருக்கிறது. போலீசு குற்றவாளிகளை கண்டுபிடிக்க மறுத்ததற்கு காரணம், நியாயம் கோரியவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் என்பது மட்டுமல்ல அவர்கள் சாமான்ய மக்கள்.

அதாவது அவர்களால், மேற்கொண்டு



படிப்பகம்

வழக்காடவோ, உதவ மறுக்கும் போலீசுக்கு பாடம் புகட்டவோ முடியாது. அன்றாடம் காய்ச்சிகளால், அதைவிட்டுவிட்டு போலீசுடன் மல்லுக் கட்டிக் கொண்டு நிற்க முடியாது. அப்படியே வந்தாலும் அவர்களை சாமான்யமாக அடக்கிவிட முடியும் என்ற போலீசின் அகங்காரம். தாழ்த்தப்பட்ட பெண் படுகொலையில் மட்டுமல்ல, உயர் சாதி இந்துக்களின் ஏழை குடும்பங்களின் பெண்கள் பல இடங்களில் கற்பழிக்கப்பட்டு இறந்த சம்பவங்களில் கூட போலீசு குற்றவாளிகளை கண்டுபிடித்தும் தண்டிக்காதது பல முறை நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆக, போலீசின் முக்கிய அளவுகோல் பாதிக்கப்பட்டவன் பணம் உள்ளவனா இல்லையா என்பது தான்!

www.padippakam.com

தாழ்த்தப்பட்ட சாதிய தலைவர்களாக வலம்வரும் ஜான்பாண்டியன் போன்ற நபர்களுக்கும் இது தெரியும். ஆனால், அவர்களின் நோக்கம், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க செய்வதோ, கடமையைச் செய்ய மறுக்கும் போலீசை எதிர்ப்பதோ அல்ல. பாதிக்கப்பட்ட தம் சாதிய மக்களின் கோப ஆவேசங்களை தமக்கு சாதகமாக பயன்படுத்தி அதில் குளிர்காய்வது தான்.

அதற்காக அம்மக்களைத் திரட்டிக் கொண்டு, அவர்களை பகடைக் காய்களாக பயன்படுத்துவதும், அவர்களது உயிரோடு விளையாடுவதும் எதிரியிடம் அதற்கு கணிசமான விலை பேசுவதும் அவர்களது வழக்கமான தொழில். இம்மாதிரிதான் இன்று ஜான்பாண்டியன், கார் பங்களா வசதிகளோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

எம்.ஜி.ஆர். ஆட்சியில் நடந்த நெல்லை இடைத்தேர்தல் முன்புவரை முகவரி இல்லாமல் இருந்தவர்தான் இந்த ஜான்பாண்டியன். அப்பகுதி கருப்பசாமி பாண்டியனுக்கு எதிராக ஆர்.எம்.வீரப்பனுக்கு 'சீட்' கொடுத்தார் எம்.ஜி.ஆர். அப்பகுதியில் பிரபலமானவரும் முக்குலத்தோர் சாதியைச் சேர்ந்தவருமான கருப்பசாமி பாண்டியன் தனித்து நின்றார். அதற்கு எதிராக தாழ்த்தப்பட்டவர்களின் ஓட்டை வளைத்துப்போட அச்சாதிய தலைவரான ஜான்பாண்டியனை வளைத்துப் போட்டார் ஆர்.எம்.வீரப்பன். அதுமுதல் ஜான்பாண்டியன் 'ஹீரோ' ஆனார். தான் வெற்றிப் பெற்றவுடன் ஜான்பாண்டியனுக்கு பெருந்தொகையும், காரும் பரிசளித்தார், ஆர்.எம்.வீரப்பன்.

பிரபலமான ஜான்பாண்டியனை வன்னியர் சங்கம் ராமதாஸ், தனது பாட்டாளி கட்சிக்குள் இழுத்துப் போட்டார். தற்போது பாட்டாளி கட்சியின் இளைஞர் பிரிவு மாநிலத் தலைவர், ஜான்பாண்டியன். பல்வேறு சாதிய தகராறுகள், மோதல்கள், கலவரங்கள் சம்மந்தமாக ஜான்பாண்டியனின் மீது பல கிரிமினல் வழக்குகள் இருக்கின்றன. இனிமேல், ஜான்பாண்டியன், ஒரு மாநில தலைவருக்கு உரிய அந்தஸ்தோடு, வலம் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

★ ☆ ★

ஓட்டு கட்சிகளைவிட சாதிய சங்கங்கள் தான், இன்று ஓட்டு வங்கிகளாக திகழ்கின்றன. ஆட்சியை பிடிப்பதற்கான ஊற்றுமூலங்களாக இருக்கின்றன. சாதிக்கொரு சங்கமல்ல. பல்வேறு ஓட்டுக்கட்சிகளை ஆதரிக்கும் ஒரு சாதியிலேயே பல சங்கங்கள் பெருகிவருகின்றன.

கட்சி, ஆட்சியில் சன்மானங்கள் கிடைக்காத போது தங்கள் சாதிக்கு அவமானம் இழைக்கப்பட்டு விட்டதாக, அதற்கும் சாதிய சங்கங்களின் பெயரிலேயே ஊர்வலம், ஆர்ப்பாட்டம் நடத்தி கும்பலை காட்டி மிரட்டுகிறார்கள். தேவையானால் சாதிய கலவரங்களை உருவாக்கி தாங்கள் சாதிய மக்களின் பிணங்களின் மேலேறி பதவிகளை அடைகிறார்கள்.

இவ்வாறான வேலைகளை திறம்பட தொழில் ரீதியாக செய்வதற்குதான் ஜான்பாண்டியன் போன்ற பினாமிகளை எல்லா ஓட்டுக்கட்சி தலைவர்களும் ஊக்குவிக்கிறார்கள். கலவரங்கள் மூளும்போது கண்துடைப்புக்காக அந்நபர்களை கைது செய்தாலும், உறவை விரிவாக்கி கொள்கிறார்கள். சாதிய வெறியை தூண்டிய குற்றவாளி

## போடி சாதிக்கலவரம்: நேரடி செய்திகள்

★ கலவரத்தின் தீ நாக்கு கொழுந்துவிட துவங்கியது.

குன்னூர் பாலத்தில் 16ந் தேதி காலை 10.30 மணியளவில் பஸ்களை மறித்து சாதி வெறிக்கு பலியான மேல்சாதி இந்துக்களான, செட்டியார், நாயக்கர், கள்ளர் சாதியினர் எழுதிய வாசகங்கள் பின்வருமாறு: 'ஜான்பாண்டியன் தேவடியா மகனை கைது செய்', 'பள்ளத்தாயோலி ஜான் பாண்டியனை கைது செய்', 'பள்ள நாய்கள், சிரட்டையில் கஞ்சி குடிக்கும் தாயோலி மக்கள்'. புரட்சிகர அமைப்புகள் எழுதும் நியாயமான கோரிக்கை வாசகங்களை கிழிக்கும் போலீசு புலிகள், இந்த வாசகங்களை கண்டு கொள்ளவே இல்லை. நாள் முழுக்க இந்த வாசகங்களுடன், பஸ்கள் குறுக்கும் நெடுக்குமாக ஓடின.

★ 16ந் தேதி மதியம், தேனி - அல்லிநகரத்தில் பெரும்பான்மையாக உள்ள பிள்ளை செட்டியார் வகுப்பினர், 300க்கும் மேற்பட்ட தாழ்த்தப்பட்டவர்களின் வீடுகளை தீக்கிரையாக்கினர். அவர்கள் வீடுகளிலிருந்த பொருட்கள் அனைத்தையும் நடு ரோடில் போட்டு கொளுத்தினர். தாழ்த்தப்பட்ட சாதியைச் சார்ந்த வீனஸ் ஒலி பெருக்கி கடையில் தீக்கிரையான பொருட்கள் மட்டும் சுமார் 3 லட்சம் ரூபாய்!

★ முடிந்த மட்டும் கடையில் இருந்த பொருட்களை கலவர கும்பல் சூறையாடியது. ரேஷன் கடையின் மண்ணெண்ணை 'பேரல்'கள் உடைக்கப்பட்டு, அங்கிருந்த கோதுமை, சர்க்கரை, அரிசி தீக்கிரையாக்கப்பட்டது.

★ கட்டை வண்டிகளில் கற்களை நிரப்பிக் கொண்டு, அரைக்கால் 'ட்ராயருடன்' 10, 20 பேர் அடங்கிய கும்பல், தாழ்த்தப்பட்டவர்களின் குடியிருப்புகளில் சரமாரியாக கல்லெறிந்தது.

★ இங்கு, தாழ்த்தப்பட்டவர்கள், மேல் சாதி இந்து ஒருவரை வெட்டிக் கொன்றனர். பதிலுக்கு தாழ்த்தப்பட்டவர்கள் பலரைக் கொன்று செங்கல் சூளையில் போட்டனர் மேல் சாதி இந்துக்கள்.

★ முதக்கம்பட்டியைச் சேர்ந்த தேவர் சாதியை சார்ந்த ஒருவர் தமது மனைவியுடன் குன்னூருக்கு நடந்துவந்துக் கொண்டிருந்தார். தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர்கள்; அவர் சாதியைக் கேட்டு கண்மூடித்தனமாக தாக்கினர். அவரது மனைவி, கணவனைக் கட்டிப்பிடித்துக் கொண்டு "அடிக்காதீர்கள்" என்று கதறியபோதும் சரமாரியாக அடித்தனர். அவர் மண்டையில் ரத்தம் கொட்டியது.

★ ஒரு லாரி நிறைய முத்தளம்பட்டி, பிரதுக்காரன்பட்டி, கரட்டுப்பட்டி, ஊர்களைச் சேர்ந்தவர்களை ஆயுதங்களுடன் கைது செய்து 16ந் தேதி இரவு தேனி காவல் நிலையத்தில் வைத்தது போலீசு. 17ந் தேதி காலை 'பாரா' யாரும் இல்லாததால் அனைவரும் தப்பி ஓடிவிட்டனர்.

★ முதலக்கம்பட்டியைச் சேர்ந்த மேல்சாதி இந்துக்கள், சைக்கிளில் சென்ற இரு தாழ்த்தப்பட்டவர்களை பிடித்து வைகை அணைக்கு கொண்டு சென்றனர். அங்கு இருவர் கையிலும் சீமைக்கருவேலம் குச்சியை முள்ளோடு ஒருவரை ஒருவர் அடித்துக் கொள்ள சொன்னார்கள். மறுத்தவர்களை இவர்கள் சரமாரியாக அடித்தார்கள். வலி தாங்காமல் அவர்கள், 50 அடி உயரமுள்ள பாலத்திலிருந்து வைகையாற்றில் குதித்து உயிர் தப்பிச் சென்றனர்.

★ கண்டமனூர், ஆத்தங்கரைப்பட்டியில் கலவரத்தின் போது கொள்ளையடித்த பொருட்களுடன் கணேசபுரத்தை சேர்ந்த இருவர் மறைவாக காட்டில் கஞ்சா அடித்துக் கொண்டிருந்தனர். தப்பிக்க காட்டுக்குள் ஒளிந்த தாழ்த்தப்பட்டவர்கள் அவர்கள் இருவரையும் அடித்தே கொன்றனர்.

★ 17, 18, 19, 20ம் தேதி வரை தேனியில் இருந்து குமுளிவரையில் போடி, தேவாரம் வரை பெரியகுளம், மதுரை வரை பஸ்கள் ஓடவில்லை. கடைகள் திறக்கவில்லை. ஆலைகள் இயங்கவில்லை. அரசு அலுவலங்கள் நடக்கவில்லை. மொத்தப் பகுதியும் போர்களம் போல் காட்சியளித்தது.

★ அறிவின் இடத்தை சாதிவெறி ஆக்கிரமித்துக் கொண்டது. கேள்வி இல்லை. பதில் இல்லை. பேச்சுக்கே இடமில்லை. அப்படியே பேசினாலும், வெறும் ஆபாச வார்த்தைகளாக நிரம்பி வழிந்தது. மேல் சாதியினர் பெரும்பான்மையாக உள்ள இடங்களில் தாழ்த்தப்பட்டவர்கள் தாக்கப்படுவதும், தாழ்த்தப்பட்டவர்கள் பெரும்பான்மையாக உள்ள இடங்களில் மேல்சாதியினர் தாக்கப்படுவதும், சூறையாடப்படுவதும், கொளுத்தப்படுவதும்... பீதியும், வெறியும், குழப்பமும், ஆவேசமும், அச்சமும், ரத்தமும், சதையும், புகையும், சாம்பலும் ஒன்றோடு ஒன்று பின்னி பிணைந்து கிடந்தது.

— புதிய ஜனநாயகம் வாசகர் வட்டம், தேனி

— விவசாயிகள் விடுதலை முன்னணி, உத்தமபாளைய வட்டம்



படிப்பகம்

ணிப்பு செய்யாமல் அவர்களுடன் கூடி குலாவுவதற்கு போட்டி போடுகிறார்கள்.

இன்று நேற்றல்ல, காமராஜர் ஆட்சி காலத்திலிருந்தே சாதிய அரசியலும், அது தொடர்பான கலவரங்களும்தான் ஓட்டுப் பொறுக்கிகளின் துருப்பு சீட்டாக பயன்படுத்தப்படுகிறது. 1952 ஆம் ஆண்டு நெல்லை மாவட்டம் முதுகுளத்தூரில் 2 மாதத்திற்கும் மேலாக சாதிய தீ கொழுந்துவிட்டு எரிந்தது. அந்த கலவரத்தில் பல நூற்றுக்கான ஏழை எளிய மக்கள் பலியானார்கள். ஓடைகள், கழனிகாடுகள், வைக்கோல்போர்கள் இவற்றில் எல்லாம் மனித அங்கங்கள் வெட்டியெறியப்பட்டு சிதறிகிடந்தன. அதுமுதல், எம்.ஜி.ஆர். ஆட்சி விழுப்புரம் கலவரங்களிலிருந்து இன்று போடி வரை அது தொடர்கிறது.

தொடர்வது மட்டுமல்ல, செங்குத்தாக ஆட்சி கட்டில் வரை ஏறியிருக்கிறது. ஆளும் கட்சிகளின் வாழ்விலும் ஓட்டுச் சீட்டு அரசியல் வளர்ச்சியிலும், வீழ்ச்சியிலும் பங்காற்றுகிறது. சாதிய அரசியலை

www.padippakam.com

சியல் கட்சியும் ... அந்த அளவு அமைப்பு ரீதியில் அரசியலில் அதிகாரத்தை கைப்பற்றும் ஒரு நிறுவனமாக நாடு முழுக்க வளர்ந்திருக்கிறது. அதன் பெருந்தலைகளாக வடக்கே கன்ஷிராமும், தமிழ்நாட்டில் ராமதாசும் உருவாக்கப்பட்டிருக்கிறார்கள். ஜான்பாண்டியன் போன்றவர்கள் இவர்களுடைய செல்லப்பிள்ளைகள்.

உழைக்கும் மக்கள் வர்க்க ரீதியில் ஒன்றுதிரண்டு சாதிய சங்கங்களை புறக்கணிப்பதும், சாதிய சங்க தலைவர்களை சமூகத்திலிருந்தே தனிமைப்படுத்துவதும் தங்கள் வாழ்வுக்கான போராட்டத்தின் மைய கடமையாகும். இம்மைய கடமையை மக்கள் முன்னெடுக்காதவரை, சாதிய சங்கங்களும், சாதிய தலைவர்களும் இன்னும் வெறியோடு மக்களின் ரத்தத்தை சுவைப்பார்கள்! கருணாநிதி போன்ற கபட வேடதாரிகள், உறிஞ்சிய ரத்தத்திற்கு ஒரு விலை வைத்து 'நிவாரணம்' கொடுத்து பிணங்களோடு கலவரத்திற்கான ஆணிவேரையும் மறைத்துவிடுவார்கள்.

◆ பச்சையப்பன்.

## சாதிய வெறித் தீயின் நடுவே சாதி எதிர்ப்பு பிரச்சாரம்

**சா**திய வெறிக்கு பலியாகிக் கொண்டிருந்த பல நகரங்களில் ஒன்றான கம்பம் நகரத்தில், கம்பம் புதிய ஜனநாயகம் வாசகர் வட்டம் சார்பாக, சாதி வெறிக்கு எதிராக பிரச்சாரம் மேற்கொண்டோம். புதிய ஜனநாயக வாசக வட்ட தோழர்கள் குழுவாக சென்று, மக்களுக்கு பாதுகாப்பும் தைரியமும் கொடுத்தோம். பல இடங்களிலும் மக்கள் சாதி வெறிக்கு எதிரான எங்கள் நிலைப்பாட்டை காதுகொடுத்து கேட்டனர். பிரச்சாரத்திற்கு ஊக்கப்படுத்தினர். சுவரொட்டி இயக்கம் எழுந்த போது திரள்திரளாக கூடிநின்று படித்து ஆதரித்தனர். ஆர்வமுடன் ஒன்றுசேர்ந்து எங்களுடன் விவாதித்தனர். மெயின் ரோடு, ஊர் தெருக்கள், பூங்கா, பொது இடங்கள் என்று நாங்கள் ஒட்டிக் கொண்டு சென்றோம். பேருந்து இடம் உள்பட இரு இடங்களில் எங்களை சாதி வெறிக் கும்பல் தடுத்தது. ஒட்டிய போஸ்டரை அக்கும்பல் கிழித்தது. இரு இடங்களிலும் நாங்கள் விடாப்பிடியாக வாதாடினோம். "நாம் வேலையில்லாமல், உணவு இல்லாமல், வீடு இல்லாமல் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம். இதற்காக போராடுவோம்! நமது சகோதரர்களை, சகோதரிகளை, நண்பர்களை அடிப்பது, அழிப்பது நியாயம் இல்லை" என்று வாதாடினோம். சாதிவெறியர்கள் கேட்பதாக இல்லை. வேடிக்கைப் பார்த்த மக்களிடம் மீண்டும் மீண்டும் முறையிட்டோம். அவர்கள் எங்களை அனுதாபத்தோடு பார்த்தாலும் நேரடியாக உதவி செய்ய முன் வரவில்லை. "நீங்கள், இங்கிருந்து சென்று வேறு இடத்தில் ஒட்டுங்கள்" என்று அனுதாபத்தோடு கூறினார்கள். வேறு பொது இடத்துக்கு சென்று ஒட்டினோம். சாதி வெறி கும்பல் அங்கும் எங்களை துரத்தியது. அங்கிருந்த நாங்கள் நகரவில்லை. "இங்கு ஒட்டுவோம்" என்று உறுதியாக நின்றோம். அக்கும்பல் வேறு வழிதெரியாமல் "நீங்கள், அருகில் இருக்கும் கட்சிக்காரர்களிடம் சொல்லிவிட்டு ஒட்டுங்கள்" என்றனர். "யாரிடம் கேட்பது" என்றோம். சர்வக்கட்சி ஊர்வலத்திற்கு தயாராய் இருந்த சி.பி.எம். கட்சியைச் சேர்ந்த சி.ஐ.டி.யு. செயலர் 'நைனார்' அவர்களிடம் காண்பியுங்கள்" என்றனர். அவரிடம் காண்பித்தோம். 'போஸ்டர்' வாசகம் இதுதான்.

தினம் சாதிமத இன வெறியை தூண்டி உழைக்கம் மக்களை மோதவிட்டு ரத்தம் குடிக்கும் அரசியல் தீய சக்திகளை அம்பலப்படுத்தி தனிமை படுத்துவோம்!

■ அப்பாவி உழைக்கும் மக்களே சாதிமத இன வெறிக்கு பலியாகாதீர்கள்!

■ சாதி தீயை வளரவிட்ட தமிழக அரசே உழைக்கும் மக்களின் உயிரோடு விளையாடாதே!

■ சாதிமத இன வெறிகளை முறியடிக்க புதிய ஜனநாயகப் புரட்சிக்கு அணி திரள்வோம்! அவர் "வையுங்கள் அப்புறம் ஒட்டுவோம்" என்றார். நாங்கள் மற்ற கட்சிக்காரர்களிடம் காண்பித்தோம். அங்கு வந்த சி.பி.எம். விவசாய சங்க தலைவர் கருப்பசாமி, "முதலில் நீங்கள் போங்கள். நீங்கள் எதையாவது(!) எழுதிவிட்டு போய் விடுவீர்கள்(?) அப்புறம் நாங்கள்தான் பதில் சொல்ல வேண்டும்" என்று விரட்டினார். "அங்கிட்டு போய் என்னமும் செய்யுங்கள்" என்றார். நிதானமாக விவாதித்துவிட்டு நிலமையை அனுசரித்து ஒட்டாமல் திரும்பிவிட்டோம். மக்கள் போலி தலைவர்களை நன்றாகவே அடையாளம் கண்டு கொண்டார்கள்.

— புதிய ஜனநாயகம் வாசகர் வட்டம், கம்பம்

## சொரப்பூர் தாழ்த்தப்பட்ட மக்கள் படுகொலை!

## சாதி வெறியர்களுக்கு போலீசு உடந்தை!

**தெ**ன்னார்காடு மாவட்டம் கடலூர் அருகில் உள்ள சொரப்பூர் கிராமத்தில், போலீசால் கட்டுக் கொல்லப்பட்ட தாழ்த்தப்பட்ட சாதி மாணவர் சேகர்- கை முறுக்கு சுட்டு விற்கும் வயதான தாயின் சேமிப்பில் படித்துக் கொண்டிருந்தார். முதலாமாண்டு பாண்டி சட்டக் கல்லூரி மாணவர்.

வீராணம், பனையடிக் குப்பம் பகுதி தாழ்த்தப்பட்ட கூலி ஏழைகள், கூலி உயர்வு கேட்டு நீண்ட காலமாக போராடுகின்றனர். இவர்களின் போராட்டத்திற்கு முழு ஆதரவு அளிக்கிறது அப்பகுதியில் இயங்கும் புரட்சிகர அரசியல் அமைப்பு. இதை சகிக்காத அப்பகுதியின் உயர்சாதி இந்து ரெட்டி சாதியினரின் தலைவன் வெங்கடரெட்டி பழிவாங்க நேரம் பார்த்திருந்தான்.

இந்த ஆண்டு நடந்த அவ்வூர் கோயில் தெரு விழாவில் வழக்கம் போல் "சாமி" ஊர்வலம் வந்தது. தாழ்த்தப்பட்ட சாதிப் பெண்ணை மணந்து ஊரின் நடுவில் குடியிருந்த உயர்சாதி இந்து ஒருவரின் வீட்டுக்கு மட்டும் "சாமி" தீப அர்ச்சனைக்கு நிற்கவில்லை. மேலும் தீ மிதி விழாவின் நெருப்பு சாம்பலை எடுத்து பக்தியுடன் நெற்றியில் அணிந்துகொண்ட தாழ்த்தப்பட்ட ஒரு அப்பாவியையும், அடித்து உதைத்தது, ரெட்டி சாதி கும்பல்.

இதனால் நியாயமான கோப ஆவேசத்தோடு தாழ்த்தப்பட்ட மக்கள், உயர்சாதி இந்துக்களிடம் நியாயம் கேட்டனர். பரஸ்பர மோதலும், அதன் பிறகு பஞ்சாயத்தும் நடைப்பெற்றது. வெங்கடரெட்டி தூண்டுதலின் பேரில் பஞ்சாயத்தை பாதியில் முடித்து முறுக்கிக் கொண்டு திரும்பினார் ரெட்டி சாதியினர். போலீசை அழைத்து தாழ்த்தப்பட்டவர்களின் மீது தாக்குதல் நடத்த ரெட்டி கும்பல் பகிரங்கமாக ஊரில் பணம் வசூலித்தது.

தாழ்த்தப்பட்ட மக்கள் பீதியடைந்து அருகில் இருக்கும் பாண்டிச்சேரி எல்லைக்குட்பட்ட பனையடிக்குப்பம் காலனியில் மொத்தமாக தஞ்சம் புகுந்தனர். விழுப்புரம் எஸ்.பி. தலைமையில் வந்திறங்கிய போலீசு, தன் வரம்பையும் மீறி பனையடிக்குப்பத்தில் புகுந்தது. கண்ணீர் புகைக் குண்டு, தடியடி, சூறையாடல், துப்பாக்கி சூடு நடத்தி இருவரை படுகொலை செய்தது. பல பேரை படுகாயப்படுத்தியது. பல பேரை பொய் வழக்கில் கைதுசெய்து வெற்றிகளிப்பில் திரும்பியது.

போலீசின், அதிகார அத்துமீறலுக்கும், அதனுடைய அராஜகத்திற்கும் இதுநாள்வரை அதற்கு ஒரு தண்டனையும் வழங்கவில்லை கருணாநிதி ஆட்சி.

— மக்கள் கலை இலக்கியக் கழகம், கடலூர் கிளை.



படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

# அவமானத்தின் விளிம்பில்...

www.padippakam.com

இந்தியச் சிறைகளில் வாடும் பெண் குற்றவாளிகளின் துயரக்கதைகள் வேதனையளிக்கிறது. ஆணாதிக்கம், அரசின் அடக்குமுறை எந்திரம் இரண்டும் அந்த இளம் சகோதரிகளின் உள்ளங்களை தீராத ரணப்படுத்திவிட்டது.

பெண்; அவள் கணவன் எமனாக மாறினாலும் அவன் கழுத்தை நெறிப்பது குற்றம். பெண், அவள் வெறும் பிள்ளைப் பெறும் இயந்திரம். பெண் அவள் வெறும் இச்சைக்கு அலையும் காமுகி. பெண்மையை புண்படுத்தும் இந்த கருத்துக்கள் எல்லாம் வெறும் ஆணாதிக்க கருத்துகள் மட்டுமல்ல இந்திய குற்றவியல் சட்டமும் பெண்களை இப்படித்தான் கொச்சையாக அடையாளம் காட்டுகிறது.

காமுக கணவனால் கைவிடப்பட்டு குழந்தைகளோடு தற்கொலைக்கு முயன்ற சகோதரிகள், பிள்ளைப் பெற உடற்கூறு அற்ற பெண்கள், உறுதி கொடுத்த வரதட்சணை, கொடுக்க முடியாத அபலைகள்,மிருகங்களைவிட கேவலமாக சித்திரவதைகளுக்கு ஆளானவர்கள், இவர்கள் வேறு வழியில்லாமல் கணவன் என்ற மிருகத்தை கொன்றொழித்த குற்றத்திற்காக, பெற்றோர்கள் காட்டியவனுக்கு கழுத்தை நீட்ட மறுத்து மனதுக்கு பிடித்தவனை இளவயதில் காதலித்த குற்றத்திற்காக -

இவ்வாறான குற்றங்களின் கீழ் ஏராளமான இளம் சகோதரிகளை சிறையில் அடைத்திருக்கிறது இந்திய அரசு. சிறையில் இவர்கள் பல முறை கற்பழிக்கப்படுகிறார்கள். எதிர்ப்பவர்கள், நாள் முழுக்க நிர்வாணமாக கொட்டடிகளில் அடைக்கப்படுகிறார்கள். கடைகோடி அவமானத்திற்கு உள்ளாக்கப்படுகிறார்கள்.

அவர்களுடைய உணர்ச்சிகள் கொச்சையாக நக்கல் செய்யப்படுகிறது. சிறையில் அவர்களுடைய உழைப்பு வரைமுறையற்று சுரண்டப்படுகிறது. இவ்வளவு அவமானங்களையும் தாங்கிக் கொள்ள சக்தியற்ற இந்த இளம் உள்ளங்கள் சிறைக்குள்ளேயே மனரீதியில் செயலிழந்து போகிறார்கள். உடல் ரீதியில் வலுவிழந்து போகிறார்கள்.

பெரும்பாலானவர்கள் வெறும் நடைபிணங்களாக விடுதலையாகிறார்கள். மனம் பேதலித்து ஆதரவின்றி சாகிறார்கள். மரத்துப்போய் விரக்தியில் உடலை விற்று காலத்தை கழிக்கிறார்கள்.

அரசின் புள்ளிவிவரப்படி ஆண்டுதோறும் இவ்வாறான குற்றங்களின் கீழ் 44,000 பெண்கள் சிறை வைக்கப்படுகிறார்கள். இவர்கள் எந்த சூழ்நிலைகளின் கீழ் குற்றம் செய்ய துணிந்தார்கள் என்ற சாதாரண மதிப் பார்ப்பதில்லை அரசு. இதில் 8000 பெண்கள் மன நோயாளிகள் என்கிறது, அரசு. "நிரபராதி"களான அவர்கள் "சிறை பாதுகாப்பில்" இருப்பதாக அரசு கூறுகிறது.

பெண் சிறைக் கைதிகளின் நிலமைகளை ஆராய அமைக்கப்பட்ட தேசீய நிபுணர்கள் குழு, பல அதிர்ச்சிதரும் தகவல்களை வெளியுலகுக்கு சொன்னது. "கல்கத்தா பிரசிடென்சி மத்திய சிறையில் 350 பெண் கைதிகளில் 170 பேர் மன நோயாளிகள் என்கிறது சிறை நிர்வாகம். அவர்கள் வெறும் நரம்பு தளர்ச்சி நோய் உள்ளவர்கள். இன்னும் சிலர் திடீர் அதிர்ச்சிகளுக்கு ஆளானவர்கள். சில நாட்கள் மருந்துகளிலேயே அவர்களை குணப்படுத்த முடியும்" என்கிறது, நிபுணர் குழு. பெண்களை பெற்றுக் கொள்வதும் மடியில் நெருப்பை கட்டிக் கொள்வதும் ஒன்று என்று பெண்களை அழிவு சக்தியாக கொச்சைப்படுத்துகிறது ஆணாதிக்கம். அவர்கள் உடல் ஊனத்தோடு பிறந்தாலோ, உள நோயாளிகளாக ஆனாலோ அருவெருப்பான பொருளாக ஒதுக்கி வைத்துவிடுகிறது. நோயாளி என்ற முறையில்கூட அவர்களை பராமரிக்காமல் பெற்றோர்களே மனநோயாளி பெண்களை சிறையில் விட்டுவிடுகின்றனர்.

சிறு குற்றங்களின் கீழ் சிறுமிகள் பலமுறை தொடர்ந்து கைது செய்யப்படுகிறார்கள். சுமார் 8700 சிறுமிகள், இவ்வாறு சிறைச்சாலைகளில் நிரந்தர பெண் குற்றவாளிகளாக அடைக்கப்பட்டிருக்கிறார்கள். வீட்டுக்கு பாதுகாப்பாக அனுப்ப முடியவில்லை என்ற அற்பக் காரணங்களுக்காக பல சிறுமிகள் தண்டனை காலம் முடிவடைந்த பிறகும் சிறையில் வாடுகிறார்கள். ஒரே உழைப்புக்கு ஆண் கைதிகளுக்கு ரூ.5.50ம் பெண் கைதிகளுக்கு ரூ.2.50 தருகிறது சிறை நிர்வாகம். அடிப்படை தேவைகள் சுத்தமாக இல்லை. குளியல், கழிப்பிடம், உணவு அனைத்திற்கும் தட்டுப்பாடு. பெண் கைதிகளை மூங்கில் கம்புகளால் அடிப்பது அனைத்து சிறைகளிலும் நடைமுறையில் இருக்கிறது.

பெண் குற்றவாளிகளின் குழந்தைகள் இறந்தபோது கூட அவர்களுக்கு 'பரோலி'ல் சென்றுவர அனுமதி கிடைப்பதில்லை. சிறை போலீசுக்கு லஞ்சம் கொடுக்க வழியில்லாமல், தன் குழந்தையின் சாவைக் கூட பார்க்காத எத்தனையோ பெண் குற்றவாளிகள் சிறையில் இருக்கிறார்கள்.

குற்றங்கள் புரிந்ததற்காக மட்டும் பெண்கள், தண்டிக்கப்படுவதில்லை. அவர்கள் பெண்கள் என்பதற்காகவே தண்டிக்கப்படுகிறார்கள். ஆண் ஆதிக்கம்_இந்த அருவருப்பான விலங்கோடுதான் அவர்கள் வாழ வேண்டும். அதை துணிந்து உடைப்பவர்கள், அந்த ஒரு குற்றத்திற்காகவே அரசு எந்திரத்தின கோரமான நகங்களால் குத்தி கிழிக்கப்படுகிறார்கள்.

ஆணாதிக்கமும், அரசு அடக்குமுறையும் தனியொரு அபலையாக கழட்டியெறிவதற்கு பூ விலங்கல்ல! அது குரூரமான மிருகம் சமுதாயப் புரட்சியில் அந்த இளம் சகோதரிகள் தங்களை இணைத்துக் கொள்ளும் போது மட்டுமே அதை அழித்தொழிக்க முடியும்.

○ குணசேகரன்

முகத்தில் துணி மூடி அழைத்துச் செல்லப்படும் பெண் குற்றவாளிகள். அருகில் குண்டாந்தடிகளுடன் பெண் போலீசுகள்.





படிப்பகம்

www.padippakam.com

# இரகசிய உலகப் போர்வழிகளுடன் ஓட்டுக்கட்சிகள் உறவு

குழாயடிச் சண்டையிலே 'பத்தினி'களின் பகல் வேஷம் களைவதைப் போல தேர்தல் - பதவிச் சண்டையிலே ஓட்டுக் கட்சித் தலைவர்களின் லஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகளும் இரகசிய உலகத் தொடர்புகளும் தெரிய வருகின்றன. குறிப்பாக ஜெர்மன் நீர்மூழ்கி கப்பல்கள், ஸ்வீடன் பீரங்கிகள், ஜப்பானிய எண்ணெய்க் குழாய்கள், இங்கிலாந்து ஹெலிகாப்டர்கள் ஆகிய பேரங்களில் பாசிச ராஜீவ் கும்பல் அம்பலப்பட்டுப் போனது. அவற்றிலிருந்து தப்பிக்க, ''நீங்கள் மட்டும் யோக்கியர்களா - சுத்தமானவர்களா?'' என்று எதிர்க்கட்சித் தலைவர்கள் மீதே லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்களை அடுக்கடுக்காக வீசத் தொடங்கியிருக்கிறது.

''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' கோயங்கா மீது அச்சக இறக்குமதி மற்றும் வரிஏய்ப்புக் குற்றச்சாட்டுக்கள். அருண்நேரு மீது செக். நாட்டு கைத்துப்பாக்கிகள் பேர ஊழல் மற்றும் சமீபத்தில் வெளிநாடுகளுக்குப் போன கேளிக்கைப் பயணத்துக்கு செலவு ஆகிய புகார்களை சுமத்தியது. ஹெக்டே மீது சாராய - வீட்டுமனை ஊழல், தேவிலால் மற்றும் என்.டி.ராமராவ் மீது அவர்களின் குடும்பத்தினரது லஞ்ச ஊழல் புகார்களைக் கூறியது. வி.பி.சிங் மீது நில உச்சவரம்பு மற்றும் அறக்கட்டளை ஏய்ப்புக் குற்றச்சாட்டுக்களை அவிழ்த்துவிட்டது.

இவற்றை விட முக்கியமாக எதிர்க்கட்சிகளின் திருவாளர் பரிசுத்தம், எதிர்காலப் பிரதமர் என்று போற்றப்படும் வி.பி.சிங் மீது மேலும்மேலும் பல குற்றச்சாட்டுகளை, ராஜீவ் கும்பல் ஏவியுள்ளது. ''வி.பி.சிங் முதுகெலும்பில்லாத மனிதன்'' என்று ஜெயப்பிரகாஷ் நாராயணன் எழுதியதாக ஒரு கடிதத்தை குஜராத்திப் பத்திரிக்கை மூலம் வெளியிட்டது. அலகாபாத் இடைத் தேர்தலில் தனக்கு உதவியதற்கு கடத்தல் மன்னல் ஹாஜி மஸ்தானுக்கு நன்றி தெரிவித்து வி.பி.சிங் எழுதியதாகக் கூறப்படும் ஒரு கடிதத்தை ராஜீவின் கைக்கூலி ஏடான 'டெலிகிரா∴ப்' மூலம் வெளியிட்டது. அடுத்து அமெரிக்கத் தூதகத்திலுள்ள 'ஏஜெண்ட் XXI'என்கிற சி.ஐ.ஏ. உளவாளிக்கு வி.பி.சிங் எழுதியதாக ஒரு கடிதத்தை அதன் டெல்லி எடுபிடி வார ஏட்டின் மூலம் வெளியிட்டது. தனது இரகசிய உளவுப் படையை வைத்து ஹாஜிமஸ்தானை மிரட்டியும், வி.பி.சிங்கின் தனி உதவியாளர் சையது அஸ்ர∴பை விலைக்கு வாங்கியும் பொய் (∴போர்ஜரி) கடிதங்களைத் தயாரித்து ராஜீவ் கும்பல் வெளியிடுவதாக எதிர்க்கட்சியினர் கூறுகின்றனர்.

இதெல்லாம் வெள்ளோட்டம்தான்; இதோ இவற்றைவிடப் பெரிய, ஆதாரபூர்வமான குற்றச்சாட்டு என்று இன்னொன்றை வி.பி.சிங் மீது ராஜீவ் கும்பல் ஏவியுள்ளது.

● தூயகிட்டிஸ், நேவிஸ், பேஸெடீரே ஆகிய கரீபியன்-மத்திய அமெரிக்கத் தீவுகளில் உள்ள தி ∴பர்ஸ்ட் டிரஸ்ட் கார்ப்பரேசன் என்ற முதலீட்டு வங்கியில் 29479 என்கிற இரகசிய எண்ணில் வி.பி.சிங்கின் மகன் அஜய்சிங் பெயரில் 1986 செப்.16ந் தேதி கணக்குத் துவக்கப்பட்டுள்ளது. அஜய்சிங் அமெரிக்காவின் சிட்டி வங்கியில் அதிகாரியாக உள்ளார்.

● அஜய்சிங் பெயரில் 31 கோடி ரூபாய் அந்தக் கணக்கில் ஆறு தவணைகளில் போடப்பட்டு 1988 பிப்.13ந் தேதி எடுக்கப்பட்டுள்ளது. அந்தக் கணக்கின் பலன் வி.பி.சிங் அடைவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

● வி.பி.சிங் நிதி மந்திரியாக இருந்த போது ஜயர் மற்றும் ஜாம்பியா ஆகிய ஆப்பிரிக்க நாடுகளில் இருந்து துத்தநாகம், செம்பு இறக்குமதி செய்த வகையில் பெற்ற லஞ்சமாகும்.

வி.பி.சிங்,



அஜய்சிங்



லாக துருக்கியில் உள்ள இஸ்தான்புல் நகர் வார வெளியீட்டிலும், பிறகு குவைத்தில் இருந்து வெளிவரும் 'அராப் டைம்ஸ்' என்ற நாளேட்டிலும் வெளிவந்தன. அவற்றின் ஆவணங்களோடு பிர்லாவுக்குச் சொந்தமான 'இந்துஸ்தான் டைம்ஸ்' மற்றும் காங்கிரசு எம்.பி.யின் 'டெலிகிராப்' ஆகிய நாளேடுகளில் வெளியிடப்பட்டன. ''வங்கி இரகசியங்கள் காரணமாக இந்த ஆவணங்களை உறுதிப்படுத்தவோ, மறுக்கவோ முடியாது'' என்று கூறும் அதே சமயத்தில், மறைமுகமாக வி.பி.சிங் மீதான குற்றச்சாட்டை உறுதிப்படுத்தும் வகையில் தி ∴பர்ஸ்ட் டிரஸ்ட் கார்ப்பரேசனின் நிர்வாக இயக்குநர் ஜார்ஜ் மெக்லீன் அளித்த பேட்டியையும் அவை வெளியிட்டன. வேறு யாருக்கும் பேட்டியளிக்க மெக்லீன் மறுத்துத் தலைமறைவாக உள்ளார்.

வி.பி.சிங்குக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் பொய்யானவை; ஆவணங்கள் அனைத்தும் போலி (∴போர்ஜரி) என்று எதிர்க்கட்சிகள் சார்பாக இந்தியன் எக்ஸ்பிரஸ் எழுதுகிறது.

◆ தி ∴பர்ஸ்ட் டிரஸ்ட் கார்ப்பரேஷன் என்ற ஒரு வங்கி 1986-88இல் இயங்கி திவாலாகிப் போனது. அதன் நிர்வாக இயக்குநராக இருந்த ஜார்ஜ் மெக்லீன் ஒரு மோசடிப் பேர்வழி என்பதால் விரப்பட்டடப்பட்டு விட்டார்.

◆ 29479 என்கிற ஐந்து இலக்க எண்ணுக்கு யாரும் கணக்கு வைக்கவே கிடையாது. அந்த வங்கியில் கணக்கு வைத்த ஒரே நபர் ஜீவன் சாஸ்திரி என்பவர்தான். வங்கியே ஒரு கோடி டாலருக்கு மேல் நிதியைக் கையாண்டதில்லை. வாடகை மற்றும் தொலைபேசி கட்டணம்கூட செலுத்த முடியாமல் திவாலாகிப் போனது.

◆ வி.பி.சிங் மகன் அஜய் சிங் பெயரில் அந்த எண் உள்ளது. எண் அடிப்படையில் கணக்கு வைப்பவர்கள் பெயர் குறிப்பிடுவதில்லை. அந்த ஆவணங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள ''சீல் - முத்திரை'' அந்த வங்கி பயன்படுத்தியதல்ல.

◆ ஆவணத்தில் கையொப்பமிட்ட அஜய்சிங் தூய திட்டீஸ் தீவுக்குப் போனதாக உள்ளது. அவர் அங்கு போகவே இல்லை என்பதற்கு அவரது கடவுச்சீட்டு (விசா) சாட்சியமாக உள்ளது. மேலும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வது நிதி மந்திரியான வி.பி.சிங்கின் பொறுப்பில் இல்லை; வர்த்தக மந்திரியான சிவசங்கரின் பொறுப்பில் இருந்தது.

- என்று ''வெளிநாடுகளில் இந்திய செய்திச் சேவை'' என்கிற நிறுவன ஆய்வுகள் கூறுகின்றன. அந்த வங்கியின் வக்கீலும், மெக்லீனுடைய உதவியாளரும் இந்தத் தகவல்களைக் கூறியுள்ளனர். இதற்கெல்லாம் மழுப்பும் வகையில் ஜார்ஜ் மெக்லீன் பதில் கூறி வி.பி.சிங் - அஜய்சிங் மீது சந்தேகம் தரும் வகையில் ராஜீவ் ஆதரவு ஏடுகளுக்குப் பேட்டியளித்து வருகிறார்.

இந்தக் குற்றச்சாட்டுக்களில் ஆதாரமிருப்பின் தம்மீது வழக்குப் போட்டுத் தண்டிக்கும்படி ராஜீவுக்கு வி.பி.சிங் சவால் விட்டார். தானே இந்தியாவுக்கு வந்து வருமான



படிப்பகம்

வரி இலாக்கா கோரிய விளக்கங்களுக்கு அஜய் சிங் பதிலளித்தார். அதோடு தங்கள் மீது அவதூறும் பரப்பும் ஏடுகளுக்கு எதிராக வழக்குப் போடுவதாக எச்சரித்துள்ளனர்.

வி.பி.சிங் - அஜய் சிங் மீதான குற்றச் சாட்டுகளில் ஆதாரமில்லை என்று தோன்றி னாலும் இவற்றால் ராஜீவ் கும்பல் அடைய விரும்பும் ஆதாயங்கள் இரண்டுதான்!

அவை -

★ ராஜீவ் கும்பல் மீது நிருபிக்கப்படாத புகார்கள் இருப்பதைப் போலத்தான் எதிர்க் கட்சியினர் மீதும் உள்ளன. ஆகவே, யார் மீதும் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை பாரதூரமாக எடுத்துக் கொள்ள வேண்டிய தில்லை. போஃபார்ஸ், ஃபேர்ஃபாக்ஸ், வெஸ்ட்லாந்து, சுமிடோமா போன்ற லஞ்ச ஊழல் விவகாரங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கத் தேவையில்லை.

★ லஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகள் ஆகியன யார் ஆட்சிக்கு வந்தாலும் தவிர்க்க முடியாதவை. பரிசுத்தம் என்று யாருமே கிடையாது. எனவே அவை வழக்கமா னவை என்று ஏற்றுக் கொண்டு போவது தான் புத்திசாலித்தனமானது.

- என்று நியாயபூர்வ, தார்மீக உரிமை யாக லஞ்ச ஊழல், அதிகார முறைகேடு களை மாற்றிவிடுவதும் ராஜீவ் கும்பல் மீதான குறிப்பான புகார்களில் இருந்து திசை திருப்பிவிடுவதும் தான் அதன் நோக்கம்.

ஆனால் இவர்களின் தேர்தல் - பதவிச் சண்டையில் வெளிவரும் வேறொரு விவ காரத்தின் பக்கம் கவனம் செலுத்த வேண்டி யது அவசியமானது. இவர்கள் எப்படிப் பட்ட நாசகார சக்திகளுடன் [illegible] துள்ளனர் என்கிற மிக ஆபத்தான விவகா ரம் அது! அதாவது ராஜீவ் கும்பலின் மீதான லஞ்ச ஊழல் புகார்களுக்கான ஆதாரங்க ளைத் தேடும் எதிர்க்கட்சிகளும் சரி; எதிர்க் கட்சியினர் மீது புகார்களைத் தொடுப்பதற்கு ஆதாரங்களைத் தேடும் ராஜீவ் கும்பலும் சரி - சர்வதேச ஆயுதக் கடத்தல் விற்பனைத் தர கர்கள், சர்வதேச போதை மருந்துக் கடத்தல் கிரிமினல் மஃபியா கும்பல்கள் அடங்கிய இரகசிய உலகப் பேர்வழிகளுடன் நெருங் கிய தொடர்பு வைத்துள்ளனர். ஏற்றுமதி - இறக்குமதி பேரங்களை இவர்கள் மூலமாக நடத்துகிறார்கள். அவற்றின் மூலம் கிடைக் கும் லஞ்ச ஊழல் கருப்புப் பணத்தை சர்வ தேச இரகசிய உலக வங்கிகளிலும், பினாமி ஆலைகளிலும் முதலீடு செய்கிறார்கள்.


INDIA

ARAB TIMES

Rajiv sees world role

'Singh soiled'

The Telegraph

Exclusive interview with George Maclean, Managing Director, The

Q: Would you deny Account Number 29479 existed? A: Frankly, I ... would I deny it because in St Kitts it's subject to a five-year jail s... if I said any-thing about any account... Q: Should we read anything into the fact that you cannot deny that this number exists? A: That's correct.

More than one Indian account

SHADOW MAN

OPPOSITION LEADERS TOO MIGHT BE CORRUPT.

In India Mr.V.P.Singh leader o

Opposition in Corruption scanda

Numbered account existed, says banker

By Shubhabrata Bhattacharya

வி.பி.சிங் மகன் அஜய்சிங்கின் வெளிநாட்டு ரகசிய வங்கிக் கணக்கு: ராஜீவின் எதிர்த்தாக்குதல்

இந்த பேரங்களின் போது உயர்வகை மது மற்றும் சர்வதேச விபச்சாரிகளுடன் ஆடம்பர - உல்லாச விருந்துகள் நடக்கின் றன. தேசிய, இராணுவ இரகசியங்கள் அனைத்தும் அங்கே விலை போகின்றன. ஆளும் கட்சியினர் மட்டுமல்ல, எதிர்க்கட்சி யினரும் இவற்றிலே பங்கேற்கின்றனர்.

அமிதாப் - அஜிதாப் பச்சன்களின் தில் லுமுல்லுகளையும், ராஜீவின் போஃபார்ஸ் பீரங்கி பேர ஊழல் ஆதாரங்களையும் பெறு வதற்காக சந்திராசாமி - ஆதனான் கஷோகி ஆகிய சர்வ தேச ஆயுதக் கடத்தல் விற்ப னைத் தரகர்களுடன் கோயங்கா ராம்ஜேத்ம லானி - அருண்ஷோரி கும்பல் நெருங்கிய உறவு வைத்திருந்தது. அம்பானி - அமி தாப் - ராஜீவ் கும்பல் [illegible] டையை ஏவி சந்திராசாமியைக் கைது செய்து துன்புறுத்தி தன் பக்கம் இழுத்துப் போட்டுக் கொண்டது. அதேபோல ஹாஜி மஸ்தான், சையது அஸ்ரஃப் ஆகியோரை யும் மிரட்டிப் பணியவைத்து வி.பி.சிங்குக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை தொடுக்கும் படி பணித்துள்ளது.

எதிர்க்கட்சிக்குள்ளாகவே பிளவு ஏற் பட்டு வி.பி.சிங் தலைமைக்குப் போட்டி யாக உள்ள சந்திரசேகர், சுப்பிரமணியசாமி ஆகியோர் சந்திராசாமிக்கு நெருக்கமான வர்களாகினர். சந்திராசாமி மூலம் வி.பி.சிங் மற்றும் ஹெக்டேக்கு எதிரான புகார்களுக் கான ஆதாரங்களை 'உருவாக்கி' வெளியிட் டனர். இப்போது வி.பி.சிங், அஜய்சிங் வெளிநாட்டு வங்கிக் கணக்கு பற்றிய புகார் கள் அனைத்தும் சந்திராசாமியைப் பின்ன ணியாகக் கொண்டு உருவாக்கப்படுகிறது.

தூயகிட்டீஸ் வங்கியின் இயக்குநர்க ளில் ஒருவரான திமோதி நீப் போதை மருந்து கடத்தல் கும்பலைச் சேர்ந்தவர் என்று ஒப்புக் கொண்டு கனடா நாட்டு சிறை யில் உள்ளார். இன்னொரு இயக்குநரான பிளேக்மேன் மீதும் இதே வழக்கு நடக்கிறது. இவர்களுக்கு நிதி ஆலோசகராக இருந்த தொழிலதிபர் ஆலன் இ. டேங்ஸ்தான் அஜய் சிங்கின் தூயகிட்டீஸ் வங்கி ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டதாக ராஜீவ் கும்பல் வெளி யிட்ட ஆவணங்களில் உள்ளது. தனது கையெழுத்து மோசடியாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது என்று இதுவரை சாட்சியம ளித்த டோங்ஸ் இப்போது தலைமறைவாகி விட்டார்.

இந்த வங்கியின் நிர்வாக இயக்குன ரான மெக்ளீன் சந்திராசாமியின் தொழில்க ளில் நெருக்கமானவர். சந்திராசாமியின் 'பக் தர்'களான ஜயர் மற்றும் ஜாம்பியா நாடுக ளின் அதிபர்கள் தாம் 31 கோடி ரூபாய் வி.பி.சிங்குக்கு லஞ்சம் கொடுத்ததாக தேர் தல் சமயத்தில் வாக்கு மூலம் தருவதற்கும் ஏற்பாடாகியுள்ளது.

போபார்ஸ் மற்றும் பிற ஆயுத பேரங்க ளில் சம்பந்தப்பட்ட போலி - பினாமி கம்பெ னிகளில் ஒன்றான ஏ.ஈ. சர்வீசஸ் என்பது பகாமாஸ் என்ற கரீபியன் - மத்திய அமெ ரிக்கத் தீவுகளில் உள்ளது. அதன் இயக்குநர் களில் ஒருவரான ஸ்டீபன் சாமோஸ் பிரபல மான போதைமருந்த மஃபியா கும்பலைச் சேர்ந்தவன். அதன் இன்னொரு இயக்குந ரான மைலஸ் ஸ்டோட் மத்திய மந்திரி சிதம் பரத்தின் குடும்பத்தைச் சேர்ந்த தூத்துக்குடி 'ஸ்பிக்' உட்பட சில நிறுவனங்களின் இயக் குநராக உள்ளார். இதேபோல இந்துஜா, அம்பாணி போன்ற ராஜீவின் நெருங்கிய கூட்டாளிகளும் பெரும் தரகு அதிகார முத லாளிகள் பகாமாஸ், பனாமா ஆகிய நாடுக ளில் உள்ள இரகசிய உலக வங்கிகள் மற்றும் நபர்களிடமிருந்து முதலீடு பெற்றுள்ளனர்.

இந்த விவரங்கள் அனைத்தையும் இணைத்துப் பார்க்கும் போது, எவ்வளவு ஆபத்தான தேச விரோத, மக்கள் விரோத சக்திகளும் நாடு சிக்கிக் கொண்டுள்ளது என் பது புரிகிறது. எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தா லும் இதற்குப் பலியாகும் என்பதும் நிச்சய மாகப் புரிகிறது. ■ ஆர்.கே.



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# ஒட்டகப்பந்தயம்: அரபியர்கள் குரூரம்.

கொம்புகளில் கூரான கத்தி பிணைக்கப்பட்ட காளைகளுடன் நிராயுதபாணிகளான அடிமைகளை மோதவிட்டு, இந்த "வீர" விளையாட்டில் குரூர இன்பம் கண்டனர் அக்கால மன்னர்கள். ஆனால் அதைவிடக் குரூரமான மனிதத் தன்மையற்ற விளையாட்டை நடத்தி இன்பம் காணுகின்றனர் காட்டுமிராண்டி அரபு ஷேக்குகள்.

அரபு பாலைவனங்களில் ஒட்டகங்களின் முதுகில் இளஞ்சிறுவர்களைக் கட்டி ஓடவிட்டு பந்தயம் வைப்பர். ஒட்டகங்கள் ஓடும்போது வலியாலும் பய பீதியாலும் இக்குழந்தைகள் அலறும். அந்த மரணக் கூச்சலினால் மிரண்டு ஒட்டகங்கள் வெறிபிடித்து ஓடுமாம். இதைக் கண்டு களிவெறியாட்ட ஷேக்குகள் மகிழ்ச்சியில் திளைப்பார்களாம்! இந்த வக்கிரமான விளையாட்டில் பல குழந்தைகள், ஒட்டகம் வெறிபிடித்து ஓடும்போது கீழே விழுந்து இறந்துள்ளன. பல குழந்தைகளின் கை கால் எலும்புகள் முறிந்து போயுள்ளன. அதைவிட அக்குழந்தைகள் மனரீதியில் கடுமையாக பாதிக்கப்பட்டு கிட்டதட்ட பைத்தியமாகிவிடுகின்றன. குதிரைப் பந்தய சூதாட்டம் போல, இக் காட்டுமிராண்டித்தனமான விளையாட்டிலும் எந்த ஒட்டகம் முதலில் வரும் என்று பந்தயப் பணம் கட்டுவதும், லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள பரிசுகளும் வழங்கப்படுகின்றன.



"ஒட்டகச் சவாரி இப்படித்தான்!" என்று காட்டுகிறான் மகேஷ்லால். இழைக்கப்பட்ட கொடுமையைக் கூட புரிந்துகொள்ள முடியாத இளங்குழந்தை.

இதில் கொடுமை என்னவென்றால், இக்குரூர விளையாட்டிற்குப் பயன்படுத்தப்படுவோரில் பெரும்பாலோர் இந்திய ஏழைக்குழந்தைகள். 4 வயதிலிருந்து 7 வயதுக்குட்பட்ட குழந்தைகள் இந்தியா, பாகிஸ்தான், வங்கதேசம், சூடான், சோமாலியா முதலான ஏழை நாடுகளிலிருந்து ஏஜெண்டுகள் மூலம் ரகசியமாக கொண்டு வரப்பட்டு இந்த வக்கிர விளையாட்டில் நிர்பந்தமாக பிணைக்கப்படுகிறார்கள். அண்மையில் துபாயிலிருந்து தம் குழந்தைகளுடன் தப்பி வந்த, ஹைதராபாத்தைச் சேர்ந்த அரிப்அலி, ஷில்லால் ஆகியோர் அளித்த பேட்டியின் மூலம் அதிர்ச்சியூட்டும் இக்கொடுமை வெளியே தெரிய வந்துள்ளது.

இந்திய ஏழைச் சிறுவர்கள் நூற்றுக்கணக்கில் ரகசியமாக அரபு நாடுகளுக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கு கொழுப்பேறிய அரசு ஷேக்குகளின் வக்கிரமான ஓரின உடலுறவுக்கு கீழ்த்தரமாக பயன்படுத்தப்பட்டு வருகிறார்கள்.

உடல் ஊனமுற்ற ஏழைக் குழந்தைகளைக் கடத்திச் சென்று அவர்களை மெக்கா, மெதீனா போன்ற இஸ்லாமிய புனித நகரங்களில் பிச்சையெடுக்க நிர்பந்தித்து, அந்த வருவாயையும் கொள்ளையடித்து கொழுக்கிறது இன்னுமொரு சதிகார கும்பல்.

மனிதத்தன்மையற்ற பாசிஸ்டுகளை அதிகாரத்திலிருந்து தூக்கியெறியாதவரை இந்த அவலம் தொடரவே செய்யும்; துபாய் பாலைவனத்தில் இந்திய ஏழைக் குழந்தைகளின் மரண ஓலம் ஒலித்துக் கொண்டுதான் இருக்கும்.

# புரட்சிகர இயக்கங்கள் மீது கர்நாடக அரசின் அடக்குமுறை

எங்கெல்லாம் புரட்சிகர இயக்கங்கள் பற்றிப் படருகிறதோ அங்கெல்லாம் காட்டுமிராண்டித்தனமான அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டு, அவற்றைக் கருவிலேயே அழிக்கத் துடிக்கின்றன மத்திய - மாநில அரசுகள். பீகார், ஆந்திராவைத் தொடர்ந்து இப்போது கர்நாடகாவில் புரட்சிகர இளைஞர்கள் மற்றும் விவசாய இயக்கச் செயல் வீரர்களைப் பிடித்துப் போய் மிருகத்தனமாக சித்திரவதை செய்து பொய்வழக்குப் போடுவதை கர்நாடக நக்சலைட்டு ஒழிப்பு போலீசுப் படை தீவிரமாக்கியுள்ளது.

கடந்த ஜூலை 6ந் தேதியன்று முற்போக்கு இளைஞர் மையம் (PYC) என்ற அமைப்பின் சௌரி, பாபு எனும் இரு செயல்வீரர்களைப் போலீசார் கைதுசெய்த இழுத்துச் சென்றனர். ஆனால் இன்றுவரை போலீசார் அவர்களைக் கோர்ட்டில் கொண்டுவந்து நிறுத்தவில்லை. அவர்கள் என்ன ஆனார்கள் என்றே இன்றுவரை தெரியவில்லை.

புரட்சிகர இயக்கத்தின் நண்பரான இளம் வழக்கறிஞர் நரசப்பா கடந்த ஆகஸ்ட் 3ந் தேதியன்று அவரது வீட்டிலிருந்து போலீசாரால் வலுக்கட்டாயமாக இழுத்துச் செல்லப்பட்டு மிருகத்தனமாக சித்திரவதை செய்யப்பட்டார். இவர் முற்போக்கு இளைஞர் மையத்தின் ரெய்ச்சூர் மாவட்டச் செயலாளர் மாரப்பாவுடன் சேர்ந்து வங்கிக் கொள்ளையில் ஈடுபட்டதாக போலீசார் பொய்வழக்கு சோடித்து சிறையிலடைத்துள்ளனர்.

கர்நாடக நீதித்துறையோ, பீற்றிக் கொள்ளப்படும் சிவில் உரிமைகளைக் காலில் போட்டு மிதித்து, வெளிப்படையாக காட்டுமிராண்டி போலீசாரின் பங்காளிகளாகச் செயல்படுகிறது. கைது செய்யப்பட்ட சௌரியும் பாபுவும் எங்கே என்று உயர்நீதிமன்றத்தில் "ஹோபியஸ் கார்பஸ்" மனு தாக்கல் செய்தபோது, நீதிபதிகள் அந்த மனுவை ஏற்று விசாரிக்க மறுத்துவிட்டனர். ஏறத்தாழ ஓராண்டுக்கு முன்பு முற்போக்கு இளைஞர் மையத்தின் மாநில செயலாளரும், தமிழாசிரியருமான வீரமணியை, மதுரை வங்கிக் கொள்ளையில் ஈடுபட்டதாகக் கூறி கைது செய்து தமிழக, கர்நாடக போலீசார் கூட்டாக அவரை துப்பாக்கியால் சுட்டும், மிருகத்தனமாக சித்திரைவதை செய்தும் நடை பிணமாக்கிய வதையின் கதையை தமிழக பத்திரிக்கைகள் அம்பலப்படுத்தின. அப்போது, கைது செய்யப்பட்ட வீரமணி எங்கே என்று "ஹேபியஸ் கார்பஸ்" மனுத்தாக்கல் செய்தபோதும் கர்நாடக உயர்நீதிமன்றம் அந்த மனுவை நிராகரித்தது.

முற்போக்கு இளைஞர் மையத்தின் தோழமை அமைப்பான "ப்ரகதிபார வித்யார்த்தி கேந்த்ரா" எனும் மாணவர் அமைப்பு, கர்நாடக அரசின் விவசாய விரோத யூகலிப்டஸ் பயிரிடும் திட்டத்தையும், கைகா அணுமின் திட்டத்தையும் எதிர்த்து ரெய்ச்சூர், பிதார் மாவட்டங்களில் பிரச்சார இயக்கங்களை நடத்தி வருகிறது. அமைதியான முறையில் நடைபெறும் இப்பிரச்சாரத்தைக் கூட சகித்துக் கொள்ளமால் இவ்வமைப்பின் செயல் வீரர்களைக் கைதுசெய்து, சித்திரவதை செய்து, பொய் வழக்கு போடுவதை கர்நாடக போலீசார் இப்போது தீவிரப்படுத்தியுள்ளனர்.

பொய் வழக்கு, சித்திரவதை, அடக்குமுறை மூலம் புரட்சிகர இயக்கங்களை ஒழித்துவிடலாம் என்று மனப்பால் குடிக்கிறது, காட்டுமிராண்டி கர்நாடக அரசு. ஆனால் அடக்குமுறைகளைக் கண்டு புரட்சிகர இயக்கங்கள் அடங்கியதும் இல்லை; அஞ்சியதுமில்லை - இது வரலாறு புகட்டும் பாடம்.



படிப்பகம்

www.padippakam.com

# வருமானவரி அதிகாரிகள் மீது வியாபாரிகள் -மஃபியா தாக்குதல்

நாடு முழுவதும் உள்ள வருமான வரி மற்றும் ரெவின்யூத் துறை அலுவலகங்களில் வேலைகள் அனைத்தும் முடங்கிக் கிடக்கின்றன. வழக்கமாக எதிரெதிராக நிற்கும் வருமான வரி ரெவின்யூத் துறையின் அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் நான்கு கூட்டமைப்புகளும் இணைந்து வேலைநிறுத்தம் செய்து வருகின்றன.

ஊதிய உயர்வு, போனஸ் அல்லது வேறுபிற உரிமைகள் கேட்டு அவர்கள் வேலைநிறுத்தம் செய்யவில்லை. பதுக்கல் மற்றும் வரி ஏய்ப்போருக்கு எதிராகச் சோதனையிடும் அதிகாரிகள், ஊழியர்களுக்கு ஆயுதப்படையினரின் பாதுகாப்புக் கோருகின்றனர். சட்ட அமலாக்க அதிகாரிகளுக்கு நீதிபதிக்குள்ள அதிகாரங்கள் கோருகின்றனர்.

கடந்த செப்டம்பர் 14ந் தேதி உத்திரப் பிரதேசம் முஜாபர் நகர் மற்றும் பிஜ்னூர் ஆகிய நகரங்களில் உள்ள வர்த்தகர்களைச் சோதனையிட வருமானவரி - ரெவின்யூ அதிகாரிகளின் குழு போனது. அதை ஆயுதந் தாங்கிய குண்டர் படை தாக்கியது; ஒரு ஆய்வாளர் உலை அடுப்பிலேயே வீசப்பட்டார்; இரண்டு பெண் ஊழியர்கள் நிர்வாணப்படுத்தி மானபங்கம் செய்யப்பட்டனர். மருத்துவமனையிலே கிடக்கும் அந்த வருமானவரி - ரெவின்யூ துறை சோதனைக் குழுவினர் இன்னமும் அதிர்ச்சியில் இருந்து மீளவில்லை.

ஒருவாரம் ஆகியும் வருமானவரி - ரெவின்யூத் துறை சோதனைக் குழுவைத் தாக்கியவர்கள் மீது நடவடிக்கை எடுக்காது போகவே, மத்திய நீதித்துறை துணை அமைச்சர் அஜித் குமார் பாஞ்ஜா மற்றும் ராஜீவ் கும்பலின் நெருங்கிய ஆலோசகரும் நிதித்துறை செயலருமான கோபி அரோராவிடம் முறையிட்டார்கள். கடும் நடவடிக்கை எடுக்கும்படி மாநில அரசுக்கு அவர்கள் எழுதினர். சோதனைக் குழுவினரைத் தாக்கியவர்களைக் கைது செய்து மிகமிகச் சாதாரணக் குற்றவழக்குகளைப் பதிவு செய்து குற்றவாளிகளை ஜாமீனில் விட்டு விட்டனர். வருமானவரி - ரெவின்யூத் துறை அதிகாரிகள், ஊழியர்களின் வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து ராஜீவ் கும்பலின் உளவுப் படையான சி.பி.ஐ. விசாரணைக்கு உத்திரவு போட்டுள்ளனர். ஆனால் தமக்குப் போதிய பாதுகாப்பும் அதிகாரமும் இல்லை என்று கூறி அதிகாரிகளும் ஊழியர்களும் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர்.

இந்தச் சம்பவத்தை இன்னும் கொஞ்சம் ஆழமாகப் போய் பார்த்தால் அதிர்ச்சியூட்டும் ஓர் உண்மை தெரியும். கள்ளச் சந்தை, கடத்தல், பதுக்கல் மூலம் ஏராளமான செல்வத்தைக் குவித்து வைத்துள்ள பெரும் வியாபாரிகள் ஆயுதந்தாங்கிய கிரிமினல் - மஃபியா கும்பலைத் தமது பாதுகாப்புக்கு அமர்த்திக் கொண்டுள்ளனர். மாவட்ட, மாநில உயர் அதிகாரிகள் மற்றும் மந்திரிகள் உட்பட அரசியல்வாதிகளின் அரவணைப்பிலே இருக்கிறார்கள்.

எனவேதான் குறிப்பாக முஜாபர் நகர் மற்றும் பிஜ்னூர் நகரங்களில் பெரும் வியாபாரிகளைச் சோதனையிட வருமான வரி - ரெவின்யூத் துறை அதிகாரிகளும் ஊழியர்களும் போனபோது அவர்களைத் தாக்கிய கிரிமினல் மஃபியா கும்பல் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. சோதனைக் குழு மீதான தாக்குதலையே சைதுல்ஜமான் மற்றும் ஹுகாம் சிங் ஆகிய இரு உ.பி. மந்திரிகளே திட்டமிட்டு அமுலாக்கியதோடு குற்றவாளிகளுக்குப் பாதுகாப்பும் கொடுத்து வருகின்றனர். முஜாபர் நகர் மாவட்ட நீதிபதியும் மாவட்ட போலீசு உயர் அதிகாரியுமே அவர்களோடு கூட்டுச் சேர்ந்து இந்த நடவடிக்கைக்கு உதவினர்; அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வருமான வரி - ரெவின்யூத் துறை அதிகாரிகளும் ஊழியர்களும் கோரி வருகின்றனர்.

★ சமூக விரோத, சட்டவிரோத முறைகளில் ஏராளமான செல்வத்தைக் குவித்துள்ள பெரும் வர்த்தகர்கள், வருமான வரி - ரெவின்யூத் துறை அதிகாரிகள், ஊழியர்களை பயங்கர பீதியூட்டி விரட்டுவதற்காகத் திட்டமிட்டு கிரிமினல் மஃபியா கும்பலை கூலிக்கு அமர்த்துகின்றனர்.

★ வர்த்தகச் சூதாடிகளாகிய சமூக விரோதிகள், கிரிமினல் - மஃபியா கும்பல்கள், அரசியல்வாதிகள், அதிகாரிகளிடையே நெருங்கிய கூட்டு உருவாகியுள்ளது.

★ சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நிர்வாகம் ஆகிய சகல துறைகளிலும் சமூக விரோத, கிரிமினல் மஃபியா கும்பல்களின் ஆதிக்கம் பரவி நிலைநாட்டப்படுகிறது.

சம்பவம் காட்டுகிறது.

ஏற்கனவே பரோடா, ராஜ்கோட், அகமதாபாத் ஆகிய குஜராத் மாநில நகரங்களிலும் இதே மாதிரி சோதனைக் குழுக்கள் தாக்கப்பட்டுள்ளன. அங்கே பாலியஸ்டர், சரிகை நூல் உட்பட பல கடத்தல் பொருட்களும் ஏராளமான செல்வங்களும் பதுக்கி வைத்துள்ள பெரும் வியாபாரிகளைச் சோதனையிட நூற்றுக்கும் மேலான அதிகாரிகளும் ஊழியர்களும் அனுப்பப்பட்டனர். சோதனைக் குழுக்களின் உறுப்பினர்கள், இலக்குகள், கால நேரம் ஆகியன முற்றிலும் இரகசியமாக இருந்தது.

ஆனால் இவை பற்றிய இரகசியங்களை உளவறிந்து, ஆயுதந்தாங்கிய குண்டர் படை திரட்டி, சோதனைக்குழுக்களைத் தாக்கி அடித்து விரட்டினர், பெரும் வியாபாரிகள். அவர்கள் போலீசு நிலையங்களில் தஞ்சமடைந்து பாதுகாப்புக் கோரியபோதும் விரட்டப்படவே தலைமறைவாகித் தப்பி ஓடினர்.

இந்த மாதிரியான தாக்குதல்கள் அதிகரித்து வருவதால் ஆயுதந்தாங்கிய தனிக்கா




வற் படையும், அதிகாரமும், குற்றவாளிகளுக்கு எதிரான விசாரணை - தண்டனையும் கோரி வருமானவரி ரெவின்யூத் துறை அதிகாரிகளும் ஊழியர்களும் போராடுகின்றனர். ஆனால் பெரும் வியாபாரிகள் கிரிமினல் மஃபியா கும்பல்களுடன் அரசு அதிகாரிகள் - மந்திரிகளும் கூட்டுச் சேர்ந்து திட்டமிட்டுத்தான் தாக்கியுள்ளனர். இதே சமூகவிரோத, சட்டவிரோத சக்திகளை வைத்துத்தான் இனிமேல் தேர்தல் வெற்றிகளைச் சாதிக்க முடியும் என்று ஓட்டுக்கட்சிகள், குறிப்பாக பாசிச ராஜீவ் கும்பலும், ஜனதா தளமும் போட்டி போட்டுக் கொண்டு இழுக்கின்றன.

சாதாரணப் பொதுமக்களுக்கு எதிராகவும், அரசியல் எதிரிகளுக்கு எதிராகவும் அவர்கள் பயன்படுத்திவந்த கிரிமினல் மஃபியா கும்பல்கள் இப்போது அரசு எந்திரத்தின் ஒரு பகுதிக்கு எதிராகவே ஏவிவிடப்படுகிறது. இரண்டு பக்கமும் கூர்மையான ஆயுதம், எதிராளியை மட்டுமல்ல, அதை ஏந்தியிருப்பவர்களையே பதம் பார்த்துவிடும் என்பது உண்மையாகிவிட்டது.

● பழநி



படிப்பகம்

www.padippakam.com

கம்மங்கஞ்சிக்காக நம்முடைய குழந்தைகள் தமது உயிரையே பலிகொடுக்கி றார்கள். ஒரு வேலைக்காக நமது சகோதரிகள் தமது கற்பையே பறிகொடுக் கும்படி நிர்பந்திக்கப்படுகிறார்கள். வறுமை ஒழிப்புக்காகவும் வேலைவாய்ப் புக்காகவும் பல ஆயிரம் கோடி ரூபாய் திட்டம் தீட்டி ஏப்பம் விடப்படும் இந்த நாட்டில் தான் இந்தக் கொடுமை, வேதனை, அக்கிரமம்!

★ ☆ ★

கடந்த செப்டம்பர் 19ந் தேதி. அருப்புக்கோட்டை அருகேயுள்ள ஆத்திப் பட்டி கிராமம். அந்த ஊர் 'கிராம தேவதை'க்கு மழை வேண்டி கம்மாங்கஞ்சி காய்ச்சி ஊற்றும் 'விழா' நடந்தது. கஞ்சியை வாங்கிக்கொள்வதற்காக ஒரு மைல் தூரத்தில் இருந்த ஸ்ரீ ராமானுஜர் பள்ளியிலிருந்து சத்துணவுத் தட்டுடன் சிறுவர் - சிறுமியரை அழைத்து வந்தனர். கம்மங்கஞ்சியும் வெங்காயமும் கொடுத்து நெடுஞ்சாலையின் ஓரம் மூன்று வரிசைகளில் குந்த வைத்தனர்.

அப்போது பரமக்குடியில் இருந்து அருப்புக்கோட்டைக்கு போய்க் கொண்டிருந்த பஸ் தறிகெட்டுப்போய், சாலையோரத்தில் கஞ்சி குடித்துக் கொண்டிருந்த சிறுவர் சிறுமியர் மீது ஏறி அரைத்துக் கொண்டு ஓடியது. அவர்களது இரத்தமும் கஞ்சியும் கலந்து சேறாகிப் போனது. 15 பேர் உயிரி ழந்தனர். ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் படுகாயமுடைந்தனர்.

# கம்மங்கஞ்சிக்கு உயிர்! வேலைக்குக் கற்பு!



காமுகனான சபாநாயகனை பதவிவிலகும்படி கோரும் பெண்கள் ஊர்வலம். (உள்ளே) சுனிதா ஹல்டாங்கர்.

இது ஏதோ, மழை வேண்டி கஞ்சி ஊற்றும் வழிபாட்டு விழா என்பதால் மாணவ மாணவியர் அனுப்பப்பட்டனர்; எதிர்பாராதவாறு விபத்து நடந்து விட்டது என்று காரணங் கூறப்படுகிறது. பள்ளி நேரத்தில் பாது காப்பற்ற சாலையோரத்தில் வைத்து கஞ்சி ஊற்றிக் குடிக்கச் சொன்னார்கள். தென்மாவட்டங்களில் ஏகபோகமாக உள்ள ஜெய விலாஸ் பஸ் முதலாளி யும், பள்ளியை நடத்தும் ராமலிங்கா மில் முதலாளியும் ஒரே சாதிக்காரர்கள்; தங்கள் மக்களைப் பறிகொடுத்த பெற்றோர்களிலும் பெரும்பான்மையினர் அந்த மில் தொழிலாளர்கள்; அந்த முதலாளிகளின் சாதியினர். இதை வைத்து இந்தக் கோரச்சம்பவத்துக்குப் பஞ்சாயத்துச் செய்து அமுக்கி விட்டனர். அரசும் இந்த அக்கிரமத்தைக் கண்டுகொள்ளவில்லை.

★ ☆ ★

சுனிதா ஹல்டாங்கர் படிப்பை முடித்துவிட்டு வேலை தேடிக் கொண்டிருந்த கோவாவைச் சேர்ந்த இளம்பெண். வேலை கேட்டுத் தன் விதவைத்தாயுடன் கோவா சபாநாயகர் தயானந்த் நார்வேகரை அணுகினார். மறுவாரமே அதாவது ஆகஸ்ட் முதல், சபாநாயகரின் செயலக எழுத்தாளராக நேரடி, நிரந்தர வேலை கிடைத்தது. அடுத்த விடுமுறை நாளில் தனது அறைக்குத் தனியே வரும்படி சபாநாயகர் சுனிதாவை அழைத்தார். சந்தேகப்

இரண்டு நாட்களுக்குப் பிறகு 'மக்கள் பிரதிநிதி'களின் சட்டமன்றப் பணியை முடித்துக் கொண்டு, மாலை அலுவலக நேரம் முடியும்போது சுனிதாவைத் தனியே தனது அறைக்கு வர வைத்தார், சபாநாயகர். கதவைத் தாளிட்டு விட்டு, உடைகளைக் களைந்துகொண்டு, கருத்தடை சாதனத்தைக் காட்டி, தனது இச்சைக்கு இணங்கும்படி நிர்பந்தித்தார். ஆடை ஆபரணங்க ளும், வீடும் கொடுத்துத் தனது வைப்பாட்டியாக வைத்துக் கொள்வதாக ஆசை வார்த்தைகள் கூறினார். சுனிதா கதறி அழுதபோது, "எந்த பெண்ணும் மறுத்ததில்லை; எல்லோருமே பணிந்து போகிறார்கள்; நீ மட்டும் ஏன் நாடக மாடுகிறாய். வேலையை விட்டு நீக்கிவிடுவேன்" என்று மிரட்டினார்.

இதற்கெல்லாம் சுனிதா மசியாது போகவே அடுத்த நாள் அவளும், அரசு ஊழியரான அவளுடைய சித்தியுமே வேலை இழந்தனர். பிறகு எதிர்க் கட்சித் தலைவரோடும் தாயோடும் போய் மாநில முதல்வரிடம் புகார் கூறியும் நடவடிக்கை எடுக்கவில்லை. காமவெறியன் சபாநாயகருக்கு காங்கிரசு முதல் வரும், தலைவியும் வக்காலத்து வாங்கி அறிக்கை விட்டனர். சபாநாயகர் தனது அடியாள் படையை ஏவி சுனிதாவை மிரட்டி, 10,000 ருபாயை அவரது கைகளில் திணித்து பத்திரிக்கையாளரிடம் மறுப்புச்செய்தி தரும்படி நிர்பந்தித்தார். மிரண்டு போன சுனிதா அதற்கும் ஒப்புக்கொண்டு அவ்வாறு செய்துவிட்டார். பிறகு பத்திரிக்கையாளரும், எதிர்க்கட்சியினரும், சுனிதா வின் உறவினர்களும் தைரியமூட்டவே மீண்டும் பகிரங்கமாகப் புகார் கூறத்து ணிந்தார்.

இம்மாதிரி விவகாரங்களில் ஒரு பெண்ணின் அவலநிலை யாவரும் அறிந்ததுதான்! சமூக அவமரியாதை அந்தக் காமுகனை விடப் பாதிக்கப்பட்ட பெண்ணுக்குத் தானே! அதைப் பயன்படுத்தி காங்கிரசு அரசு சபாநாயகருக்கு வக்காலத்து வாங்கி, ஆதரித்து வந்தது. பல்வேறு சமூக, அரசியல் அமைப்புக ளும், மாணவ மாணவியரும் கொதித்தெழுந்தனர். சபாநாயகர் மீது நடவ டிக்கை எடுக்கக்கோரி ஆர்ப்பாட்டம், ஊர்வலம் என்று போராட்டங்கள்

> "இன்று சுனிதா. நாளை எனக்கோ, எனது வகுப்புத் தோழிகளில் யாருக்காவதோ இந்த அவ மானம் நேரலாம்" என்று துடிக்கிறாள் 15 வயது பள்ளி மாணவி வசந்தி அஞ்சால்.

வெடித்தன. 15 வயது பள்ளி மாணவி வசந்தி அஞ்சால், 70 வயது சுதந்திரப் போராட்ட தியாகி விநாயக் படியார், பள்ளி ஆசிரியை பிரசாந்தி தல்பாங்கர் உட்பட பலர் சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டனர்.

இவ்வளவுக்கும் பிறகு காங்கிரசு அரசு பணிந்தது. சபாநாயகர் நார்வே கர் ராஜினாமா செய்தார். ஆனால் காங்கிரசுக்கு இது புதிதல்ல. வேலை இடமாற்றம் கோரிவந்த ஊழியரைக் கற்பழித்தார் ம.பி. எம்.எல்.ஏ; குடித்து விட்டு விமானப் பணிப்பெண் கையைப் பிடித்து இழுத்தார் மகாராஷ்டிரா துணை முதல்வர் ராமராவ் அதிக்; பல வக்கிர ஆபாச வெறியாட்டம் போடுகி றார் ஒரிசா முதல்வர் பட்நாயக்; கல்கத்தா விபச்சார விடுதியில் பிடிபட்டார் காங். எம்.பி. ரஷ்யா, வடகொரியா இளைஞர் மாநாடுகளுக்குப் போன இளைஞர் காங்கிரசார் ஆபாச வெறியாட்டம் நடத்தி அவமானப்படுத்தினர் இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்.

'வேலை வாய்ப்பு என்பது ஒரு பெரிய மோசடி வியாபாரம்; ஒவ்வொரு வேலைக்கும் ஒரு விலை வைத்திருக்கிறார்கள்; இப்போது கற்பை விலையா கக் கேட்கிறார்கள்' என்கிறார் கோவா முற்போக்கு மாணவர் சங்க (PSU)தலைவர். இல்லை நீண்ட நாட்களாகவே நமது சகோதரி கள் பலர் தமது கற்பை அடகு வைத்து வேலை தேடும்படி நிர்பந்திக்கப்படுகின்றனர். பல பல்கலைக் கழகப் பட்ட மேற்ப டிப்பு மற்றும் ஆராய்ச்சி மாணவியர் பேராசிரியர்கள் சிலரின் இச்சைக்குப் பணிந்து போகும்படி நிர்பந்திக்கப்படுகின்றனர்.

★ ☆ ★

சோற்றுக்கு உயிரையும், வேலைக்குக் கற்பையும் பறிகொடுப்பதை விட, இந்த அக்கிரமங்கள் கொடுமைக்குக் காரணமான எதிரிகளைத் துடைத்தெறி வோம், புரட்சிக்குத் தியாகம் செய்வோம்-அதுதான் நமது அடுத்த தலைமுறை யாவது மானத்தோடு வாழ வழிவகுக்கும். சுனிதா ஹல்டாங்கர், வசந்தி அஞ்சால் போன்று போராடத் துணியுங்கள்! இல்லையானால் உங்கள் உயி ரோடு மானமும் பறிபோகும்!



படிப்பகம்

www.padippakam.com

# குதர்க்கவாதி "சோ"வின் கொலைவெறி!

**பா**சிசக் கோமாளி "சோ" மீண்டும் புரட்சிகர இயக்கங்கள் மீது அவதூறு சேற்றை வாரியிறைத்து, "துக்ளக்" 15.9.89 இதழில் நக்சல்பாரிகளை ஆரம்பத்திலேயே நசுக்கவேண்டும் என்று தலையங்கமும் தீட்டியுள்ளார்.

அண்மைக் காலமாக ஆந்திராவில் நக்சல்பாரி பிரச்சினை ஆட்சியாளர்களைக் கிலிபிடிக்கச் செய்துள்ளது. ஆந்திராவில் பாசிச சன்னியாசி என்.டி.ஆரின் அரசு பயங்கரவாதத் தாக்குதலை எதிர்த்து, தற்காப்புக்காக நக்சல்பாரி புரட்சியாளர்கள் திருப்பித் தாக்குவதும், அரசு பயங்கரவாதிகளின் பாணியிலேயே பதிலடி கொடுப்பதும் அதிகரித்துள்ளன. மக்களிடமிருந்தும் ஏன், தனது கட்சியிடமிருந்தும் தனிமைப்பட்டுப் போயுள்ள என்.டி.ஆர். நக்சல்பாரி இயக்கத்திலிருந்து விலகிப்போன ஓடுகாலிகள், துரோகிகளை வைத்து சரணடைவு, சலுகை, நிதியுதவி என்று பேரங்கள் நடத்தி புரட்சியாளர்களை ஜனநாயக நீரோட்டத்துக்கு இழுத்து வந்துவிட்டதாக ஒருபுறம் நாடகமாடுகிறார். மறுபுறம், சிறப்பு அதிரடிப்படைகளைக் குவித்தும், மத்திய அரசின் உதவியோடு கூடுதல் ரிசர்வ் படையைக் குவித்தும் நக்சல்பாரிகளுக்கு எதிரான யுத்தத்தை நடத்தி வருகிறார்.

என்.டி.ஆரின் இந்த நடவடிக்கைகள் - நக்சல்பாரிகளுடன் பேரம் நடத்தி சரணடைவோருக்கு சலுகை, நிதியுதவி அளிப்பது முதலானவை மேலும் "வன்முறையை வளர்க்கும், தயவு தாட்சண்யமின்றி ஆரம்பத்திலேயே ஒடுக்கி முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும்; அனைத்து கட்சிகளும் இதை ஆதரிக்க வேண்டும்" என்று உபதேசிப்பதோடு, "நக்சல்பாரிகள் வன்முறையாளர்கள்; கொலைகாரர்கள்; சமுதாய நீதிக்காகப் போராடுபவர்கள் அல்ல; வாய்ப்பு கிடைத்தால் வசதியைத் தேடிக் கொண்டு லட்சியத்தைக் கைவிடுபவர்கள்; நிலப்பிரபுக்கள் - கோடீஸ்வரர்களைக் கொலை செய்வதோடு அப்பாவி மக்களையும் கொல்லுவதுதான் இவர்களது போராட்டத்தின் லட்சணம்!" என்று கீழ்தரமாக அவதூறுகளை வெறுப்போடு கக்கியிருக்கிறார் குதிர்க்கவாதி "சோ".

நக்சல்பாரிகள் மீது அவதூறும், ஆந்திர அரசுக்கு புத்திமதியும் கூறுமுன்வர், இருதரப்பு வாதங்களையும் தர்க்க ரீதியில் பரிசீலிக்கக்கூட சோ தயாராக இல்லை. சோவின் கூற்றுப்படியே நக்சல்பாரிகளுக்கு "ஆதரவு கிட்டுகிறது." இவர்களுக்கு "வக்காலத்து வாங்குகிறவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்." ஆனால் அவர்களின் வாதங்களையும், ஆந்திராவில் என்.டி.ஆர் அரசு கட்டவிழ்த்துவிட்டுள்ள அரசு பயங்கரவாதத்தைப் பற்றி முதலாளித்துவப் பத்திரிக்கைகளே கூறும் செய்திகளையும் முற்றாக இருட்டடிப்பு செய்துவிட்டு, தனது வாதங்களை மட்டும் அடுக்குகிறார், தொழில்முறை வக்கீலான சோ. இதுதான் உண்மைகளைத் தைரியமாகச் சொல்லும் அதிமேதாவி சோவின் பத்திரிக்கை தர்மம்!

கடந்த ஆகஸ்ட்டில் தமது கோரிக்கைகளை வலியுறுத்தி இரு போலீசுக்காரர்களை புரட்சியாளர்கள் கடத்திச் சென்றனர். ஆத்திரமடைந்த ஆந்திர போலீசார், ஆந்திர மாநில சிவில் உரிமைக் கழக (APCLC) பொதுச்செயலாளர் டாக்டர் பாலகோபாலைக் கடத்திச் சென்றனர். 'மக்கள் நண்பன்' என்ற இல்லாத அமைப்பின் பெயரைச் சொல்லி, அவர்கள் கடத்திச் சென்றதாகக் கதைகட்டி, நான்கு நாட்களுக்கு மறைத்து வைத்திருந்து, பின்னர் விடுவித்தது ஆந்திர போலீசு.

அன்றாட தினசரி பத்திரிக்கைகளைப் படிக்கும் துக்ளக் வாசகர்களுக்குக் கூட இந்த உண்மைகள் தெரியும். ஆனால் குதர்க்கவாதி சோ இந்த உண்மைகளை திட்டமிட்டே இருட்டடிப்பு செய்ததோடு, தனது வாசகர்களையும் முட்டாளாக்க முயற்சிக்கிறார். நக்சல்பாரி புரட்சிகர இயக்கத்துக்கு எதிரான யுத்தத்தில் தாங்கள் தோல்வி கண்டுள்ள அதேசமயம், இவ்வியக்கத்துக்கு மேலும்மேலும் மக்கள் ஆதரவும் பங்கேற்பும் பெருகுவதைக் கண்டு, புரட்சியாளர்களை நரவேட்டையாடும் உயர் போலீஸ் அதிகாரிகள் கூட, [illegible] சம்பந்தப்பட்ட பிரச்சினை அல்ல; சமூக - அரசியல் பிரச்சினை" என்று வெளிப்படையாகவே கூறுகின்றனர். ஆனால் சோவின் காமாலைக் கண்களுக்கு நக்சல்பாரிகள் மட்டுமல்ல; எல்லா புரட்சிகர ஜனநாயக இயக்கத்தினரும் வன்முறையாளர்களாக, கொலைகாரர்களாகத் தெரிகின்றனர்.

"சமுதாய நீதிக்காகப் போராடும் நக்சலைட்டுகள் அரசின் பேரத்தை ஏற்று, தங்களுக்கு வசதியைத் தேடிக் கொண்டு போராட்டத்தைக் கைவிட்டுவிட்டதாக அண்டப்புளுகு ஒன்றை அவிழ்த்துவிட்டு புரட்சியாளர்களைக் கொச்சைப்படுத்தி இருக்கிறார் சோ. புரட்சிகர இயக்கங்களை அழிக்க முடியாமல் தோல்வியடையும் அரசு பயங்கரவாதிகள், உளரீதியான யுத்தத்தைத் தொடுப்பதை வாடிக்கையாக கொண்டுள்ளனர். அதன்படி, பாசிச என்.டி.ஆர். அரசும் நக்சல்பாரி இயக்கத்திலிருந்து விலகி சொந்த வாழ்க்கைக்குத் திரும்பியவர்கள், ஓடுகாலிகள், துரோகிகள் முதலானோரைப் பிடித்து பேரம் நடத்தி, சலுகைகள் கொடுத்து சரணடைந்துவிட்டதாக, நக்சல்பாரி இயக்கம் பலவீனமடைந்துவிட்டதாக ஏய்க்கிறது. இப்படிச் சீரழிந்து போனவர்களின் எண்ணிக்கை புரட்சிகர இயக்கத்தில் அரை சதவீதத்தினர்கூட இல்லை. இவர்களைக் காட்டித்தான் பேரத்தை ஏற்று லட்சியத்தைக் கைவிட்டுவிட்டதாக கொச்சைப் படுத்துகிறார் சோ. ஆனால் இவரால் ஏற்றிப்போற்றப்படும் நாடாளுமன்ற ஜனநாயகத்தின் தூண்களான ஓட்டுக்கட்சி அரசியல்வாதிகள் தான் எந்த லட்சியமுமின்றி, தம்மைத் தேர்ந்தெடுத்த மக்களுக்கே துரோகமிழைத்துவிட்டு, கட்சி மாறி கூண்டோடு "குதிரை வியாபார"த்தில் ஈடுபடுவதுமாக சீரழிந்து கிடக்கின்றனர். இந்த லட்ச



ணத்தில் 'யோக்கிய சிகாமணி' சோ, புரட்சியாளர்களின் லட்சியத்தைப் பற்றி கேள்வி கேட்கக் கிளம்பியிருப்பது நல்ல வேடிக்கை!

நாட்டில் ஏதோ சட்டத்தின் ஆட்சி நடப்பது போல நம்பச்சொல்கிறார் சோ. ஏறத்தாழ 9 ஆண்டுகளுக்கு முன் வட ஆற்காடு - தர்மபுரி மாவட்டங்களில் பாசிச எம்.ஜி.ஆர். - தேவாரம் கும்பல் புரட்சியாளர்களை நரவேட்டையாடிய போது "போலீசார் சட்டப் புத்தகத்தையா படித்துக் கொண்டிருப்பார்கள்?" என்று பாசிச எம்.ஜி.ஆர். கொக்கரித்தபோது, சோ அதை ஆதரித்தார். "போலீசார் வாழ்க!" என்று தலையங்கம் தீட்டி நரவேட்டையாடிய போலீசாருக்கு நன்றி கூறினார். அப்போது சிவில் உரிமைக்கான மக்கள் கழகம் (PUCL) போலீசாரின் அத்துமீறலை அம்பலப்படுத்தி எதிர்த்தபோது, அந்த அமைப்பில் உறுப்பினராக இருந்த சோ, அதிலிருந்து விலகியதோடு, இது நக்சல்பாரிகளின் அமைப்பு என்று சாடவும் செய்தார். பின்னர், ஈராண்டுகளுக்கு முன் தனது 'துக்ளக்' இதழில் 'விருச்சிகம்' என்ற பெயரில் போலீஸ் அதிகாரியை வைத்து மீண்டும் நக்சல்பாரிகள் மீது அவதூறு செய்தார். நக்சல்பாரி புரட்சி இயக்கத்துக்கு எதிரான அவரது அவதூறும் காழ்ப்புணர்வும் இன்னமும் தொடர்கிறது. ஆனால் நக்சல்பாரி புரட்சி இயக்கம் அழிந்துவிடவில்லை. மேலும் பல்கிப் பெருகி வளர்ந்து முன்னேறிக் கொண்டிருக்கிறது. அந்த பீதியிலிலும் ஆத்திரத்திலும் தான் இப்போது அறிவை இழந்து வெறியைக் கக்குகிறார் சோ.

**சோ எந்தக் கட்சியை ஆதரிக்கிறார் என்று புரியாமல் அதன் வாசகர்கள் பல நேரங்களில் குழம்பிப் போவதுண்டு. அவர் எந்தக் கட்சியையும் ஆதரிப்பவர் அல்ல; அவர் நரவேட்டையாடும் போலீசுக் கட்சிக்காரர் என்பதை இப்போது மீண்டும் நிரூபித்துக் காட்டியுள்ளார்.**

● மணி



படிப்பகம்

www.padippakam.com

# கோட்டுசூட்டு ...
# பகற்கொள்ளையர்கள்

**தி**ருச்சி - பொன்மலை இரயில்வே பணிமனையில் தொழிலாளர் பிரச்சாரக் குழு என்ற அமைப்பு சமீப காலமாகச் செயல்பட்டு வருகிறது. தொழிற்சங்கங்களின் துரோகத்தனங்களை அம்பலப்படுத்தியும், பல்வேறு அரசியல் மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளில், பாட்டாளி வர்க்கப் பார்வையில் சரியான நிலைப்பாடுகளை விளக்கியும் தொழிலாளர் மத்தியில் பிரச்சாரம் செய்து வருகிறது. அதிகார வர்க்கத்தின் அட்டூழியங்களையும் ஊழல் கொள்ளையையும் தொழிலாளர்களிடம் தோலுரித்துக் காட்டி வருகிறது.

அவ்வகையில் தொ.பி. குழுவின் பொறியில் சிக்கிய முதல் ஊழல் பெருச்சாளி - பொன்மலை பணிமனையின் உதவி தலைமை அதிகாரியான (Dy.C.E.) வரதராஜு என்பவர். இவர் ரோஹிணி எலக்ட்ரிகல்ஸ் தனியார் நிறுவனத்தைக் கூட்டணி சேர்த்துக் கொண்டு காண்ட்ராக்ட் விட்டுக் கொள்ளையடித்தார். (இக்கூட்டுக் கொள்ளையைப் பற்றிய செய்தி ஏற்கனவே புதிய ஜனநாயகம் இதழில் வெளிவந்துள்ளது).

இக்கொள்ளையை அம்பலப்படுத்தி தொ.பி. குழு பிரசுரம் வெளியிட்டதும் கதிகலங்கிப் போன வரதராஜு தான் சார்ந்திருக்கும் சாதி சங்கத் தலைமையை நாடி தனக்கு ஆதரவாக நிற்கும்படி வேண்டிக் கொண்டார். அந்த அதிமேதாவிகளோ இந்த ஊழல் பெருச்சாளிக்கு ஆதரவு தருவதாக கருதிக் கொண்டு சாதிசங்கத்தின் சார்பில் ஒரு பிரசுரம் வெளியிட்டனர். அதில் எங்கள் சாதிக்காரர் மட்டும்தானா? உங்கள் சாதியினரின் ஊழல் கொள்ளைகளையும் வெளிக்கொணர்ந்து அம்பலப்படுத்துவோம் என்று எச்சரிக்கை விடுத்து, வரதராஜின் கொள்ளைக்கு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தனர்.

பிள்ளையார் பிடிக்க குரங்கான பீதியில் தன் சாதிக்காரர்களை உதறிவிட்டு, தனது வர்க்கத்தைச் சேர்ந்தவர்களின் காலில் விழுந்து காரியத்தைச் சாதிக்க முன்றார், அதிகாரி வரதராஜு. அதன்படி இப்பணிமனையின் தலைமை நிர்வாகிகள் தொ.பி. குழு அங்கீகரிக்கப்பட்ட அமைப்பு அல்ல (பதிவு செய்யப்படாதது) என்கிற முறையில் இப்பிரசுரத்தை அனாமதேயக் கடுதாசியாக்கி மொத்த ஊழல் கொள்ளையையும் அப்படியே அமுக்கிவிட்டனர். இருப்பினும் வரதராஜு தொழிலாளர்கள் மத்தியில் அம்பலப்பட்டுப் போனதாலும், அக்கம் பக்கத்தில் கேட்பவர்களுக்கு பதில்சொல்லும் வகையில் குற்றச்சாட்டை மறுத்துவிட்டதாக 'பாவ்லா' காட்டவும் ஒரு ஏற்பாடு செய்தார்.

அதன்படி ரோஹிணி எலக்ட்ரிகல்ஸ் நிறுவனத்தின் மூலம் தொ.பி. குழுவின் பிரசுரத்தை வெளியிட்ட அச்சகத்தாருக்கு ரூ.75 ஆயிரம் நஷ்டஈடு கேட்டு வக்கீல் நோட்டீசு அனுப்பினார். இதற்கு பதில் நடவடிக்கையாக அச்சகத்தார், பிரசுரம் அச்சிட்டுக் கொடுப்பது தமது உரிமை என்றும் தன் மீது வழக்கு தொடர முயற்சிப்பதன் மூலம் தனது சமூக அந்தஸ்தையும் தொழிலையும் பாதித்துவிட்டது என்று கூறி ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாய் நஷ்டஈடு கேட்டு எதிர் நோட்டீசு அனுப்பினார். வரதராஜு கும்பல் அதன்பிறகு மேல் வாயையும் கீழ்வாயையும் பொத்திக் கொண்டது.

HERS/DSL என்ற பணிமனைப் பிரிவில் இன்னுமொரு திருட்டு அண்மையில் நடந்து மீண்டும் அதிகாரிகளின் கொள்ளை அம்பலமாகியுள்ளது. காப்பர்செக்மண்ட் எனப்படும் செப்புத் தகடுகளை மூட்டையாகக் கட்டி அதிகாரிகள் குப்பைத் தொட்டியில் பதுக்கிவைத்துவிட்டு, நள்ளிரவில் நிர்வாகத்தின் ஜீப்பிலேயே வந்து அதைச் சுருட்டிக் கொண்டு போவது வாடிக்கையாக நடந்துவரும் ஒரு கொள்ளையாகும். அண்மையில் எந்த குப்பைத் தொட்டியில் மறைத்து வைத்தோம் என்று இருட்டில் தெரியாமல், ஜீப்பின் ஹெட்லைட்டைப் போட்டுத் தேடிப் பார்த்துவிட்டு, கண்டுபிடிக்க முடியாமல் விட்டுச் சென்றுவிட்டனர். மறுநாள் குப்பையை அள்ளுவதற்காக வந்த கலாசி தொழிலாளிகள் மூட்டையைக் கண்டு பிடித்து சம்பந்தப்பட்ட செக்ஷன் அதிகாரியிடம் முறையீடு செய்தனர். வெங்கட்ராமன் என்ற அந்த அதிகாரி மூட்டையைத் தொழிலாளர்கள் முன்னிலையில் பிரித்துப் பார்த்துவிட்டு சுமார் ஒரு லட்ச ரூபாய் மதிப்புள்ள அந்தத் தகடுகளை இருக்கவேண்டிய இடத்தில் சத்தம் போடாமல் கொண்டுபோய் வைத்துவிட்டார்.

இந்தத் திருட்டு முயற்சியை அறிந்ததும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் பெயர்களைப் பட்டியலிட்டு தொ.பி. குழு பிரசுரம் வெளியிட்டு அம்பலப்படுத்தியது. பிரசுரத்தில் தொ.பி. குழுவின் அமைப்பாளர் தோழர் ஆர்.முருகானந்தம் அவர்களின் முகவரியும் வெளிப்படையாக இருந்தால், வேறு வழியில்லாமல் நிர்வாகம் இதை விசாரிக்க வேண்டியதாயிற்று.

அடுத்த சில நாட்களில் பர்சனல் டிபார்ட்மெண்டின் தலைமை அதிகாரியான சாமிக்கண்ணு (WPO) தோழர் முருகானந்தத்தை தனது அறைக்கு அழைத்தார். அறையில் வேறு மூன்று அதிகாரிகளும் இருந்தனர். தோழரிடம் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட கடிதம் ஒன்றைக் கொடுத்தார் அந்த அதிகாரி. அதில் இயந்திரவியல் பிரிவு உதவி தலைமை அதிகாரி ராமநாதனுக்கு எதிராக பிரசுரம் வெளியிட்டது நீங்கள்தானா? என்று மட்டும் எழுதப்பட்டு தலைமை நிர்வாகியின் கையொப்பம் இடப்பட்டிருந்தது.

பிறகு, பியூனை அழைத்து வேறு யாரையும் உள்ளே அனுமதிக்க வேண்டாம் என்று கூறிவிட்டு தோழரிடம் நயவஞ்சகமாக தாஜா செய்தும் மிரட்டியும் விசாரணையைத் தொடங்கினர். நடந்த உரையாடல் இதுதான்.

**சாமிக்கண்ணு:** பிரசுரத்தில் இருக்கும் முகவரி உங்களுடையதுதானா?

**தோழர் முருகானந்தம்:** ஆமாம், என்னுடையதுதான்!

**சாமி:** அப்படின்னா, நோட்டீஸ் வெளியிட்டது நீங்கதானா?


**தோழர்:** ஆமாம், நான்தான்.

**சாமி:** நீங்க எதுக்காக இந்த வேலையெல்லாம் எடுத்துச் செய்யணும்?

**தோழர்:** நமது ஆலையின் பொதுச் சொத்து கொள்ளையிடப்படுகிறது என்று தெரியவந்த போது இதுபோன்ற ஊழல்களைக் கண்டுபிடிக்க தொழிலாளர்கள் உதவிசெய்ய வேண்டும் என்ற நிர்வாகத்தின் பொதுவான வேண்டுகோளின் அடிப்படையிலும், நமது ஆலை மற்றும் நாட்டின் நலனில் அக்கறை கொண்டவன் என்ற முறையிலும் என்னுடைய கடமை என்று கருதித்தான் இதைச் செய்தேன்.

**சாமி:** நாங்களும் இந்த நாட்டு நலனில் அக்கறை கொண்டவங்க தாங்க (நமட்டுச் சிரிப்பு ஒன்றை உதிர்க்கிறார்).

**தோழர்:** அப்படியிருந்தால், ஏன் நோட்டீசு அடிச்சேன்னு கேட்டிருக்க மாட்டீங்க.






படிப்பகம்

www.padippakam.com

சாமி: ஒரு சம்பவம் உங்க கவனத்துக்கு வந்தபோது எங்களுக்குத் தெரியப்படுத்தி இருக்கலாமே. நாங்க அதுக்காகத் தானே இருக்கோம். நீங்க ஏன் நோட்டீசு அடிக்கணும்?

தோழர்: மேலதிகாரிங்க இதுபோல ஊழல் அதிகாரிங்கள தண்டிக்கவே மாட்டாங்க. இதுல எனக்கு ஏற்கனவே அனுபவம் இருக்கு. நான் முன்பு ஒரு முறை, லோகோ டிபார்ட்மெண்ட் உயரதிகாரியான பாலுச்சாமி என்பவர் இதே போல குப்பை வண்டியில் ஆலையின் பொருட்களை ஏற்றிச் செல்ல முயன்ற போது கையும் களவுமாகப் பிடித்துக் கொடுத்தேன். அதிகாரிகள் என்னை மிரட்டி அனுப்பினார்களே தவிர பாலுச்சாமியின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அந்த அனுபவத்தில் தான், தொழிலாளிகளுக்கு இக்கொள்ளையைத் தெரிவிப்பதே சரியானதென்று நோட்டீசு வெளியிட்டேன்.

சாமி: அதுசரி, உங்களுக்கு ஏன் இந்த வீண் வேலைகள்? நான் இந்த நோட்டீசை அடிக்கவில்லையென்று நீங்கள் சொல்லிவிடலாமே.

தோழர்: நான் செய்திருக்கும்போது அது எனக்கு சம்பந்தம் இல்லைன்னு எப்படிங்க சொல்ல முடியும்? நீங்க மற்ற தொழிற்சங்கத்துக்காரங்களும் மனசுல வச்சு சிக்கிட்டு நாங்களும் அப்படித்தான் இருப்போம்னு எங்களப் பத்தி தப்புக்கணக்கு போடறீங்க. மொதல்ல அந்தக் கருத்த மாத்திக்கங்க!

சாமி: இந்த நோட்டீசுல எழுதியிருக்கீங்களே, அதுக்கு என்ன ஆதாரம் இருக்கு?

தோழர்: பிரசுரத்திலேயே போட்டிருக்கோம். இன்னும் பொதுக் கூட்டத்தில் சில தகவல்களை வெளியிடறதா இருக்கோம். அதைவெச்சு நீங்க நடவடிக்கை எடுக்கலாமே!

சாமி: பொதுக் கூட்டத்தில பேசறத எல்லாம் ஆதாரமா எடுத்துக்க முடியாது. இன்னிக்கி பேசுவீங்க, அப்புறமா கேட்டா பேசலைன்னு சொல்லீங்க!

தோழர்: நாங்க மத்தவங்க மாதிரி இல்லை. பொதுக் கூட்டத்திலே பேசினோம்னு சொன்னா, எங்க, எப்ப கேட்டாலும் அதையேதான் சொல்வோம். மேலும் வேறுசில ஆதாரங்கள எங்களது தற்காப்புக்காக வெச்சிருப்போம். அதை உங்களுக்கு சொல்லவேண்டிய அவசியமில்லை. தேவை ஏற்படுகிற இடத்துல வெளியிடுவோம்.

சாமி: அப்போ... நோட்டீசை நீங்கதான் வெளியிட்டிருக்கீங்க. ஆனா, இப்போ கூட நீங்க சம்பந்தமில்லைன்னு சொல்லலாம். யோசிங்க..

தோழர்: இதுல யோசிக்கிறதுக்கு ஒண்ணுமில்லைங்க. நீங்க எத்தனைமுறை கேட்டாலும் இதே பதில்தான்.

இவ்வாறு நடந்த விசாரணை முடிந்து வெளியே வந்ததும் அங்கேயிருந்த வெல்பேர் ஆபீசர் வெங்கட்ராமன் (இவர் வேறு வெங்கட்ராமன்) தோழரிடம் விசாரணையைத் துவக்கினார்.

வெங்கட் :(நாற்காலியில் சாய்ந்து கொண்டு அலட்சியமாகப் பார்த்தவாறு) நீங்கதான் அந்த முருகானந்தமா?

தோழர்: ஆமாம், நான்தான்.

வெங்கட் :இப்படி நோட்டீசு போட்டதுக்கு உங்களுக்கு சார்ஜ்ஷீட் கொடுத்தா என்ன செய்வீங்க?

தோழர்: பதில் கொடுப்பேன்.

வெங்கட் :பதிலை ஏத்துக்காம சஸ்பெண்ட் செய்தா என்ன செய்வீங்க?

தோழர்: அதை எதிர்த்து கோர்ட்டுக்குப் போவேன்.

வெங்கட் :அப்புறம் உங்கள வேலை நீக்கம் செய்தா...?

தோழர்: எங்களுக்கு 'அ'னா போடும் போதே 'ஃ'ன்னா வரும்னு தெரியும். தொழிலாளர்களின் நலனுக்காக நாங்க அதையெல்லாம் சந்திக்கத் தயாராகத் தான் இருக்கோம். ஒண்ண மட்டும் மனசுல வெச்சுக்குங்க. தொழிலாளர் பிரச்சாரக் குழு என்பது தனி நபர் இல்லை. அது ஒரு இயக்கம். என்னை மட்டும் வெளியேத்திட்டா தொழிலாளர் பிரச்சாரக் குழுவின் குரல் அடங்கிவிடும்ன்னு கணக்கு போடாதீங்க.

வெங்கட் :உங்களுக்கு அப்படி ஒண்ணு ஆச்சுன்னா உங்க பின்னாடி எத்தனை பேர் நிப்பாங்க?

தோழர்: எத்தனை பேர்னு ஆள் கணக்கு பார்க்கிறது எங்களோட வழக்கமில்ல. அந்த விஷயம் சரியா தப்பான்னுதான் பார்ப்போம். சரியானதுக்காக தொடர்ந்து போராடுவோம்; விளைவுகளைச் சந்திப்போம்.

- என்று கூறிவிட்டு தோழர் முருகானந்தம் வெளியே வந்துவிட்டார்.

கோட்டு, சூட்டு போட்டுக் கொண்டு குளுகுளு அறையில் குடியிருக்கும் வெள்ளை யானைதான் அதிகார வர்க்கம். தொழிலாளர்களின் உழைப்பைத் தின்று திணவெடுத்து திரியும் இக்கூட்டம் தெரு பொறுக்கிகளைவிட கேவலமாக பகற் கொள்ளையிலும் ஈடுபடும் என்பதுதான் மேற்படி உதாரணம். தேச நலன், தொழிலாளர் நலன், தொழிற்சாலை மேம்பாடு என்பதெல்லாம் கூட்டுக் கொள்ளையை மறைப்பதற்காக, இக்கும்பல் மேடையில் முழங்கும் பகட்டு வார்த்தைகள். ஒதுங்கி நிற்கும் தொழிலாளர்கள், ஒன்றுதிரண்டு தோலுரித்தால், இந்த அதிகார வர்க்கத்தின் கொள்கைகள் இன்னும் பல அம்பலத்திற்கு வரும்

— தொழிலாளர் பிரச்சாரக்குழு,
பொன்மலை, திருச்சி.

## வக்கற்ற ஆட்சியாளர்கள்! வஞ்சிக்கப்பட்ட தொழிலாளர்கள்!

மூடிய பஞ்சாலைகளில் சிலவற்றைத் திறக்க உத்திரவிட்ட கையோடு, தொழிலாளர்களின் துயர் துடைக்கும் அரசு என்று தன்னை மார் தட்டிக் கொள்கிறது கருணாநிதி அரசு. ஆனால் கடந்த ஐந்தரை ஆண்டு காலமாக ராணிப் பேட்டை சிப்காட் தொழிற்பேட்டையில் உள்ள அப்பர் இந்தியா பேரிங் என்ற நிறுவனம் மூடப் பட்டு கிடக்கிறது. இதில் பணியாற்றிய 300க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வீதியில் வீசியெறிப் பட்டு குடும்பத்தோடு பட்டினிச் சாவுக்குத் தள்ளப் பட்டுள்ளனர்.

கடந்த 13.3.84 அன்று இரவு 1.00 மணிக்கு திடீரென நிர்வாகம் கதவடைப்பு செய்வதாக அறிவித்தது. தொழிலாளர்கள் நிர்வாகத்துடன் ஒத்துழைக்க மறுப்பதாக தொழிலாளர்கள் மீது வீண்பழி சுமத்தி, கதவடைப்புக்கு காரணம் கூறியது. மேலும் பிப்ரவரி மாதச் சம்பளத்தையும் தொழிலாளர்களுக்கு வழங்க மறுத்தது.

நிர்வாகத்தின் சட்டவிரோதக் கதவடைப்பை எதிர்த்தும், ஆலையை மீண்டும் திறக்கக் கோரியும் சட்ட ரீதியான அனைத்து முயற்சிகளையும் தொழிலாளர்கள் மேற்கொண்டும்கூட இன்று வரை எந்தப் பலனும் ஏற்படவில்லை. தொழிலாளர் நல அதிகாரி நிர்வாகத்தை 20 முறைக்கும் மேலாக பேச்சுவார்த்தைக்கு அழைத்தும்கூட, நிர்வாகம் 2 முறை மட்டுமே வந்து கையெழுத்துப் போட்டு சென்றது. ஆலையின் முதலாளி கல்கத்தாவில் இருப்பதால் தற்போது வர இயலாது என்று நிர்வாகத்தினர் கூறினர். நிர்வாகத்தின் தரப்பில் யாரும் வராததைக் குறிப்பிட்டு தொழிலாளர் நல அதிகாரி அரசுக்குத் தெரிவித்தும்கூட இன்றுவரை அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஆலையில் சி.ஐ.டி.யு. சங்கம் இருந்தும், தொகுதி எம்.எல்.ஏ.வாக 'மார்க்சிஸ்டு' சுந்தரம் இருந்தும் கூட ஒரு மண்ணும் செய்யவில்லை. அன்றைய தொழிலாளர் நல அமைச்சர் இராகவானந்தம் முதல் இன்றைய அமைச்சர் பொன்முத்துராமலிங்கம் வரை பலரிடம் பலமுறை நேரில் முறையிட்டும் கூட இதுவரை ஆலை திறக்கப்படவில்லை. பட்டினியால் பரிதவிக்கும் தொழிலாளர் குடும்பங்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நிவாரணத் தொகை வழங்க தொழிலாளர் நல அதிகாரி சிபாரிசு செய்துள்ள போதிலும் இன்றுவரை அரசு ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

தொழிலாளர் குடும்பங்கள் பட்டினியால் பரிதவிக்கும்போது ஆலையைத் திறக்கவோ அல்லது தாமே ஏற்று நடத்தவோ அரசுக்கு எள்ளளவும் அக்கறை இல்லை. அதேசமயம் பீர் ஆலையை ஏற்று நடத்துவதில் தான் நாட்டம் கொண்டுள்ளது. இதுவும் போதாதென்று இப்போது மாநிலமெங்கும் 'வீடியோ பார்லர்'களைத் திறப்பதில் குறியாக உள்ளது. மக்களை போதையில் ஆழ்த்தி அதிகாரத்தைச் சுவைக்கும் இந்த தமிழினப் பிழைப்புவாதிகளிடம் நாம் வேறு எதை எதிர்பார்க்க முடியும்?

— தகவல்: அரிராமன்

படிப்பகம்

# சேற்றிலிருந்து புதைகுழியை நோக்கி...

www.padippakam.com

"அந்தச் சனியன் பிடித்த நாட்டிலிருந்து நாங்கள் ஒருவழியாகத் தப்பிவிட்டோம். சுதந்திரக் காற்றை இப்போதுதான் முதன் முறையாகச் சுவாசிக்கிறோம். இனி நாங்கள் இங்கேயே செத்து மடிவோமே தவிர, எங்களை விரட்டினாலும் எங்கள் நாட்டுக்கு ஒருக்காலும் திரும்பிச் செல்ல மாட்டோம்!" - கையில் மதுப்புட்டியுடன் மகிழ்ச்சியுடன் பேட்டியளிக்கின்றனர் தப்பியோடி வந்த அந்த தம்பதியினர்.

இவர்கள் தமது சொந்த நாட்டில் நிலவும் கலவரம் - போராட்டத்தால் பாதிக்கப்பட்டு அண்டை நாட்டுக்குத் தப்பியோடி வந்த அகதிகள் அல்ல; போலிக் கம்யூனிஸ்டுகளால் 'சோசலிச' நாடாகச் சித்தரிக்கப்படும் கிழக்கு ஜெர்மனியிலிருந்து, ஏகாதிபத்திய நாடான மேற்கு ஜெர்மனிக்கு ஓடும் 'ஜனநாயக விரும்பிகள்' தான் இவர்கள். ஒருவரல்ல, இருவரல்ல; குடும்பம் குடும்பமாக பல பத்தாயிரக்கணக்கான கிழக்கு ஜெர்மனி நாட்டினர், கடந்த ஆகஸ்ட் - செப்டம்பர் மாதங்களில் மேற்கு ஜெர்மனிக்குக் குடிபெயர்ந்துள்ளனர். கிழக்கு ஜெர்மனியிலிருந்து அண்டை நாடான மேற்கு ஜெர்மனிக்கு நேரடியாகச் செல்ல முடியாதபடி தடைகள் உள்ளதால், சுற்றுலாப் பயணிகள் என்ற பெயரில் ஹங்கேரி நாட்டுக்கு வந்து பின்னர் அங்கிருந்து ஆஸ்திரியா வழியாகத் தப்பியோடுகின்றனர். வரலாற்றில் இதுவரை காணாத அளவுக்கு கடந்த செப். 11ந் தேதியன்று மட்டும் ஒரே நாளில் 16,000 பேர் மே.ஜெர்மனிக்கு ஓடி வந்துள்ளனர். இரண்டாம் உலகப் போருக்குப் பின் மனிதகுலம் இதுவரை காணாத மாபெரும் குடிபெயரும் நிகழ்ச்சி இது என்று வரலாற்றாசிரியர் மூக்கில் விரலை வைக்கின்றனர்.

தாம் பிறந்து வளர்ந்த மண்ணை - அதிலும் 'சோசலிச' பூமியை விட்டு கிழக்கு ஜெர்மனி மக்கள் முதலாளித்துவ உலகை நோக்கி ஓடக்காரணம் என்ன?

### போலி சோசலிச ஆட்சியில் நெருக்கடியும் சீரழிவும்


இரண்டாம் உலகப் போரில் ஜெர்மானிய பாசிசம் முறியடிக்கப்பட்டதும், பாசிசத்தை எதிர்த்து கம்யூனிஸ்டுகள் தலைமையில் வீரப்போர் புரிந்த செக்கோஸ்லாவியா, யூகோஸ்லாவியா, பல்கேரியா, ருமேனியா, ஹங்கேரி, போலந்து ஆகிய கிழக்கு ஐரோப்பிய நாடுகள் விடுதலையடைந்தன. ஜெர்மனியின் கிழக்குப் பகுதியில் கம்யூனிஸ்டுகளும் மேற்கு பகுதியில் ஏகாதிபத்தியவாதிகளும் அதிகாரத்தைக் கைப்பற்றினர். அதிலிருந்து ஜெர்மனி இரண்டாகப் பிளவுபட்டு கிழக்கு, மேற்கு ஜெர்மனி என இரு நாடுகளாயிற்று. விடுதலையடைந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகள், கம்யூனிஸ்டுகளின் தலைமையில் சோசலிசப் பாதையில் முன்னேறத் தொடங்கின. ரஷியாவைத் தொடர்ந்து ஐரோப்பாவில் சோசலிசத்தின் வெற்றியானது உலகம் முழுவதுமுள்ள ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உத்வேகம் அளிப்பதாக விளங்கியது.

ஆனால் ரஷியாவில் தோழர் ஸ்டாலின் மறைவுக்குப் பின்னர் முதலாளித்துவப் பாதையாளர்களான குருச்சேவ் - பிரஷ்னேவ் கும்பல் கட்சியையும் ஆட்சியையும் கைப்பற்றி, சோசலிசத்தைச் சீரழித்து அதிகார வர்க்க முதலாளித்துவத்தை நிறுவியதோடு சமூக ஏகாதிபத்தியமாக முன்னேறி கிழக்கு ஐரோப்பிய சோசலிச நாடுகளை ரஷியாவின் தொங்குசதை நாடுகளாகச் சீரழித்தனர். சோசலிசப் பாதையில் அடியெடுத்து வைத்த சில ஆண்டுகளுக்குள்ளேயே கிழக்கு ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் ரஷிய பாணியில் போலி சோசலிச - அதிகார வர்க்க முதலாளித்துவப் பாதையில் சென்று சீரழிந்தன.

சோசலிசக் கூட்டுப் பண்ணையை உடைத்து அதனிடத்தில் அதிகார வர்க்க முதலாளித்துவத்தை நிறுவியதன் விளைவாக விரைவிலேயே கிழக்கு ஐரோப்பிய போலி சோசலிச நாடுகளில் பொருளாதார நெருக்கடி முற்றத் தொடங்கியது. விலைவாசியும், வேலையின்மையும் அதிகரித்தது. ரொட்டிக்கும் வெண்ணெய்க்கும் ரேஷன் கடைகளில் மக்கள் நீண்ட வரிசையில் காத்து நிற்குமளவுக்கு உணவுப் பஞ்சம் தலைவிரித்தாடியது. அன்னியக் கடன்சுமை பூதாகாரமாகப் பெருகியதன் விளைவாக பொருளாதாரமே நிலைகுலைந்து போனது.

### தடையும் தண்டனையும்

அல்லற்படும் மக்களோ போலிக் கம்யூனிஸ்டுகளின் கேடுகெட்ட ஆட்சியை எதிர்த்துக் கலகம் செய்யத் தொடங்கினர். சிவப்புச் சாயம் வெளுத்துப் போன இந்நாடுகளின் ஆட்சியாளர்களோ போராடும் மக்களைப் பாசிச முறையில் அடக்கி ஒடுக்கினர். போலி சோசலிச ஆட்சியின் மீது வெறுப்படைந்த மக்களில் சிலர் முதலாளித்துவ நாடுகளுக்குத் தப்பியோடவும் செய்தனர். இதைத் தடுக்கும் பொருட்டு இந்நாடுகளது எல்லையில் மின்சார வேலி அமைக்கப்பட்டு, தப்பியோடத் தடையும் தண்டனையும் விதிக்கப்பட்டது. குறிப்பாக கிழக்கு ஜெர்மனி - மேற்கு ஜெர்மனி எல்லையில் பழங்கால மன்னர் ஆட்சியைப் போல மதிற்சுவரும், ராணுவ ரோந்தும் மின்சார வேலியும் அமைக்கப்பட்டு தப்பிக்க முயற்சிப்பவர்களை சுட்டுக் கொல்லவும் கிழக்கு ஜெர்மனியின் சர்வாதிகாரிகள் ஆணையிட்டனர்.




இருப்பினும் சிலர் கிழக்கு ஜெர்மனியிலிருந்து தப்பியோட முயற்சிப்பதும், சுட்டுக் கொல்லப்படுவதும் வெளியுலகுக்கு அதிகம் தெரியாமல் தொடர்ந்து வந்தது.

ஆனால் இன்றோ ஏகாதிபத்தியவாதிகள் குதூகலிக்கும் வண்ணம் பல பத்தாயிரக் கணக்கில் கி.ஜெர்மனி மக்கள் மே.ஜெர்மனிக்கு தப்பியோடுகின்றனர். இதில் வேடிக்கை என்னவென்றால் இன்னொரு போலி சோசலிச நாடான ஹங்கேரி, தப்பியோடி வருபவர்களுக்கு ஆதரவும் அடைக்கலமும் கொடுத்து ஆஸ்திரியா வழியே மே.ஜெர்மனிக்குச் செல்ல உதவியும் செய்கிறது.

### முதலாளித்துவ நரகத்தை நோக்கி நாலுகால் பாய்ச்சல்

ஹங்கேரியின் இந்த திடீர் மாற்றத்துக்கு காரணம் இல்லாமல் இல்லை. தீராத பொருளாதார நெருக்கடியாலும் அன்னியக் கடன் சுமையாலும் உணவுப் பஞ்சத்தாலும் நீண்டகாலமாகவே ஹங்கேரி சிக்கித்தவித்தது. போலந்து நாட்டைப் போலவே ஹங்கேரியிலும் போலிக் கம்யூனிஸ்டுகளின் அதிகார வர்க்க ஆட்சிக்கு எதிராக பல கட்சி ஆட்சி முறை, சுதந்திரம் - ஜனநாயகத்தைக் கோரி முதலாளித்துவவாதிகள் கலகம் செய்யத் துவங்கினர். இதே நேரத்தில் ரஷியாவில் பகிரங்கமாக முதலாளித்துவத்தை அரங்கேற்றும் 'சீர்திருத்தச் செம்மல்' கோர்ப்பசேவின் கிளாஸ் நாஸ்ட், பெரஸ்த்ரோய்கா கொள்கை அறிவிப்பும், அதைத் தொடர்ந்து போலந்து நாட்டில் போலிக் கம்யூனிஸ்டு ஆட்சியாளர்கள் முதலாளித்துவ ஜனநாயகத்தைக் கோரும் ''சாலிடாரிடி'' கலகக்காரர்களுடன் சமரசம் செய்துகொண்டு அப்பட்டமாக முதலாளித்துவ ஆட்சிமுறைக்கு மாறியிருப்பதும் ஹங்கேரியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. கடந்த மே நாளன்று ஹங்கேரியில் போலிக் கம்யூனிஸ்ட் ஆட்சியாளர்கள் வழக்கமாக அரசு முறைப்படி நடத்திய அணிவகுப்பு ஊர்வலத்தை விட பல கட்சி ஆட்சிமுறையைக் கோரும் முதலாளித்துவவாதிகள் நடத்திய ஊர்வலத்தில் பல லட்சக்கணக்கான மக்கள் திரண்டு ஆர்ப்பாட்டம் செய்தனர். பீதியடைந்த ஹங்கேரியின் போலிக் கம்யூனிஸ்ட் ஆட்சியாளர்கள், தாங்களும் கோர்பசேவ் வழியைப் பின்பற்றி முதலாளித்துவ சீர்திருத்தங்களை அறிவித்து அமுலாக்கத் தொடங்கினர்.

அதன்படி ஹங்கேரியில் அடுத்த ஆண்டில் பல கட்சி ஜனநாயகத் தேர்தல் நடைபெறவுள்ளது. தமது நாட்டின் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க, தமது நாட்டில் வந்து முதலீடு செய்யுமாறு ஏகாதிபத்திய நாடுகளை ஹங்கேரியின் ஆட்சியாளர்கள் அறை



படிப்பகம்

கூவி அழைக்கின்றனர். மரணப் படுக்கையில் கிடக்கும் தமது ஏகாதிபத்திய பொருளாதாரத்துக்குப் புத்துயிர் அளித்த மகிழ்ச்சியில் பல ஏகாதிபத்திய நாடுகள் இப்போது ஹங்கேரியில் முதலீடு செய்துள்ளன. குறிப்பாக மே.ஜெர்மனி 300க்கும் மேற்பட்ட துறைகளில் நேரடியாக முதலீடு செய்து ஹங்கேரியைச் சூறையாடக் கிளம்பியுள்ளது.

சுருக்கமாகச் சொன்னால் கிழக்கு ஐரோப்பிய போலி சோசலிச நாடுகளில் போலந்துக்கு போட்டியாக முதலாளித்துவ நாடாக சீரழிவதை நோக்கி ஹங்கேரி நாலு கால் பாய்ச்சலில் முன்னேறிக் கொண்டிருக்கிறது. கம்யூனிச வாடை கொஞ்சம் நஞ்சம் இருந்தால் கூட ஏகாதிபத்தியவாதிகள் சகித்துக் கொள்ள மாட்டார்களே என்று இப்போது அரசு கட்டிடங்களிலும் பொது இடங்களிலும் உள்ள சிவப்பு நட்சத்திர சின்னத்தைக் கூட ஹங்கேரிய ஆட்சியாளர்கள் அகற்றி விட்டனர். இவை எல்லாவற்றுக்கும் மேலாக, ஹங்கேரி - ஆஸ்திரிய எல்லையில் உள்ள மின்சார வேலியையும், ராணுவக் கண்காணிப்பையும் நீக்கி, 'இரும்புத் திரை'யைக் கிழித்து கிழக்கு ஐரோப்பிய மக்கள் மேற்கத்திய முதலாளித்துவ நாடுகளுக்குத் தப்பியோடவும் அனுமதித்து ஆதரித்தனர்.

## வேலி தாண்டிய வெள்ளாடுகள்

கடந்த மே - ஜுன் மாதங்களில் ஹங்கேரி மேற்கொண்ட இந்நடவடிக்கையைத் தொடர்ந்து இதுவரை 65,000க்கும் மேற்பட்ட கி.ஜெர்மனி மக்களும், இதுதவிர ஆயிரக்கணக்கில் கிழக்கு ஐரோப்பிய நாடுகளது மக்களும் மே.ஜெர்மனிக்கு குடிபெயர்ந்துள்ளனர். தப்பியோடி வருபவர்களுக்கு அகதிகள் முகாம் அமைத்து ஆதரவளித்து அண்டை நாடான ஆஸ்திரியாவுக்கு வழியனுப்பி வைக்கிறது ஹங்கேரி அரசு. ஆஸ்திரியாவில், அரசு மட்டுமின்றி அந்நாட்டு மக்களும் ஓடிவரும் 'ஜனநாயக விரும்பி'களை எதிர்கொண்டு அழைத்து கைகுலுக்கி மே.ஜெர்மனிக்கு வழியனுப்பி வைக்கின்றனர். நெடுஞ்சாலைகளில் ... பாறிவிட்டுச் செல்ல உதவிகள் செய்கின்றனர். ஆஸ்திரிய எல்லையில் உள்ள பஸ்ஸாவ் எனும் மே.ஜெர்மனி நகரம் தப்பியோடி வந்தவர்களால் நிரம்பி வழிகிறது. கையில் மதுக்கோப்பையுடன், ஓடி வந்தவர்களின் மகிழ்ச்சி ஆரவாரம் அந்நகரெங்கும் எதிரொலிக்கிறது. கார்கள், ரயில், பேருந்து, சைக்கிள், ஏன் கால்நடையாகவும் கூட பல கி.ஜெர்மனி நாட்டினர் ஹங்கேரிக்கு வந்து குவிகின்றனர். ''கி.ஜெர்மனியின் சொகுசான வீட்டைவிட மே.ஜெர்மனியின் கட்டாந்தரை எவ்வளவோ சுகமானது' என்று பத்திரிக்கைகளுக்குப் பேட்டியளிக்கிறார் தப்பியோடி வந்த ஒரு இளைஞர்.

## போலி சோசலிஸ்டுகளிடையே லடாய்!

கி.ஜெர்மனியின் ஆட்சியாளர்கள் தமது நாட்டின் 40வது குடியரசு தினத்தைக் கொண்டாடப் போகும் நேரத்தில் நேர்ந்த இந்த அவமானத்தால் ஆத்திரமடைந்து ஹங்கேரியைச் சாடுகின்றனர். ''ஹங்கேரி துரோகமிழைத்து விட்டது; 1969ல் இரு நாடுகளும் போட்டுக் கொண்ட ஒப்பந்தத்தை மீறியும், சர்வதேச மரபுகளை மீறியும் சட்டவிரோதமாக கி.ஜெர்மனி மக்கள் தப்பியோட உதவி செய்கிறது. அனாவசியமாக கி.ஜெர்மனியின் உள் விவகாரங்களில் தலையிடுகிறது. திட்டமிட்டே மனிதர்களைக் கடத்தும் ஹங்கேரியின் கீழ்த்தரமான நடவடிக்கைகளை வெட்கமின்றி மே.ஜெர்மனி ஆதரிக்கிறது. தமது அன்னியக் கடன்சுமையைக் குறைக்க உதவும் மே.ஜெர்மனியுடன் கூட்டுச் சேர்ந்து ஹங்கேரி சதி செய்கிறது'' என்று சாடுகின்றனர் கி.ஜெர்மனியின் ஆட்சியாளர்கள். ''நாங்கள் மனிதாபிமான அடிப்படையில்தான் இவற்றைச் செய்கிறோம். நீங்கள் சீர்திருத்தங்களைச் செய்யாவிடில் தனிமைப்பட்டுப் போவீர்கள்; எங்களது முன்னுதாரணத்தைப் பின்பற்றுங்கள்'' என்று கி.ஜெர்மனியின் ஆட்சியாளர்களை ... தமது 'தோழர்'களுக்கு புத்திமதி கூறுகிறார் ஹங்கேரியின் அதிபர். சுருக்கமாகச் சொன்னால், போலி சோசலிச முகமூடியணிந்து அதிகாரவர்க்கமுதலாளித்துவ ஆட்சிமுறையைப் பின்பற்றுவதா அல்லது அப்பட்டமான தனியார் முதலாளித்துவ ஆட்சிமுறைக்குத் தாவுவதா என்பதுதான் இன்று கிழக்கு ஐரோப்பிய போலி சோசலிச ஆட்சியாளர்கள் முன்னுள்ள பிரச்சினையாகி விட்டது.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து ஓடிவரும் மக்களை வரவேற்று அவர்களுக்கு குடியுரிமையும் வழங்கி ஆதரிக்கிறது மே.ஜெர்மனி. ஓடிவரும் அகதிகள் சாதாரண உடலுழைப்பாளிகள் அல்ல; தொழில்நுட்ப ரீதியில் முன்னேறிய மூளை உழைப்பாளிகள். எனவே தான் தமது நாட்டுக்குக் கிடைத்த அரிய பொக்கிஷமாக கருதி இந்த ''மூளை வடிகால்'' வெள்ளத்தை மே.ஜெர்மனி ஆதரிக்கிறது. இதோடு, 'ஜனநாயக விரும்பிகளை' ஆதரிக்கும் மாபெரும் மனிதாபிமானியாகக் காட்டிக் கொள்ளவும், ஜெர்மானியர்களை ஐக்கியப்படுத்தும் மாவீரனாகக் காட்டிக்கொண்டு, தேசிய வெறியூட்டி வரப்போகும் தேர்தலில் ஓட்டுப் பொறுக்கவும் கிடைத்த இந்த வாய்ப்பை எண்ணி மே.ஜெர்மனி அதிபர் கோலும், அவரது ஆளும் கட்சியும் பூரித்துப் போகின்றனர்.



ஆஸ்திரிய எல்லையில் முட்கம்பி வேலி அகற்றப்பட்டதும் மே.ஜெர்மனிக்குப் பாய்ந்தோடும் கி.ஜெர்மனி மக்கள்.

## போலிக் கம்யூனிசத்தின் படுதோல்வி!

கி.ஜெர்மனி மக்கள் ஓடுகாலிகளாக மாறி முதலாளித்துவ உலகை நோக்கி குடிபெயர்வதற்கு அந்நாட்டு ஆட்சியாளர்கள் கம்யூனிசத்தைத் துறந்து, திரிபுவாதிகளாகச் சீரழிந்து ஓடுகாலிகளானதே மூலகாரணம். அவர்கள் ரஷியாவின் திருத்தல்வாதப் பாதையில் சென்று, அதிகார வர்க்க ஆட்சியின் கீழ் நாட்டைச் சீரழித்து மக்களை ஒடுக்கியதோடு, வர்க்கப் போராட்டத்தையும் கைவிட்டனர். குறிப்பாக கிறித்துவ திருச்சபைகள் மூலமாக நுழைந்த முதலாளித்துவ நச்சுக் கருத்துகள் - சிந்தனைகள், கலாச்சாரத்திற்கு எதிராக சித்தாந்த ரீதியாகக் கூட போராடாமல் வர்க்க சமரசத்தை மேற்கொண்டனர். உள்ளுக்குள்ளேயே மெள்ள மெள்ள மக்களைச் சீரழித்து வந்த முதலாளித்துவச் சிந்தனைகளும், போலிக் கம்யூனிஸ்டுகளின் கேடுகெட்ட ஆட்சியின் நெருக்கடியும் இன்று கி.ஜெர்மனி மக்களை போலி சோசலிச சேற்றிலிருந்து முதலாளித்துவப் புதைகுழிக்குத் தள்ளியுள்ளது. அதிகார வர்க்க ஆட்சிமுறையை முறியடித்து புரட்சியின் மூலம் புதிய சோசலிச ஆட்சியை நிறுவுவதற்குப் பதில் அம்மக்கள் முதலாளித்துவச் சீரழிவை நோக்கி வேகமாக ஓடுகிறார்கள்.

சமுதாய வரலாற்றில் இது மாபெரும் பின்னேற்றம்தான். இதற்கான பொறுப்பை கிழக்கு ஐரோப்பிய போலிக் கம்யூனிஸ்டுகள்தான் ஏற்க வேண்டும். முதலாளித்துவவாதிகள் பறையடிப்பது போல இது கம்யூனிசத்தின் தோல்வியைக் குறிக்கவில்லை. கேடுகெட்ட போலிக் கம்யூனிஸ்டுகளின் - பல வண்ணத் திரிபுவாதிகளின் படுதோல்வியைத் தான் தெளிவாக நிரூபித்துள்ளது. ●

ஆசிரியரும் வெளியிடுபவரும்: எஸ்.மதியழகன், 21, பாலாஜிசிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.
அச்சிடுபவர்: எம்.கே.சாமி, பிரேம் பிரஸ், 107-ஏ, பெரியார் பாதை (மேற்கு), சென்னை - 600 094.

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

இதோ, இங்கு சொகுசு மெத்தைக ளில் ஆழ்ந்த நித்திரையில் இருப்பவர்கள், டில்லி மத்திய அரசு ஊழியர்கள். தூங்கும் இடம் தங்கும் விடுதியில் அவர்கள் வேலை செய்யும் அரசு அலுவலகம். கடந்த ஆகஸ்ட் மாதம் 30ந் தேதி எதிர்க்கட்சிகள் அழைப்பு விடுத்திருந்த 'பாரத பந்த்'தை பாசிச ராஜீவ் அரசு இப்படிதான் 'முறியடித்தது'! ஒரு மெத்தை அல்ல 9 மெத்தை வேண்டுமானா லும் கிடைக்கும். ஆகஸ்ட் 30ந் தேதி மட்டும் வேலைக்கு வர வேண்டும் என்று மத்திய அரசு ஊழியர்களின் முகவாய்கட்டையை பிடித்து கெஞ்சியது மத்திய அரசு.

எதிர்க்கட்சிகளுக்கு மக்கள் மத்தியில் ஆதரவு இல்லை என்பதை நிரூபித்துவிட வேண்டும் என்று கேவலமாக எதிர்ப்பு நடவ டிக்கைகளை முடுக்கிவிட்டது. வேலைக்கு வருபவர்களுக்கு தலைக்கு உபரியாக 100 ரூபாய் செலவு செய்யப் போவதாக ஆசை காட்டியது. இலவச உணவு, இலவச 'வீடி யோ', இலவச போக்குவரத்து என அனைத் தும் இலவசம் என்று கடை விரித்தது. 30ந் தேதியே அரசு ஊழியர்களை வீட்டுக்கு விடாமல் அப்படியே அமுக்கி பிடித்துக் கொண்டது. அப்படியும் வர மறுத்தவர்க ளுக்கு பணி நீக்கம் உட்பட அனைத்து நடவ டிக்கையும் எடுக்கப்படும் என்று மிரட்டல் நோட்டீஸ் விட்டது.

இதோ, இவர்கள் ஆகஸ்ட் 30ந் தேதி பந்தில் பங்கெடுத்துக் கொண்ட தொண்டர் கள்; எதிர்க்கட்சித் தலைவர்கள் தங்கள் போராட்டத்திற்கு முன்னறிவிப்பு செய்து விட்டு, ''ஜனநாயக'' முறையில் ராஜீவ் அர சுக்கு தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தவர்கள்.

இருந்தும் இவர்களை போலீசு விடவில்லை. சுற்றிவளைத்து தாக்கியது. தடியடி நடத்தி மண்டையைப் பிளந்தது. தனது கூட்டணி கட்சிகளின் குண்டர்களை உசுப்பிவிட்டு கல வரங்களில் இறங்கியது காங்கிரசு அரசு. எதிர்க்கட்சிகள் ஆளும் பல மாநிலங்களில் பல அப்பாவிகளின் உயிரைக் குடித்தது, பாசிச ராஜீவ் அரசு.



சுய ராஜ்ஜியம் எனது மூக்கில் நாறுகி றது என்றார், மாபெரும் தேசதுரோகி காந்தி. அவரது வாரிசு ராஜீவ் காந்திக்கு போராட் டம் என்றாலே மூக்கிலும் நாறுகிறது, வாயி லும் நாறுகிறது, கையும் நீளுகிறது. இந்த ஜன நாயக பம்மாத்துக்காரர்களுக்கு நாட் ஒன்று சேர்ந்து ஆப்பறைவது எப்போது?

# இதுதான் இன்றைய இந்தியா






படிப்பகம்